


உள்நாட்டு இலக்கிய மூலாதாரங்கள்

இலக்கிய வகை	உதாரணங்கள்
பாளி நூல்கள்	தீபவம்சம்,மகாவம்சம்,சூளவம்சம்,சமந்தபாசாதிக,வம்சத்தப்பகாசினி,அட்டகதா வம்சம்
சிங்கள நூல்கள்	மகாபோதிவம்சம்,தூபவம்சம்,தாதுவம்சம்,பூஜாவலிய,ராஜாவலிய,தலதாசிரித்த, சத்தர்மரத்னாவலிய
தமிழ் நூல்கள்	சரசோதி மாலை,யாழ்ப்பாண வைபவமாலை,ரகுவம்சம், தட்சணகைலாய புராணம்,வையாபாடல்,கைலாயமாலை
தூது காவியங்கள்	மயூர சந்தேசய(மயில் விடு தூது),திசர சந்தேசய,கோகில சந்தேசய(குயில் விடு தூது),செலலிகினி சந்தேசய
போர்க் காவியங்கள்	சீதாவாக்க சட்டன,இங்கிரிசி சட்டன,கொன்ஸ்தந்தினு சட்டன
புகழ் காவியம்	பெரும்பா சிரித்த

S.THIVAKARAN www.ikeda.lk

உள்நாட்டு இலக்கிய மூலாதாரங்கள்

நூல்கள்	எழுதியவர்
தீபவம்சம்	பல பிக்குகள்
மகாவம்சம்	மகாநாம தேரர்
சூளவம்சம் 1	தர்மகீர்த்தி தேரர்
போதி வம்சம்	உபதிஸ்ஸ தேரர்
பூஜாவலிய	புத்தபுத்திர தேரர்
சத்தர்மலங்கார	ஜயபாகு தேரர்
சமந்தபாசாதிக	புத்தகோச தேரர்
நிகாயசங்கிரஹய	ஜெயபாகு தேவரக்ஷிதர்
மயூர சந்தேசய	கவீஸ்வரன்
ரகுவம்சம்	அரசகேசரிப் புலவர்
யாழ்ப்பாண வைபவமாலை	மயில்வாகனப் புலவர்
தட்சிண கைலாய புராணம்	செகராச சேகரன்
கைலாய மாலை	முத்துராச கவிராசர்

இராசரட்டைக் கால வரலாற்றை அறிய உதவும் நூல்கள்	தீபவம்சம், மகாவம்சம், போதிவம்சம், தூபவம்சம், தாதுவம்சம், சத்தர்மலங்கார, பூஜாவலிய, சூளவம்சம்
கம்பளை முதல் கோட்டைக் காலம் வரையான வரலாற்றை அறிய உதவும் நூல்கள்	நிகாயசங்கிரஹய, ராஜாவலிய, மயூர சந்தேசய, திசர சந்தேசய, கோகில சந்தேசய
கோட்டை முதல் கண்டிக் காலம் வரையான வரலாற்றை அறிய உதவும் நூல்கள்	பரவி சந்தேசய, செலலிகினி சந்தேசய, ஹன்ச சந்தேசய, பெரகும்பா சிரித்த, சீதாவாக்க சட்டன, இங்கிரிசி சட்டன

இலக்கிய மூலாதாரங்களைப் பயன்படுத்தும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்

- நூல் எழுதப்பட்ட காலம்
- நூல் ஆசிரியர்
- நூல் ஆசிரியரின் நோக்கம்
- நூலுக்கான தகவல் திரட்டப்பட்ட விதம்

இலக்கிய மூலாதாரங்களின் பயன்கள்

- வரலாற்றுக் காலங்களை ஒழுங்கு முறைப்படுத்த முடியும்.
- வெவ்வேறு காலகட்டங்களின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள முடியும்.
- ஒரு நூலில் கூறப்பட்டுள்ள தகவல்களை இன்னொரு நூலின் மூலம் உறுதிப்படுத்த உதவும்.
- ஒரு நாட்டின் வெளிநாட்டு உறவுகள் பற்றி அறிந்து கொள்வதற்கு உதவும்.

S. JESINTHAN www.ikeou.lk

வெளிநாட்டு இலக்கிய மூலாதாரம்



இலங்கை வரலாறு பற்றிக் குறிப்பிட்ட வெளிநாட்டவர்கள்

பாகியன்
இபின்பதூதா
ரிபைரோ
பிலிப்ஸ் பல்டியஸ்
றொபேட் நொக்ஸ்

} இலங்கைக்கு வருகை தந்து நேரடி அனுபவங்களைப் பெற்றவர்கள்

அரிஸ்டோட்டில்
மெகஸ்தனிஸ்
ஒனெசி கிறீட்டஸ்
பிளினி
தொலமி
ஹியுங்சாங்
பர்னாவோ குவைரோஸ்

} இலங்கைக்கு வருகை தராது, இலங்கைக்கு வந்தவர்களிடம் இருந்து தகவல்களைப் பெற்றவர்கள்

தாய் நாடு	வெளிநாட்டவர்	எழுதிய ஆக்கம்	மூலாதார வகை
கிரேக்கம்	அரிஸ்டோட்டில்	டீமுண்டோ	கிரேக்க மூலாதாரம்
கிரேக்கம்	மெகஸ்தனிஸ்	இண்டிகா	கிரேக்க மூலாதாரம்
கிரேக்கம்	தொலமி	பூகோள சாஸ்திரப் பிரவேசம்	உரோம மூலாதாரம்
கிரேக்கம்	ஓனிசி கிறீட்டஸ்	அறிக்கை	கிரேக்க மூலாதாரம்
கிரேக்கம்	கொஸ்மஸ்	டொபோகிறபியா கிறிஸ்டியானா	கிரேக்க மூலாதாரம்
உரோம்	பிளினி	நெச்சுராலிஸ் ஹிஸ்டோரியா	உரோம மூலாதாரம்
உரோம்	புரோகோபியபஸ்	பாரசீக யுத்தம்	உரோம மூலாதாரம்
சீனா	பாகியன்	புத்தக ஆவணங்கள்	சீன மூலாதாரம்
சீனா	ஹியுங்சாங்	மேற்குலகின் ஆவணங்கள்	சீன மூலாதாரம்
போர்த்துக்கல்	குவைரோஸ்	இலங்கை மீட்பு	போர்த்துக்கல் மூலாதாரம்
போர்த்துக்கல்	ரிபைரோ	ரிபைரோவின் இலங்கை வரலாறு	போர்த்துக்கல் இலக்கியம்
அரேபியா	இபின்பதூதா	ஜேனல்	அரபு இலக்கியம்
ஒல்லாந்து	பிலிப்ஸ்பல்டியஸ்	போல்டியசின் இலங்கை வரலாறு	ஒல்லாந்த இலக்கியம்
பிரித்தானியா	றொபேட்நொக்ஸ்	அன்றைய இலங்கை	ஆங்கிலேய இலக்கியம்

தொல்பொருள் மூலாதாரங்கள்

- **எழுத்தாவணம் எழுதப்பட்டுள்ள சாதனங்கள்**
  கல்வெட்டு, சுவர், செப்புத் தகடு, பொன் தகடு, மரப்பலகை, களிமண் பொருட்கள், பாத்திரங்கள்
- **மரச் செதுக்கற் கலைக்கு புகழ் பெற்று விளங்குவது அம்பக்க தேவாலயமாகும்.**






www.ikeduk

கல்வெட்டுக்களின் வகைகள்

குகைக் கல்வெட்டு	குகைகளில் பீலிகளின் அருகில் எழுதப்பட்டவை
பாறைக் கல்வெட்டு	கற்பாறைகளின் மேல் எழுதப்பட்டவை
தூண் கல்வெட்டு	செப்பனிடப்பட்ட கருங்கல் தூண்களில் எழுதப்பட்டவை
சுவர்க் கல்வெட்டு	செப்பனிடப்பட்ட கற்பலகையில் எழுதப்பட்டவை
இருக்கைக் கல்வெட்டு	மலர் ஆசனங்கள் போன்ற கற்பலகையில் எழுதப்பட்டவை



நாணயங்கள்



- எமது நாட்டில் கிடைக்கப் பெற்ற மிகப் புராதன நாணயம் **'கஹபண'** எனும் பெயரால் குறிப்பிடப்படுகின்றது.
- அநுராதபுர காலம் முதல் இலங்கையில் நாணயங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- **யானை மற்றும் சுவாஸ்திகா உருவம் பதித்த நாணயம், இலட்சுமி உருவம் பதித்த நாணயம், அக எனும் பொன் நாணயம்** போன்ற நாணயங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- பொலநறுவைக் காலத்தில் **'தம்பமஸ்ஸ'** என்ற செப்பு நாணயம் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- **உரோம, சீன, இந்திய, அரேபிய** போன்ற வெளிநாட்டு நாணயங்களும் இங்கு கிடைக்கப் பெற்றுள்ளன.
- புராதன நாணயங்கள் பற்றிக் கற்றல் **'நாணய விஞ்ஞானம்'** எனப்படும்.









தொல்பொருள் மூலாதாரங்களின் முக்கியத்துவம்



கல்வெட்டுக்கள்	கற்குகைகளை பிக்குகளுக்கு வழங்கியமை மற்றும் புராதன சமூக வரலாறு, குடியேற்றங்களின் பரம்பல் பற்றி அறிய உதவும்
நாணயங்கள்	நாட்டின் பொருளாதார நிலை, வர்த்தகம், உலோகப் பாவனை, தொழிநுட்பம் என்பவற்றை அறிய உதவும்
சிதைவுகள்	முற்கால மக்களின் கலையாற்றல், தொழிநுட்ப அறிவு, கட்டடக் கலையாற்றல், சுற்றாடல் பாதுகாப்பு, நீர் முகாமைத்துவம் பற்றி அறிய உதவும்
சித்திரங்கள், சிற்பங்கள், செதுக்கல்கள்	எமது முன்னோர்களின் ஆடையணிகள், கலையாற்றல்கள், ஆபரணங்கள், நிறப் பயன்பாடுகள், சமய நம்பிக்கைகள் பற்றி அறிய உதவும்
சிகிரியா சுவர் ஓவியம்	பெண்களின் ஆடை, ஆபரணங்கள், கூந்தல் அலங்காரம் என்பன பற்றி அறிய உதவும்

www.kalvi.lk

தொல்பொருள் மூலாதாரங்கள் அழிவடையும் சந்தர்ப்பங்கள்

- நாடு வேகமாக அபிவிருத்தி அடைதல்
- சனத்தொகை அதிகரிப்பு
- குடியேற்றங்களின் பரம்பல்
- பெருந்தெருக்கள் அமைக்கப்படல்
- கட்டடங்கள் அமைக்கப்படல்
- விவசாய நடவடிக்கைகள்

தொல்பொருள் மூலாதாரங்களைப் பாதுகாத்தல்

- தொல்பொருட்கள் மீது எழுதுதல், வரைதல் போன்ற செயற்பாடுகளைத் தவிர்த்தல்
- தொல்பொருட்களைச் சேதமாக்குதல் தண்டணைக்குரிய குற்றம் என்பதனைத் தெரியப்படுத்தல்
- தொல்பொருட்களை எமது முன்னோர்கள் பாதுகாத்தமையை உணர வைத்தல்
- தொல்பொருட்கள் காணப்படும் இடங்களுக்கு மாணவர்களை அழைத்துச் செல்லல்
- தொல்பொருட்கள் எமது நாட்டின் வரலாற்றுப் பாரம்பரியங்களை எடுத்துக் காட்டுகின்றன என்பதனை உணர வைத்தல்

புராதன பிரதேச எல்லைகளைக் குறிப்பிடும் அடையாளங்கள்

சூரிய-சந்திர உருவங்கள், விசிறி, வில், அம்பு, பாதச்சுவடு, சங்கு, மாட்டுக்கொம்பு, பல்வேறு விலங்கு உருவங்கள்

வரலாற்றைக் கற்பதன் முக்கியத்துவம்

- இறந்த கால அனுபவங்களின் மூலம் நிகழ்காலத்தைப் புரிந்து எதிர்காலத்தைச் சிறப்பாக்குதல்
- நாட்டின் தேசிய தனித்துவத்தை அறிந்து கொள்ளல்
- தான் வாழும் சமூகம் மற்றும் உலகம் பற்றிய புரிந்துணர்வைப் பெறுதல்
- தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தல்
- மாற்றுக் கலாசாரத்தை மதித்தல்
- வேறுபட்ட கருத்துக்களைச் சகித்துக் கொள்ளல்

இலங்கைக்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள்

போர்த்துக்கேயர்	செயிலான்
ஒல்லாந்தர்	சிலான்
ஆங்கிலேயர்	சிலோன்
கிரேக்கர்	தப்ரபேன்
அரேபியர்	செரண்டிப்
சோழர்	மும்முடிச்சோழ மண்டலம்
இந்தியர்	சிலயிதீப
பாரசீகர்	பலசிமுண்டு
ஆரியர்	தம்பபன்னி
சீனர்	சீலன்

SJBSINHALA
www.ikegu.lk

இலங்கையின் குடியேற்றங்கள்

- இலங்கையில் குடியேறிய முதல் மனிதன் **ஆதிஹோமோசேப்பியன்**
- இலங்கையின் மானிட வாழ்க்கை வரலாற்றுக் காலகட்டங்கள்
  - **வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (கி.மு 125000 – கி.மு 1800 வரை)**
  - **முன்வரலாற்றுக் காலம் (கி.மு 2400 – கி.மு 450 வரை)**
  - **வரலாற்றுக் காலம் (கி.மு 450 – கி.பி 300 வரை)**
- வரலாற்றுக்கு முற்பட்ட காலம்:-
  - **இலக்கிய மூலாதாரங்களில் குறிப்பிடப்படும் புராதன காலத்திற்கு முற்பட்ட காலம்**
  - **எழுத்து மூல ஆதாரங்கள் இல்லாத காலம்**
- கலாசார அடிப்படையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தின் இரு கட்டங்கள்
  - **நீண்ட காலம் நிலைத்திருந்த கற்காலம்**
  - **தாவர உணவுகளை உட்கொள்வதில் ஆர்வம் காட்டி உலோகப் பயன்பாட்டுடன் நிரந்தரக் குடியேற்றங்களை நிறுவிய காலம்**

- **வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்குரிய (கற்காலம்) ஆதாரங்கள் கிடைக்கப் பெற்ற இடங்கள்**

- ✓ இரத்தினபுரி மற்றும் அதன் அயற்சூழலிலுள்ள இரத்தினக்கல் சுரங்கங்கள்
- ✓ இரணைமடுப் படிவு (இலங்கையின் அதிவறண்ட வலய நிலத்தினடியில் களிமண்ணுடன் கூடிய மணல் மண்ணினால் மூடப்பட்டுள்ள சரளைப் படிவுகள்)

இலங்கையின் கற்கால மனிதன் வாழ்ந்த சுற்றாடல் வலயங்கள்

- அரை வறள் வலயம்
- தாழ்நில உலர்வலயம்
- தாழ்நில இடை உலர் வலயம்
- வறள் வலயம்
- மலைநாட்டு இடை உலர் வலயம்
- ஈரவலயம்

- **வரலாற்றுக்கு முற்பட்ட கால குடியிருப்புக்களின் அடிப்படை இயல்புகள்**
  - திறந்த வெட்ட வெளிகள்
  - இயற்கையான கற்குகைகள்

சுற்றாடல் வலயங்கள்	உதாரணங்கள்
கரையோர வெட்ட வெளிகள்	மினிஹாகல்கந்த, பூந்தல, பதிராஜவெல
தாழ்நில ஈரவலயக் குகைகள்	பாகியன்கல, பட்டதொம்பலென, கித்துல்கல பெலிலென
தாழ்நில உலர்வலயக் குகைகள்	சீகிரிய பொத்தான, அலிகல
தாழ்நில உலர்வலய வெட்டவெளிப் பாசறைகள்	பெல்லன்பதிபெலஸ்ஸ
மலையகப் பிரதேச வெட்டவெளி வேட்டை நிலம்	பண்டாரவளை, ஹோட்டன் சமவெளி

வரலாற்றுக்கு முற்பட்ட கால குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்

- உணவைப் பெறக்கூடிய இயற்கை வளங்கள் ஏராளமாகக் கிடைக்கும் பிரதேசங்கள்
- நீரைப் பெறக்கூடிய இடங்களிலும் கல்லாயுதங்கள் செய்வதற்குத் தேவையானவை தாராளமாகக் கிடைக்கும் இடங்கள்
- காலநிலை (வெப்பம், மழை)

S. JESINTHAN www.ikedu.lk

வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் வாழ்க்கை முறை

- ✓ வேட்டையாடல் மற்றும் அலைந்து திரிந்து உணவு சேகரித்தல்
- ✓ நாடோடி வாழ்க்கை
- ✓ சிறிய குழக்களாக வாழ்ந்தமை
- ✓ வெப்பமான காலங்களில் வெட்ட வெளிகளில் வாழ்ந்தமை
- ✓ மழை காலங்களில் கற்குகைகளில் வாழ்ந்தமை

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்	**முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள்**
பதிராஜவெல	**45** அடி ஆழத்தில் காணப்படும் இரணைமடுப் படிவுக்குரிய சரளைக்கற்படிவில் கற்காலத்திற்குரிய ஆதாரங்கள் கிடைத்தமை
பூந்தல வெல்லே கங்கொட	**24** அடி ஆழத்தில் புதைந்திருந்த **80000** வருடங்களுக்கு முற்பட்ட கல்லாயுதங்களுடன் கூடிய சரளைக்கற்படிவு கிடைத்தமை
பாகியன்கல	✓ **38000** வருடங்களுக்கு முன் வாழ்ந்த கற்கால மனிதனின் வாழ்விடம் ✓ **9 நபர்களின் எலும்புக்கூடுகளின் பகுதிகள்** கிடைத்தமை ✓ சிவப்பு நிறப்பாறையை உராய்ந்து பூசப்பட்ட **மண்டையோடு** கிடைத்தமை
பெல்லன்பெதிபெலஸ்ஸ	✓ **120 சதுர மீற்றர்** பரப்பளவில் கற்கால மனிதன் வாழ்ந்தமை ✓ **30 எலும்புக்கூடுகள்** கிடைத்தமை
கித்துல்கல பெலிலென	✓ **12 எலும்புக்கூடுகள்** கிடைத்தமை ✓ 12500 வருடங்களுக்கு முன் **காட்டுப்பலாவின் விதைகளை தீயில் சுட்டு சாப்பிட்டமைக்கான** ஆதாரங்கள் கிடைத்தமை ✓ **உப்புக் கலந்த நத்தைகளின் எச்சங்கள்** கிடைத்தமை
இராவண எல்ல	**இரண்டாகப் பிளக்கும் வகையில் துளையிடப்பட்ட மண்டையோடு** கிடைத்தமை
குருவிட்ட பட்டதொம்பலென	**வளைத்துப் புதைக்கப்பட்ட எலும்புக்கூடு** கிடைத்தமை
சிகிரியா பொத்தான	**மத்திய கற்காலத்திற்குரிய மனித எலும்புக்கூடு** கிடைத்தமை

இலங்கையின் கற்கால மனிதனின் உணவு முறை

- ❖ வேட்டையாடிப் பெற்ற உணவு :- மாடு, காட்டெருமை, கரடி, மான், மரை, கீரி, குரங்கு,காட்டுப்பன்றி, உடும்பு
- ❖ தாவர உணவு :- காட்டு வாழை, காட்டுப்பலா, காட்டுப் பாக்கு
- ❖ தீயில் சுடப்பட்ட உணவு :- காட்டுப்பலா விதை
- ❖ உணவில் உப்பு சேர்க்கப்பட்டமை :- உப்புக் கலந்த நத்தை எச்சங்கள்
- ❖ நன்னீர் மீனினங்கள் :- தித்தியா
- ❖ கொடி வகை உணவு :- வள்ளிக்கிழங்கு, கித்துள் விதை

வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் தொழிநுட்ப முறை

- ✓ கேத்திரகணிதப் பொறிமுறை உருவத்திலான நுணக்கமான கல்லாயுதங்கள் உருவாக்கப்பட்டது.
- ✓ சிறிய கேத்திரகணிதப் பொறிமுறையிலான ஆயுதங்கள் ஒரு தடியுடன் அல்லது மிருக எலும்புடன் இணைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டது.
- ✓ கற்பாறைகளைக் கொண்டு செப்பனிட்டு உருவாக்கப்பட்ட கல்லாயுதங்கள் 4.5cm அளவில் காணப்பட்டது.

S.JEBANTHAN www.ikeou.lk

- ✓ நுணக்கமான கல்லாயுதங்களைத் தயாரிக்கும் பொருட்டு பளிங்குப் பாறைகள் மற்றும் மஞ்சள் நிறப் பளிங்குக்கற்கள் பயன்படுத்தப்பட்டன.
- ✓ பல்வேறு தேவைகளுக்கும் ஏற்றவகையில் கல்லாயுதங்கள் தயாரிக்கப்பட்டன.(வெட்டுதல், கிழித்தல், தோண்டுதல், தட்டையாக்கல்)
- ✓ கருங்கல் மூலம் சுத்தியல், அம்மி போன்றவை உருவாக்கப்பட்டன.
- ✓ மரக்கோல்கள், விலங்கு என்புகள், கற்கள் போன்றவற்றால் உபகரணங்கள் செய்யப்பட்டன.

மனிதனின் உடலமைப்பு

ஆண்	பெண்
• வளர்ந்த ஆண் ஒருவரின் உயரம் 174cm • வளர்ந்த ஆண் ஒருவரின் மூளை 1600 கன சென்ரி மீற்றர் • பெரிய பற்கள் • அகன்ற மூக்கு • அகன்ற நாடி	• வளர்ந்த பெண் ஒருவரின் உயரம் 166cm • வளர்ந்த பெண் ஒருவரின் மூளை 920 கன சென்ரி மீற்றர் • பெரிய பற்கள் • அகன்ற மூக்கு • அகன்ற நாடி

❖ ஆகக் கூடிய ஆயுட்காலம் :- 35-40 வயது

வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் சடங்கு, சம்பிரதாயமுறை

- ✓ கற்காலத்தில் நிலவிய மரணச்சடங்கு முறை பற்றிய ஆதாரங்கள் பல அவன் வாழ்ந்த இடங்களில் கிடைத்துள்ளன.
- ✓ இராவண எல்ல குகையில் துளையிடப்பட்ட மண்டையோடு கண்டெடுக்கப்பட்டுள்ளது. அம்மண்டையோட்டில் கரடுமுரடான பகுதிகள் கல்லில் உராய்ந்து மட்டமாக்கப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதி செந்நிறமான பாறையால் நிறம் பூசப்பட்டுள்ளது.
- ✓ பாகியன்கல குகையிலும் சிவப்பு நிறப்பாறையை உராய்ந்து பூசப்பட்ட எலும்புக்கூட்டின் பகுதிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- ✓ இறந்தவரின் சடலம் அவர் வாழ்ந்த குகையில் புதைக்கப்பட்டு உக்கிய பின்னர் எலும்புக்கூடு தோண்டி எடுக்கப்பட்டு மீண்டும் பாதுகாப்பான முறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.
- ✓ குருவிட்ட பட்டதொம்பலெனக் குகையில் வளைத்துப் புதைக்கப்பட்ட எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

முன்வரலாற்றுக் காலம்

முன்வரலாற்றுக் காலத்தில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்கள்

- ✓ சுடப்பட்ட மட்பாண்டங்களின் பாவனையின் ஆரம்பம்
- ✓ முறையான மரணச்சடங்கு முறையை பின்பற்றியமை
- ✓ இரும்பு உலோகப் பாவனையின் ஆரம்பம்
- ✓ நிலையான குடியேற்றங்கள் அமைக்கப்பட்டமை
- ✓ விவசாயம் செய்யத் தொடங்கியமை

முன்வரலாற்றுக் காலம் உருவாகியமைக்கான காரணங்கள்

- ✓ காலநிலை மாற்றம்
- ✓ சனத்தொகை அதிகரிப்பு

முன்வரலாற்றுக் கால குடியிருப்புக்களின் தன்மை

- ✓ நிரந்தரமான குடியேற்றங்களும், வாழிடங்களும் உருவாக்கப்பட்டமை
- ✓ வரிச்சுவர் வீடுகள் அமைக்கப்பட்டமை
- ✓ வீட்டின் உட்புறம் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டமை
- ✓ செவ்வக வடிவிலான வீடுகள்
- ✓ இலுக்குப்புல்லினால் வேயப்பட்ட கூரை

SIBIRTHAN www.lkedu.lk



முன்வரலாற்றுக்கால மயானங்கள்



- அஸ்தி வைக்கப்பட்ட கல்லறை மயானம்
- அஸ்திக் கலசம் வைக்கப்பட்ட புதைகுழி
- களிமண் ஓட மயானம்
- பாரணி மயானம்

அஸ்தி வைக்கப்பட்ட கல்லறை மயானம்	இப்பன்கட்டுவ, கல்சொஹன், யட்டிகல்பொத்த
களிமண் ஓட மயானம்	ஹல்துமுல்ல, பெரகல, உடரஞ்சாமடம்

முன்வரலாற்றுக் கால மக்களின் வாழ்க்கை முறை


- நிலையான வாழ்க்கை முறை
- விவசாய வாழ்க்கை
- இரும்பு உபகரணங்களைப் பயன்படுத்தியமை
- மட்பாண்டங்களைப் பயன்படுத்தியமை
- பெண்கள் தம்மை அலங்கரிப்பதில் அதிக அக்கறை காட்டியமை
- மயானங்களைப் பயன்படுத்தியமை



முன்வரலாற்றுக் கால தொழிநுட்பம்

- ✓ உலோகப் பயன்பாடு
- ✓ மட்பாண்டத் தொழிநுட்பம்
- ✓ வீடு கட்டும் தொழிநுட்பம்
- ✓ மணிகள் செய்யும் தொழிநுட்பம்
- ✓ மயானப் பயன்பாடு





❖ விஜயன் வரும்போது இந்நாட்டில் வாழ்ந்த சுதேச மக்கள் **முன்வரலாற்றுக் காலத்திற்குரியோராவர்.**

வரலாற்றுக் காலம்

வரலாற்றுக் காலக் குடியேற்றங்களின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்

- ✓ வருடாந்த மழைவீழ்ச்சி
- ✓ மண்ணின் தன்மை
- ✓ தரைத்தோற்ற வேறுபாடு
- ✓ இயற்கை வளங்களின் பரம்பல்
- ✓ நீரோடைகள்

www.ikedu.lk

வரலாற்றுக் கால குடியிருப்புக்களின் தன்மை

- குளத்தை அடிப்படையாகக் கொண்டு குடியேற்றங்கள் வளர்ச்சியடைந்தமை (சுமண வாபிகாம, விஹார வாபிகாம)
- பல்வேறு தொழில்களின் அடிப்படையில் குடியேற்றங்கள் காணப்பட்டமை (கசீகார காம, மணிகார காம)
- காரணகாரிய அடிப்படையில் செயற்பட்ட கிராம வகைகள் (பட்டண காம)

வரலாற்றுக் கால குடியேற்றங்களின் அமைப்பு

- ✓ பொதுவாக ஒரு கிராமத்தில் 5 அல்லது 6 குடும்பங்கள் இருந்தமை
- ✓ சில பெரிய கிராமங்களில் 30 குடும்பங்கள் காணப்பட்டன
- ✓ சிறிய கிராமமொன்றின் பரப்பளவு 0.15 ஹெக்டயருக்குட்பட்டதாகவும் மத்திய அளவிலான கிராமமொன்றின் பரப்பளவு 2 ஹெக்டயராகவும் காணப்பட்டது
- ✓ சில கிராமங்கள் வேலியிட்டுப் பாதுகாக்கப்பட்டிருந்தது (பரிகித்தகம)
- ✓ பெரிய நகரக் குடியேற்றங்கள் காணப்பட்டது (புரம்)

வரலாற்றுக் கால குடியேற்றங்களின் நிர்வாகமுறை

- குடும்பத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது குடும்பத் தலைவன் (குர்ஹபதி)
- குடும்பத் தலைவர்களைக் கொண்ட தலைவன் கிராமத்தலைவன் (கமிக அல்லது கிராமிக)
- கிராமத் தலைவர்கள் பத்துப்பேரைக் கொண்ட சபையொன்றின் மூலம் கிராமப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன (பத்துக் கிராமப் பிரதானிகள்)

வரலாற்றுக் கால மக்களின் ஜீவனோபாயம்

- ✓ சேனைப் பயிர்ச்செய்கை முக்கிய இடம்பெற்றது (குரக்கன், எள், மெனேரி)
- ✓ கிராமக் குளங்கள் அமைக்கப்பட்டன

ஆரம்ப வரலாற்றுக்கால மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள்

- ❖ சனத்தொகை அதிகரிப்புக்கேற்ப உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டி ஏற்பட்டமை
- ❖ நீர்ப்பிரச்சினை
- ❖ வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்தல்
- ❖ சனத்தொகை அதிகரிப்புக்கேற்ப தேவைகள் அதிகரித்தமை
- ❖ நீர் முகாமைத்துவம்

கசீகார காம	விவசாயிகள் வாழ்ந்த கிராமம்
மணிகார காம	இரத்தினம் அகழ்வோர், பட்டை தீட்டுவோர் வாழ்ந்த கிராமம்
கோபால காம	இடையர் வாழ்ந்த கிராமம்
கேவட்ட காம	மீனவர் வாழ்ந்த கிராமம்
கும்பகார காம	குயவர் வாழ்ந்த கிராமம்
வட்டகீ காம	தச்சர் வாழ்ந்த கிராமம்
பட்டான காம	துறைமுகத்தை அண்டிய கிராமம்
நியம் கம்	வர்த்தகக் கிராமம்
ஒலகம்	மக்களால் கைவிடப்பட்ட குளக் கிராமம்
பரிகித்தகம	வேலியிட்டு பாதுகாக்கப்பட்ட கிராமம்
அபரிகித்தகம	வேலியிட்டு பாதுகாக்கப்படாத கிராமம்

S.JESINTHAN www.ikedu.lk

இலங்கையின் அரசியல் அதிகார வளர்ச்சி

அரசுக்கு முற்பட்ட காலம்

❖ **இல்லத் தலைவன் / குடும்பத் தலைவன் (குர்ஹபதி / கஹபதி / கிருகபதி)**

கிராமத்தின் பொதுப் பணிகளில் ஒவ்வொரு குடும்பத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக முன்வந்தவர்கள்.

❖ **கிராமத் தலைவன் (கமிக / கிராமிக)**

- ✓ ஒவ்வொரு கிராமத்தையும் பிரதிநிதித்துவப்படுத்திய நபர்.
- ✓ இல்லத் தலைவர்களின் விருப்பத்துடன் கிராமத்தில் வாழ்ந்த செல்வமும், பலமும் கொண்ட ஒருவர் கிராமத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.
- ✓ அடுத்தவர்களுக்கு உதவக்கூடிய அளவுக்கு சொத்துக்களையுடைய செல்வந்தர்களாக விளங்கினர்.
  உ + ம் :- புராதன கிராமம் ஒன்றில் வாழும் ஏழைக் குடியானவன் அடுத்த போகத்தில் தருவதாகக் கூறிய வாக்குறுதியின் பேரில் கமிகவிடம் நெல் மூடை ஒன்றைக் கடனாகப் பெற்ற செய்தி **'ஜாதக அட்டகதா'** என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ✓ கிராமத்து இல்லத் தலைவர்களில் இருந்து தெரிவு செய்யப்படுபவரே **'கமிக'** என **புத்தகோச தேரர் 'சமந்த பாசதிகா'** என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.
- ✓ இவர்கள் ஒருவரோடொருவர் நல்லுறவுடன் செயற்பட்டமையினால் கிராமங்களில் சமாதான சகவாழ்வு நிலவியது என்பதற்கான ஆதாரம் சிதுல்பவ்வ விகாரை கற்குகையில் காணப்படுகிறது. **கமிக சிவ, கமிக சுமண, கமிக சதன** போன்ற சிதுல்பவ்வையை அண்டிய கிராமத் தலைவர்கள் கற்குகையை சுத்தமாக்கி பிக்குகளுக்கு தானமளித்தமை.

❖ **கமிகவின் பணிகள்**

- ➢ கிராமப் பொது நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்கல்
- ➢ கிராமக் குளத்தை நிர்வகித்தல்
- ➢ குளத்திலிருந்து நீரை விநியோகித்தல்
- ➢ கிராமத்தவர்களிடையே ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்தல்
- ➢ கிராமத்தவர்களிடையே நல்லுறவை வளர்த்தல்

❖ **பிரதேசத் தலைவன் (பருமக)**

- ✓ ஒரு குளத் தொகுதியைச் சேர்ந்த அனைத்துக் கிராமங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தியவர்.
- ✓ பிரதேசத்தின் நிர்வாக அமைப்பைக் கொண்டிருந்தார் என **கண்டலாம** என்ற கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ✓ குகை ஒன்றை பிக்குகளுக்கு தானமளித்த பருமக **'தொட்டபோஜக'** (**படகுத் துறையை நிர்வகிப்பவர்**) என்ற பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளார்.
- ✓ பிரதேச நிர்வாகத்தில் ஈடுபட்ட பெண்கள் **பருமகலு** என அழைக்கப்பட்டனர்.
- ✓ துட்டகைமுனு பருமகமாரின் ஒத்துழைப்பைப் பெற்று அதிகாரத்தை மையப்படுத்தினான். (**புஸ்ஸதேவ, வேலுசுமண, தேரபுத்தாபய**)

❖ **பருமகவின் பணிகள்**

- பிரதேசத்தை நிர்வகித்தல்.
- குளத் தொகுதியை நிர்வகித்தல்.
- வரி வசூலித்தல்.
- பல கிராமப் பிரஜைகளினதும் நலனுக்காக தீர்மானங்களை மேற்கொள்ளல்.

அரச கோட்பாடு

❖ **அரசன் மக்களுக்கு ஆற்றவேண்டிய முக்கிய பணிகள்**

- ✓ நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பை வழங்கல்.
- ✓ நாட்டை பொருளாதார ரீதியில் முன்னேற்றல்.
- ✓ பிரஜைகளிடையே ஆன்மீக வளர்ச்சியை ஏற்படுத்தல்.

S.THISNTHAN www.ikeou.lk

❖ **அரசர்கள் பயன்படுத்திய எண்ணக்கருக்கள்**
- ஆண்டவன்
- போதிசத்துவர்
- மலையின் அரசன் (பர்வதராஜா)
- சக்கரவர்த்தி

➢ குட்டகண்ண அபய மன்னன் ⟶ நரேஸ்வர(மனிதர்களின் கடவுள்) ⟶ தம்புள்ள விகாரைக் கல்வெட்டு
➢ முதலாம் காசியப்பன் ⟶ குபேரக் கடவுள் ⟶ அலகபய மகாராஜா (இந்திரலோகங்களின் மகாராஜா)
➢ நிஸங்கமல்லன் ⟶ சக்கரவர்த்தி (முழு உலகிற்கும் அரசன்) ⟶ காலிங்க சக்கரவர்த்திப் பெருமான்
➢ மகாசேனன் ⟶ மின்னேரியக் கடவுள்

அரசுரிமை மாற்றம்

❖ **தந்தைக்குப் பின் மகன்**
- காவந்தீசனுக்குப் பின் துட்டகைமுனு
- வசபனுக்குப் பின் வங்க நாசிக்க திஸ்ஸ

❖ **சகோதரனிடமிருந்து சகோதரன்**
- தேவநம்பிய தீசனுக்குப் பின் உத்திய
- துட்டகைமுனுவுக்குப் பின் சத்தாதிஸ்ஸ

❖ **அரசனின் மனைவியின் சகோதரனுக்கு மற்றும் அரசனின் சகோதரியின் புத்திரனுக்கு**
- ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கனுக்குப் பின் ஸ்ரீ விஜயராஜசிங்கன்

அரச கருவி

மகாராஜா - மபுறுமுகா
தலைமை அமைச்சர் - மஹமத
அமைச்சர்கள் - அமெத
பொருளாளர் - படகரிக
உணவுச்சாலை அதிகாரி - பதகு

மகாராஜா	மபுறுமுகா
தலைமை அமைச்சர்	மஹமத
அமைச்சர்கள்	அமெத
பொருளாளர்	படகரிக
உணவுச்சாலை அதிகாரி	பதகு
வழக்கங்கள் மரபு முறைகள் தொடர்பான அதிகாரி	கொதுறு கேனா
நகர பரிபாலகர்	நகர குத்திக
நகர கட்டட நிர்மாணி	நகர வடிக
குதிரைப் பிரிவின் தலைவர்	அச அதெக
யானைப் பிரிவின் தலைவர்	ஹதி அதெக
நாட்டியப் பிரிவின் தலைவர்	நட அதெக
காசு அச்சிடும் பிரிவின் தலைவர்	ரூப அதெக
வர்த்தக நடவடிக்கைக்கான தலைவர்	பன அதெக

SUBSINTHAN www.ikeau.lk

பண்டைய சமூகம்

❖ **ஒரு நாட்டின் நிர்வாகத்தைக் கொண்டு நடத்தும் ஸ்தாபனங்கள்**

- சட்டம்(சட்டத்துறை) - பாராளுமன்றம் (சட்டங்களை வகுத்தல்)
- நிர்வாகம்(நிர்வாகத்துறை) - நிர்வாக அதிகாரிகள் (சட்டங்களை நடைமுறைப் படுத்தல்)
- நீதி(நீதித்துறை) - நீதிமன்றம் (நீதியை நிலைநாட்டல்)

புராதன இலங்கையின் நிர்வாக ஒழுங்கமைப்பு

❖ புராதன காலத்தில் எமது நாட்டினை ஆட்சி செய்தவர்கள் மன்னர்கள் ஆவர்.

❖ புராதன காலத்தில் சட்டத்துறையாக செயற்பட்டது நிர்வாகத்துறையாகும்.
உ + ம்:- "எக்தென் சமிய" என்ற சொல் சட்ட நிர்வாகத்துறையைக் குறிப்பிடுகின்றது.

❖ உள்ளூராட்சி தொடர்பான தனியானதொரு நிர்வாக அமைப்பு காணப்பட்டது.
உ + ம்:- யாழ்ப்பாணப் பிரதேசத்தை நிர்வகிக்க ரிஷிகிரி என்ற அமைச்சர் நியமிக்கப்பட்டதாக வல்லிபுரம் பொற்சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

❖ கீழ்மட்ட நிர்வாக நடவடிக்கைகளுக்கு சுயேட்சை சபைகள் காணப்பட்டது.
உ + ம்:- பிரதேச மட்டத்தில் செயற்பட்ட சபைகள் "தசகம் எத்தன்" என குறிப்பிடப்பட்டுள்ளது.

நிர்வாக அமைப்புடன் தொடர்புடைய சொற்கள்

எக்தென் சமிய	சட்ட நிர்வாகத்துறை
ஏக ஆஸ்தான	அரச சபை
வத்ஹிமியன் வதால	அரசனின் ஆணை
சபாவ	நீதிமன்றம்
மஹலே	அரச ஆவணங்களுக்குப் பொறுப்பான அதிகாரி
மஹலேகம்	பதிவாளர் நாயகம்

பொதுச் சுகாதார சேவைகளை வழங்கிய மன்னர்கள்

புத்ததாச மன்னன்	➢ வைத்திய மன்னன் ➢ சாரணார்த்த சங்கிரஹய என்ற வைத்திய நூல் ➢ 10 கிராமங்களுக்கு ஒரு வைத்தியரை நியமித்தமை ➢ மூலிகைத் தோட்டங்களை உருவாக்கினான்
5ம் மகிந்தன்	நாடெங்கிலுமுள்ள வைத்தியசாலைகளுக்கு தேவைப்பட்ட சகல வசதிகளையும் வழங்கினான்
4ம் காசியப்பன்	உபசக்க என்ற காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நோயாளர்களைப் பராமரிக்க தனியான வைத்தியசாலை அமைத்தமை
1ம் உபதிஸ்ஸ	கர்ப்பிணித் தாய்மாருக்குத் தேவையான பிரசவ வைத்தியசாலைகளை அமைத்தமை
பண்டுகாபயன்	➢ முதன் முதலில் வைத்தியசாலைகளை அமைத்தமை ➢ சொத்திசாலா என்ற பிரசவ வைத்தியசாலைகளை அமைத்தமை
1ம் பராக்கிரமபாகு	➢ சத்திரசிகிச்சையை மேற்கொண்ட மன்னன் ➢ மஹவெதனா(பிரதம வைத்தியர்) என்ற பதவி ஆரம்பிக்கப்பட்டது
2ம் சேனன்	உலகப் பழமை வாய்ந்த மிகிந்தலை வைத்தியசாலையை அமைத்தான்


S.JEGATHAN www.ikeau.lk

எமது நாட்டை ஆண்ட மன்னர்களின் வெளிநாட்டுத் தொடர்புகள்

- 1ம் கஜபாகு மன்னன் பத்தினி தெய்வக் கோயில் ஒன்றின் திறப்பு விழாவிற்கு சேர இராச்சியத்துக்குச் சென்றமை
- தேவநம்பியதீசன் காலத்தில் இலங்கையில் பௌத்த மதம் பரவியமை
- கனிட்டதிஸ்ஸ மன்னன் உரோமாபுரியிலிருந்து கண்ணாடி, பளிங்கு என்பவற்றைப் பெற்று ருவான்வெலிசாயவை அலங்கரித்தமை
- 6ம் அக்கிரபோதி மன்னன் காலத்தில் சீன இராஜதந்திரிகள் இருபது முறை இலங்கைக்கு விஜயம் செய்தமை
- அரபு நாடுகளுடன் வர்த்தகத்தொடர்பு இடம்பெற்றமை
- 1ம் விஜயபாகு பொலநறுவை தலதாமாளிகையின் பாதுகாப்பிற்கு வேளைக்காரப்படையை நியமித்தமை
- 1ம் விஜயபாகு கலிங்க இளவரசி திரிலோகசுந்தரியைத் திருமணம் செய்தமை அத்துடன் தங்கை மித்தா இளவரசியை பாண்டிய மன்னனுக்கு திருமணம் செய்து கொடுத்தமை
- 1ம் பராக்கிரமபாகு பாண்டிய இளவரசி லீலாவதியைத் திருமணம் செய்தமை
- 4ம் மகிந்தன் கலிங்க நாட்டுடன் விவாகத் தொடர்பை ஏற்படுத்தியமை

எமது புராதன வாழ்க்கை முறை

- **புராதன வாழ்க்கை முறை இடம்பெற்ற துறைகள்**
  - விவசாயம்
  - கைத்தொழில்
  - வர்த்தகம்
- **புராதன கால மக்களின் வாழ்க்கை முறை பற்றிய அம்சங்கள்**
  - கிராமங்களில் வாழ்ந்தனர்
  - எளிமையான வாழ்க்கை முறையாகக் காணப்பட்டது
  - தேவைகள் வரையறுக்கப்பட்டதாகக் காணப்பட்டது
  - விவசாயம் பிரதான வாழ்வாதாரத் தொழிலாகக் காணப்பட்டது



சேனைப் பயிர்ச்செய்கை

- **சேனை :-** காட்டைத் தீயிட்டுக் கொளுத்திய பின் துப்பரவு செய்து கொள்ளப்படும் நிலம் சேனை எனப்படும்.
- **வரலாற்று மூலாதாரங்களில் சேனையைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட சொற்கள்**
  - இலக்கிய மூலாதாரங்கள் :- உம்மக்க ஜாதக ⟶ **சேன்**
    :- புத்சரண ⟶ **செஹென்**
  - கல்வெட்டுக்கள் ⟶ **பிட்டபிம்**

SIVASUTHAN www.ikedu.lk

சேனைச் செய்கையாளன் மேற்கொள்ளவேண்டிய பணிகள்

- நிலத்தைத் தெரிவு செய்தல்
- அப்பகுதியில் உள்ள விலங்குகளை விரட்டல்
- காட்டை அழித்து தீயிட்டுக் கொளுத்தி அவற்றை துப்பரவாக்கல்
- நிலத்தைப் பண்படுத்தல்
- சேனையைப் பாதுகாப்பதற்குரிய வழிமுறைகளைக் கையாளல்
- மழைகாலம் தொடங்கும் போது பயிரிடல்
- ஒரு முறையோ, இரு முறையோ விளைச்சலைப் பெற்ற பின் அச்சேனையை கைவிட்டு பின் வேறு சேனை நிலத்தை நாடிச் செல்லல்

நவதெனி சேனை



- தீயிட்டுப் புதிதாக உருவாக்கிக் கொள்ளப்பட்ட நிலம்
- புதிதாக தீயிடப்பட்ட காணி
- குரக்கன், கொள்ளு, உழுந்து, பயறு, சோளம், கம்பு, வரகு, திணை, ஓமம் போன்ற தானியங்கள் ஒன்பதும் செழிப்பாக வளரும் சேனை

சேனையைப் பாதுகாத்துக் கொள்வதற்கு கையாளப்பட்ட வழிமுறைகள்

- கம்புகளினால் வேலியை அமைத்தல் (**தண்டுவெட்ட**)
- தீ மூட்டல்
- பரண் அமைத்தல் (**பெல**)

சேனைகளில் பயிரிடப்பட்ட பயிர்கள்

தானியங்கள்	கரைநெல், பயறு, எள்ளு, குரக்கன், சோளம், உழுந்து, வரகு, கடுகு, திணை, சீரகம்
மரக்கறிகள்	வட்டுக்காய், பூசணிக்காய், கத்தரிக்காய், சுண்டைக்காய், சாம்பல் வாழை
கிழங்கு வகைகள்	சிறுகிழங்கு, வற்றாளை
ஏனைய பயிர்கள்	கரும்பு, பருத்தி



சேனைப் பயிர்ச்செய்கையில் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள்

- வீச்சரிவாள்
- அரிவாள்
- மண்வெட்டி

IESINTHAN
www.ikedu.lk



சேனையில் பயன்படுத்தப்பட்ட சொற்கள்

சேன், செஹென், பிட்டபிம்	சேனை
நவதெனி சேனை	புதிய சேனை நிலம்
தண்டுவெட்ட	கம்புகளால் அமைக்கப்பட்ட வேலி
பெல	சேனையில் அமைக்கப்பட்ட பரண்
சாலி	கரைநெல்
கினியாதிகாவ	வன விலங்குகளை விரட்ட ஒலியெழுப்பல்
ஹெலிகடா	பானைத் தலையைக் கொண்ட வெருளி

சேனைப் பயிர்ச்செய்கையின் சிறப்பம்சங்கள்

- காடுகளை அழித்து மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கையாகும்.
- மழையை நம்பிய பயிர்ச்செய்கையாகும்.
- தானியங்கள், மரக்கறி வகைகள், கிழங்கு வகைகள் போன்றவை பயிரிடப்படும்.
- விலங்குகளிடமிருந்து சேனையைப் பாதுகாப்பதற்காக பல வழிமுறைகள் கையாளப்படும்.
- ஒருமுறையோ, இருமுறையோ விளைச்சலைப் பெற்ற பின் அச்சேனை கைவிடப்படும்.

சேற்று நில விவசாயம் - முக்கிய அம்சங்கள்

- வேறு பெயர்கள்:- நெற்பயிர்ச்செய்கை/நீர்ப்பாசனப் பயிர்ச்செய்கை
- முற்காலத்தில் மிகவும் பரவலாக மேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கை.
- நீர்ப்பாசனத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது.
- ஜீவனோபாயத் தொழிலாகக் காணப்பட்டது.
- வருடத்திற்கு இரு போகங்களில் மேற்கொள்ளப்பட்டது.
  பெரும் போகம் (மகா போகம்)
  சிறு போகம் (யால போகம்)
- மனித உழைப்பு பயன்படுத்தப்பட்டது.
- ஏர், மட்டப்பலகை, அரிவாள், மண்வெட்டி போன்ற உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டது.

நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்

- ✓ நிலத்தை உழுதல்
- ✓ நிலத்தை வடிவமைத்தல்
- ✓ தேர்ந்தெடுக்கப்பட்ட நெல் வகைகளை விதைத்தல்
- ✓ பயிரைப் பாதுகாத்தல்
- ✓ பயிர் விளைந்த பின் அறுவடையை மேற்கொள்ளல்
- ✓ நெற்குதிர்களை நிர்மானித்தல்

www.lkedu.lk

நெற்பயிரைப் பாதுகாக்கும் பொருட்டுகையாளப்பட்ட பாரம்பரிய முறைகள்

- ❖ வயலிலும், வரப்பிலும் இடையிடையே தென்னோலைகளை நடல்
- ❖ எண்ணையில் நனைக்கப்பட்ட திரிகளை எரித்தல்

வயற்செய்கையில் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள்

- ஏர்
- மட்டப்பலகை
- அரிவாள்
- மண்வெட்டி

புராதன நெற்செய்கையின் சிறப்பியல்புகள்

- கிராமக் குளங்கள் அமைக்கப்பட்டமை
- வருடத்திற்கு இரு போகங்கள் மேற்கொள்ளப்பட்டமை
- மனித உழைப்பு, மிருக உழைப்பு பயன்படுத்தப்பட்டமை
- இயற்கைப் பசளைகள் பயன்படுத்தப்பட்டமை
- சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தப்படவில்லை
- இயற்கைப் பயிர்ப்பாதுகாப்பு முறைகள் பயன்படுத்தப்பட்டமை
- தானியங்களைப் பாதுகாத்து வைத்திருந்தமை
- சிக்கனமாக நெல்லைப் பயன்படுத்தியமை

சேற்று நிலப்பயிர்ச்செய்கையில் பயன்படுத்தப்பட்ட சொற்கள்

வேளாண்மைக் குதிர் (உட்பட்டிக்குவியல்)	அறுவடை செய்யப்பட்ட வேளாண்மையைக் குவியலாக அடுக்கி வைத்திருத்தல்
சூடடித்தல்	வேளாண்மையைக் குவித்து எருமை மாடுகளைக் கொண்டு மிதித்து நெல்லை வேறாக்கல்
களம்	சூடடிக்கப் பயன்படுத்தப்படும் இடம்
கெத	வயல்கள்
வெவ் ஹமிக, வாபி ஹமிக	குளக் கிராமங்கள்
அகலஹஸ	பெரும் போகம்
மேதஹஸ	இடைப் போகம்
பிடதடஹஸ	சிறு போகம்





S. JEYANTHAN www.ikeau.lk

விலங்கு வளர்ப்பு

- வளர்க்கப்பட்ட விலங்குகள் :- **மாடு,** ஆடு, பன்றி, கோழி
- பெற்ற பயன்கள் :- உணவு (பால், இறைச்சி, முட்டை)
  நிலத்தை உழுதல்
  பசளை
  போக்குவரத்து
- பஞ்சரப் பொருட்கள்(பஸ்கோரச) :- பால், தயிர், மோர், வெண்ணெய், நெய்

கிரிகெரி	பால் பெற்றுக் கொள்வதற்காக வளர்க்கப்பட்ட பசுக்கள்
கோபாலர்கள்	மாடு வளர்ப்போர்
கோபாலகம்	மாடு வளர்ப்போர் வாழ்ந்த கிராமம்
1ம் தவளமுறை	மாடுகளின் முதுகில் பொருட்களை ஏற்றிச் செல்லல்

- நான்காம் காசியப்ப மன்னனால் பொறிக்கப்பட்ட கல்வெட்டில் 'கிரிகெரி' என்ற சொல் பாலைப் பெற்றுக் கொள்ள வளர்க்கப்பட்ட பசுக்களைக் குறிப்பிடுகின்றது.
- பெண்ணொருத்தி பசுவிலிருந்து பால் கறப்பதைக் காண்பிக்கும் சிற்பம் ஒன்று சிகிரியாவில் அமைந்துள்ள தாதுகர்ப்பத்தில் வைக்கப்பட்டுள்ள மகாமேருக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது.
- பொலநறுவை மெதிகிரியில் உள்ள எத்வெஹர மண்டபத்தில், வைத்தியசாலையில் நோயாளர்களின் தேவைக்காக மரணித்த ஆடுகளினதும், கோழிகளினதும் மாமிசம் மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும் எனக் கல்வெட்டொன்றில் குறிப்படப்பட்டுள்ளது.
- ஆடு, மாடு, கோழி, பன்றி என்பன வளர்க்கப்பட்டன.
- மாடு வளர்ப்போர் வாழ்ந்த கிராமம் 'கோபாலகாம' என அழைக்கப்பட்டது.

பண்டைய இலங்கையின் கைத்தொழில்கள்

கைத்தொழில்கள்	கைவினைஞர்	உற்பத்திப் பொருட்கள்	பயன்படுத்திய கருவிகள்
இரும்பு	கம்மாளர்(கபர/லோகரு)	ஏர்,மண்வெட்டி,கத்தி, அரிவாள்,கோடரி	இரும்புச்சூளை
செம்பு	கொல்லர்(தம்பகர)	தெய்வச்சிலைகள், குத்துவிளக்கு, கோவில் மணி	
தங்கம்	பொற்கொல்லர்(துலாதார)	வளையல்,தோடு	ஊது துருத்தி
இரத்தினக்கல்	பட்டை தீட்டுவோர் (மணிகர)	மாலைகள், மோதிரங்கள்	
மட்பாண்டம்	குயவர் (கும்பகார/கும்பல்லு/குபகர)	செங்கல்,ஓடு,சட்டி, பானை	வனைதல் சில்லு
நூல் நூற்றல்	நூல் நூற்போர்(ததவய)	நூல்	
புடைவை	நெசவாளர்(பெஹெகார)	துணிமணிகள்	
தந்த செதுக்கல்	தடிக	யானைத்தந்தம்	
கரும்பு		தேன்,கருப்பட்டி,சீனி	





S.JEBANTHAN www.kedu.lk

கைத்தொழில்கள்	கிடைக்கப் பெற்ற ஆதாரங்கள்
இரும்பு	முதுகல்ல கல்வெட்டில் மஜ்ஜிம என்ற கம்மாளர்
தங்கம்	மண்டகல கல்வெட்டில் துலதர சுமண என்ற பொற்கொல்லர்
இரத்தினக்கல்	அநுராதபுர,மாகம போன்ற நகரங்களில் கிடைக்கப் பெற்ற மாணிக்கத்தினாலும் ஏனைய வகைக் கற்களாலும் செய்யப்பட்ட மாலைகள்,மோதிரங்கள்
தந்த செதுக்கல்	வேகிரிய கல்வெட்டில் தடிக சுமண என்ற தந்த செதுக்கல் கலைஞர்
மட்பாண்டம்	திஸா வாவி அகழ்வில் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டச் சிதைவுகள்
நூல் நூற்றல்	வேஹெரகெம கல்வெட்டில் ததவய என்ற நூல் நூற்பவர்

வர்த்தகம்

- உள்நாட்டு வர்த்தகம்
- வெளிநாட்டு வர்த்தகம்

உள்நாட்டு வர்த்தகம்

- **அநுராதபுரம், மாகம** போன்றவை முக்கிய வர்த்தக நகரங்களாக விளங்கின.
- வர்த்தகத்தில் ஈடுபட்ட குழுவினர் **வணிஜ, வாபர** போன்ற சொற்களால் குறிப்படப்பட்டனர்.
- வர்த்தக சங்கத்தைக் குறிப்பதற்கு **புகய, நியமஸ்தான** போன்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டன.
- அநுராதபுர நகரத்தின் தெற்கு வாயிலின் அருகே **காலசுமண** என்ற பெயரில் வர்த்தக சந்தை காணப்பட்டமை.
- சிகிரியாவின் மேற்கிலுள்ள நீர்ப்பூங்காவில் காணப்படும் கல்வெட்டில் **'அபலவபர'** என்ற புளி வியாபாரி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ஹோபிடிகம சந்தை நிர்வாகம் தொடர்பான சட்டதிட்டங்கள் அடங்கிய கல்வெட்டு பதுளையில் காணப்படுகின்றமை.
- வர்த்தகம் புராதன காலத்திலிருந்தே இலங்கையின் ஜீவனோபாயமாகக் காணப்பட்டது.

வெளிநாட்டு வர்த்தகம்

- புராதன காலத்திலிருந்தே சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளில் எமது நாடு குறிப்பிடத்தக்க பங்காற்றியமையில் செல்வாக்குச் செலுத்திய காரணியாக **இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் காணப்பட்டமை** குறிப்பிடத்தக்கது.
- வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் **மாந்தை** மற்றும் **கோகர்ண** துறைமுகங்களின் ஊடாக நடைபெற்றன.
- **ஆப்கானிஸ்தானிலிருந்து வந்த காம்போஜர்களின்** பெரு வர்த்தக அமைப்புப் பற்றி **போவத்தேகல கல்வெட்டில்** குறிப்பிடப்பட்டுள்ளது.
- தென்னிந்திய வம்சாவழிகளின் வர்த்தக நிறுவனங்கள் இந்நாட்டில் செயற்பட்டுள்ளன.
  நானாதேசி, வலஞ்சியார், ஐந்நூற்றுவர்
- நானாதேசி வர்த்தக நிறுவனத்திற்குரிய உலோக முத்திரைகள் அம்பாந்தோட்டையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

S.THARSHAN www.ikedu.lk

ஆசார்ய	ஆசிரியர்
ஹஸ்தி ஆசார்ய	யானையைப் பழக்கும் ஆசிரியர்
அஸ்வ ஆசார்ய	குதிரை மீதேறி செல்வதைக் கற்பித்தோர்
துணு ஆசார்ய	அம்பு எய்தும் கலையைக் கற்பித்தோர்
வெஜ	வைத்தியர்
மஹவெதனா	அறுவைச் சிகிச்சை வைத்தியர் / முதன்மை வைத்தியர்
வொஹார	வழக்கறிஞர்
சிதகர / லேபத	சித்திரக் கலைஞர்

பாளி நூல்கள்	தீப வம்சம், அபிதானாபிரதீப்பிக்கா, சாராபிரதீப்பதி
சமஸ்கிருத நூல்கள்	ஜானகிஹரணய, பாலவதபோதன, அனுருத்த சத்தகய
சிங்கள நூல்கள்	சியபஸ்லகர, சசாந்தவத்த, முவதே உதாவத்த

சமயம்

- பௌத்தம்
- இந்து
- இஸ்லாம்
- கத்தோலிக்கம்

பௌத்த மதம் பரவியதால் ஏற்பட்ட விளைவுகள்

- ஒழுங்குபடுத்தப்பட்ட மதமாக பௌத்த மதம் தோற்றம் பெற்றமை.
- ஒழுங்குமுறையான சமுதாயம் ஒன்று தோற்றம் பெற்றது. (கருணை, தயவு, தானம் வழங்கல், முதியோரை ஆதரித்தல்)
- எழுத்துக்கலை, மொழி, இலக்கியம் போன்றவை வளர்ச்சியடைந்தன.
- பிராமிக் கல்வெட்டுக்கள் தோற்றம் பெற்றன.
- நாட்டில் அமைதி நிலவியதுடன், தன்னிறைவுடைய சமுதாயமும், பொருளாதார முறையும் உருவாகியது.

இந்து மதம்

- அநுராதபுர நகரிலும், அதனை அண்டிய பிரதேசங்களிலும் பிராமணியக் குழுக்கள் வாழ்ந்ததற்கான சாட்சியங்கள் உள்ளன.
- பிராமணர்கள் சமய நடவடிக்கைகளை மேற்கொண்ட இடம் **'சொத்திசாலா'** என மகாவம்ச டீகாவவில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- சிவலிங்கம் பிரதிஸ்டை செய்யப்பட்ட இடம் **'சீவகசாலா'** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- சிவபெருமானுக்குப் பூஜைகள் நடைபெற்றுள்ளது.
- தென்னிந்தியாவிலிருந்து வந்த தமிழ் வியாபாரிகள் (இந்து சமயத்தவர்கள்) **'தமெட'** எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.
- துறைமுகங்களை அண்டி பல சிவாலயங்கள் காணப்பட்டுள்ளன.

  மாதோட்ட – திருக்கேதீச்சரம்
  கோகர்ண - திருக்கோணேச்சரம்

கத்தோலிக்கம்

- **நெஸ்டோரியர்களுக்குரிய** சிலுவை அடையாளத்துடன் கூடிய கற்றூண் அநுராதபுரத்தில் கண்டறியப்பட்டமை.
- **பாரசீகத்தை** மையமாகக் கொண்டு பரவிய நெஸ்டோரிய சமயப் பிரிவினர் வியாபாரத்தின் பொருட்டு இலங்கைக்கு வருகை தந்தமை.
- அநுராதபுரத்தில் வாழ்ந்த பாரசீக வியாபாரிகள் பற்றி **கொஸ்மஸ்** குறிப்பிட்டுள்ளார்.

SUBSINTHAN www.ikedu.lk

கல்வி நிலை

- கல்வியைப் பெறவும், பரப்பவும் என பல அமைப்புக்கள் செயற்பட்டன.
  மகா விகாரை, அபயகிரி விகாரை
- கல்வியறிவானது பரம்பரைக்கு பயிற்சி மற்றும் கேள்வி ஞானம் மூலம் பரிமாற்றப்பட்டது.
- கல்வியை வழங்கியவர்கள் 'ஆசார்ய' என கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.
- பௌத்த குருமார்கள் சிங்களம், பாளி, சமஸ்கிருதம், பிராகிருதம் ஆகிய மொழிகளில் மட்டுமன்றி புத்த தர்மம் தொடர்பான ஆழ்ந்த அறிவையும் கொண்டிருந்தனர்.இவர்கள் முதற்தர ஆசிரியர்களாக விளங்கினர்.
- கல்வியைப் பெறும் பொருட்டு வெளிநாடுகளிலிருந்தும் பிக்குகள் வருகை தந்தனர்.
  சீனப் பிக்கு அபயகிரி விகாரையில் கல்வி கற்றுச் சென்றமை

இனங்களுக்கிடையிலான இணக்கப்பாடு

- **பௌத்த சமய குருவாக இருந்த தமிழர்** ஒருவரைப் பற்றிய கல்வெட்டொன்று அபயகிரி விகாரையில் கண்டெடுக்கப்பட்டமை.
- **தமிழர் ஒருவருடன் திருமணமாகியிருந்த சிங்களப் பெண்** பற்றி கல்வெட்டொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- **அரச சபையில் தமிழ் அதிகாரி என்ற விசேட பதவி** காணப்பட்டமை. அநுராதபுரத்திலும் அதன் சூழலிலும் வாழ்ந்த தமிழர்களின் சுக நலன்களைப் பேணல் அவரின் பொறுப்பாகக் காணப்பட்டது.
- தமிழ்க் குடும்பங்கள் வாழ்ந்த வீதி ஒன்று அநுராதபுரத்தில் கண்டறியப்பட்டுள்ளது.
- **இளநாகன், அபயநாகன்** போன்றோர் 'அஹம்படிச்சேனை' என்ற கேரளப் படையின் உதவியுடன் ஆட்சிப்பீடம் ஏறியமை.
- முதலாம் விஜயபாகு தலதாமாளிகையின் பாதுகாப்பிற்காக தென்னிந்திய வேளைக்காரப் படையை நியமித்தமை.
- மூவின மக்களும் சிவனொளிபாதமலையைத் தரிசித்தமை.
- தென்னிந்திய வர்த்தக நிறுவனங்களுக்கு இலங்கை ஆட்சியாளர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கியமை.

S.JESINTHAN
www.lkedu.lk

இலங்கையின் புராதன விஞ்ஞான தொழிநுட்பம்

- களிமண் ஓடக் கல்லறை
- வீடமைப்பு
- மட்பாண்டம்
- குளம்
- கால்வாய்
- பொய்கை
- நீர்ப்பூங்கா

  நீர்ப்பாசனத் தொழிநுட்பம்
- கட்டிடம்
- இரும்பு

களிமண் ஓடக் கல்லறைத் தொழிநுட்பம் (உடரஞ்சாமடம்)

- பொருத்தமான களிமண்ணைத் தெரிவு செய்தல்
- கல்லறையின் சுவரின் உயரத்தைக் குறைத்தல்
- சுவரை நிலத்திற்குச் செங்கோணமாய் அமைத்தல்
- கல்லறைச் சுவர்களின் சமநிலையைப் பேணல்
- கல்லறையின் உள்ளே வளியோட்டத்தை வழங்கும் வகையில் களிமண் குழாய் பொருத்தப்பட்டிருந்தது.

வீடமைப்புத் தொழிநுட்பம் (உடரஞ்சாமடம்)

- செவ்வக வடிவிலான வீடுகள்
- வீட்டின் சுவர் களிமண்ணால் கட்டப்பட்டிருந்தது
- கூரை இலுக்குப் புல்லால் வேயப்பட்டிருந்தது
- முன் பக்கம், பின் பக்கம் சுவரால் பிரிக்கப்பட்டிருந்தது
- நிலத்திற்கு மேல் கருங்கல் பரப்பப்பட்டு அதன் மேல் களிமண் இட்டு தரை அமைக்கப்பட்டிருந்தது
- நிலத்திற்கு செங்கோணமாக சுவர் எழுப்பப்பட்டது
- மரத்தாலான கதவு நிலைகள் பொருத்தப்பட்டிருந்தன

மட்பாண்டத் தொழிநுட்பம்

- பொருத்தமான களிமண்ணைத் தெரிவு செய்தல்
- அதனைப் பதனிடல்
- சுடுவதற்கான சூளையை அமைத்தல்
- உரிய வெப்பநிலையில் சுட்டெடுத்தல்
- சுடப்பட்ட மட்பாண்டத்தின் மேற்பரப்பில் உருவம் தீட்டல், வர்ணமிடல்
- நிறங்களைத் தயாரிப்பதற்கு தரையில் காணப்பட்ட செந்நிறக்கற்கள் பயன்படுத்தப்பட்டன
- களிமண் பாத்திரங்களைச் சூளையில் வைத்து சுடுவதற்கு முன்னர் பாத்திரத்தினுள் உமியை நிரப்பி சூளையினுள் கவிழ்த்து வைத்து அதன் பின்னர் சுட்டெடுக்கும் போது உள்ளே கருமை நிறமும், வெளியே செந்நிறமும் தோன்றியது
- அச்சுக்களில் வார்க்கப்பட்டே பாத்திரம் உருவாக்கப்பட்டது
- வனைதல்சில்லு (சக்கபோர்வை) என்ற உபகரணம் பயன்படுத்தப்பட்டது

நீர் முகாமைத்துவம்



மகாவாவிகள் அமைக்கப்பட்டதன் நோக்கங்கள்

- விவசாய நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்ளல்
- வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல்
- நகர மக்களின் நீர்த்தேவையை நிறைவு செய்தல்

பாரிய குளங்களை அமைக்கும் போது கவனத்திற் கொள்ளப்பட்ட விடயங்கள்


- குளத்தில் சேர்க்கப்பட்ட பாரிய நீர்ப்பரப்பின் அமுக்கத்தைக் கட்டுப்படுத்தி அதனை நீண்ட காலம் நிலைக்கச் செய்தல்
- நீரை விநியோகிக்கும் போது ஏற்படும் அழிவு உண்டாக்கும் அமுக்கத்தைக் கட்டுப்படுத்தல்

குளம்	நீரை வழங்கும் ஆறு
இரணைமடுக்குளம்	கனகராயன் ஆறு
யோத வாவி	மல்வத்து ஓயா
நுவர வாவி	மல்வத்து ஓயா
நாச்சதுவ வாவி	மல்வத்து ஓயா
மகாகணதர வாவி	மல்வத்து ஓயா
மின்னேரியாக்குளம்	அம்பன் கங்கை
கவுடுலு வாவி	அம்பன் கங்கை
பராக்கிரமசமுத்திரம்	அம்பன் கங்கை
கந்தளாய்க்குளம்	கந்தளாய் ஆறு
குருளு வாவி	யான் ஓயா
தப்போவ வாவி	மீ ஓயா
கலா வாவி	தம்புலு ஓயா
வவுனிக்குளம்	பாலி ஆறு

மன்னர்கள்	அமைத்த குளங்கள்	அமைத்த கால்வாய்
பண்டுகாபயன்	அபய வாவி, காமினி வாவி, ஜய வாவி	
தேவநம்பியதீசன்	திசா வாவி	
துட்டகைமுனு	சொரபொர வாவி	
எல்லாளன்	பேலி வாவி	
வசபன்	மகாவிலாச்சிய, மானாகட்டிய, நொச்சிப்பொத்தான, கிரிவடுன்ன	எலஹரக் கால்வாய் (ஆளிசாராக் கால்வாய்)
மகாசேனன்	மின்னேரியா, கவுடுலு, குருளு, மகாகணதரா, மாமினியா, மாகல்கட	பப்பதன்னக் கால்வாய்
தாதுசேனன்	கலா வாவி, மாததுகம, மானாமது, மெத்தகட்டிய வாவி	யோத எல கால்வாய் (ஜய கங்கைக் கால்வாய்)
2ம் முகலன்	நாச்சதுவ வாவி, பதவியாக்குளம்	
1ம் அக்போ	சிறிவட்டமானக, குரந்தி வாவி, மாமடுவ வாவி	மினிப்பேக் கால்வாய்
2ம் அக்போ	கந்தளாய், கிரித்தல	ஹத்தோட்ட அணை
1ம் பராக்கிரமபாகு	பராக்கிரமசமுத்திரம்	ஆகாச கங்கைக் கால்வாய்
நிசங்கமல்லன்	நிசங்கசமுத்திரம்	

S.JEGATHAN www.ikeau.lk

குளத்தின் கூறுகள்	அவற்றின் பணிகள்
குளக்கட்டு	குளத்தின் நீர் கொள்ளும் திறனை தாக்குப்பிடித்தல்
அலைதாங்கி	குளத்தில் எழும் நீரலையால் குளக்கட்டு அரிக்கப்படுவதைத் தடுத்தல்
கலிங்கல் (மடைக்கதவு)	❖ குளத்தின் நீர்மட்டம் உயர்ந்திருக்கும் போது நீரை வழங்க உயர்கலிங்கல் உதவும் ❖ நீரின் அளவு குறையும் போது நீரை விநியோகிப்பதற்கும், குளத்தில் சேரும் சேற்றை அகற்றவும் ஈரக்கலிங்கல் உதவும்
கலிங்கல் தொட்டி	கலிங்கல் ஊடாக நீர் வேகமாகச் செல்லும் போது உண்டாகும் அழுக்கத்தினால் குளக்கட்டு பாதிக்கப்படாமல் தடுத்தல்
வான்கதவு (சுருங்கை)	மழை காலத்தில் சேரும் குளத்தின் மேலதிக நீரை வெளியேற்றுவதன் ஊடாக குளக்கட்டு உடைப்பெடுக்காமல் தடுத்தல்
உள்வான் கதவு	நீர் பிரவாகத்தினோடு வரும் வண்டலும், சேறும் குளத்தில் படிவதைத் தடுத்தல்
உயர் அணை (போட்டா அணை)	குளத்தில் சேரும் வண்டலும், சேறும் தடுக்கப்படல்
கலிங்கற்கட்டு	வான்கதவு உடைப்பெடுக்கும் சந்தர்ப்பத்தில் குளத்து நீர் முழுமையாக வெளியேறாமல் பாதுகாத்தல்



குளக்கட்டுத் தொழிநுட்பம்

- ❖ இயற்கையான கற்பாறைகளை அத்திவாரமாகக் கொண்டே குளக்கட்டை அமைத்தனர்.
- ❖ ஆற்றுக்கு இரு பக்கமுமுள்ள இரண்டு எச்சக் குன்றுகள் அல்லது பாறைத் தொடர்களை தொடுக்கும் வண்ணம் அமைக்கப்பட்டது.
- ❖ குளக்கட்டு பல்வேறு மண் படைகளைக் கொண்டு அமைக்கப்பட்டது.
  களிமண், மண், சரளை மண், வெண்களி (சிகிரியாக் குளக்கட்டு)
- ❖ குளக்கட்டு மிருகங்களைக் கொண்டு நன்கு அழுத்தப்பட்டது.
- ❖ குளத்தின் பல்வேறு செயற்பாடுகளையும் கருத்திற் கொண்டு உறுப்புக்கள் (கூறுகள்) பல அமைக்கப்பட்டன.
  அலைதாங்கி, கலிங்கல் தொட்டி, மடைக்கதவு, வான்கதவு

- **யோத வாவி எனப்படும் இராட்சதக் குளத்தின் குளக்கட்டின் நீளம் ஏழு மைல், உயரம் 44 அடிகளாகும்.**

S. JEEVAN www.lkedu.lk

மடைக்கதவு / கலிங்கல்



- கல்வெட்டுக்களில் **'ரஜமொஹால்'** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- **நான்காம் மகிந்தனின் வெஸ்ஸகிரிய கல்வெட்டில் மொஹால், நகா** என்ற பதங்கள், **மடைக்கதவு மூலம் வெளியிடப்படும் நீரைக் கட்டுப்படுத்துவதற்கு கலிங்கல் தொட்டியினுள் கோலொன்று அமைக்கப்பட்டுள்ளது** என்பதனைக் குறிக்கின்றது.
- மடைக்கதவிற்குக் குறுக்காக வைக்கப்பட்டிருந்த கற்றூண் **'தண்ணீர் விளக்கு'** என அழைக்கப்பட்டது.

நான்கு முழம் உயரமான கற்றூண் - வெஸ்ஸகிரி கல்வெட்டு

- கலிங்கல் தொட்டியை ஆதாரமாகக் கொண்டு மடைக்கதவு அமைக்கப்பட்டது.

கால்வாய்

- கால்வாய் அமைப்பதில் ஈடுபட்ட அதிகாரி **'அடிக'** என கல்வெட்டொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- புராதன காலத்தில் அமைக்கப்பட்ட பிரமாண்டமான கால்வாயாக, மகாவலி கங்கையின் கிளை நதியான அம்பன் கங்கையை மறித்துக் கட்டப்பட்ட **எலஹரக் கால்வாய் (ஆழிசாராக் கால்வாய்)** கருதப்படுகின்றது.
- எலஹரக் கால்வாய் மூலம் **மின்னேரி, கிரித்தலை, கவுடுளு, கந்தளாய்** போன்ற குளங்களுக்கு நீர் கொண்டு செல்லப்பட்டது.

பொய்கைகள்

- குட்டம் பொய்கை / இரட்டைத் தடாகம் / அநுராதபுர பொக்குண - **முதலாம் அக்போ**
- தாமரைப் பொய்கை / நெலும்பொக்குண - **மகாபராக்கிரமபாகு**
- ரன்மசுப் பொய்கை - **வசபன்**
- யானைப் பொய்கை
- குமாரப் பொய்கை





- பெரிய மட்பாண்டங்கள் பலவற்றை கிணற்றுக்குள் புதைத்து கிணற்றின் சுவரை மூடி அமைக்கப்பட்ட கிணறுகள் **'ஊராகெட கிணறுகள்'** எனப்பட்டது.

சிகிரியா நீர்ப்பூங்காத் தொழிநுட்பம் - முதலாம் காசியப்பன்

- சுமார் 600 அடி உயரத்திலிருந்து வாய்க்கால் ஒன்றின் மூலம் சமவெளியை நோக்கி ஓடும் நீரைத் திடீரெனத் தடுத்துக் கணிசமான அளவு அமுக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் நீர் மேலெழச் செய்யப்பட்டது.
- அமுக்கம் ஏற்படும் இடங்களில் வட்ட வடிவிலான துளைகளிடப்பட்ட கருங்கல்லைப் பொருத்துவதன் மூலம் அத்துவாரங்கள் ஊடாக தண்ணீர் மேலெழுந்து விசிறும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது.
- மேலெழும் தண்ணீரின் உயரத்தில் வேறுபாடுகள் ஏற்படும் வகையில் கருங்கல் துவாரங்களின் விட்டத்தின் அளவுகளில் மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன.
- மேலிருந்து கீழாக நீரோட்டம் செல்லும் போது சேரும் வண்டல் இயற்கையான ஈர்ப்பு விசை மூலம் கீழ்ப்பகுதியில் படியும் வண்ணம் நீண்ட தூரத்திற்கு வாய்க்கால்களின் சரிவு குறைவானதாக அமைக்கப்பட்டு நீரின் வேகம் குறைக்கப்பட்டதுடன், வாய்க்கால் சுருள் வடிவில் அமைக்கப்பட்டது.
- மழைக்காலங்களில் படியும் சேற்றை நீக்கும் வண்ணம் வாய்க்காலின் இடையே கருங்கற் பாறைத் துண்டங்கள் அமைக்கப்பட்டிருந்தன.





WWW.KESINTHAN.LK

கட்டிட நிர்மாணம்



சமயக் கட்டிடங்கள்	தூபி, தூபி மனை, சிலை மனை, விகாரைகள், ஆராமைகள், தானசாலைகள்
சமய சார்பற்ற கட்டிடங்கள்	அரசமாளிகை, கோட்டைகள், அரண்மனைகள், வைத்தியசாலைகள், வீடுகள்

காலம்	கட்டிடங்கள்	கட்டிய மன்னர்
அநுராதபுரம்	தூபராம	தேவநம்பியதீசன்
	ருவான்வெலிசாய, மிரிசவெட்டிய, லோவமகாபாய(ஆயிரம்கால் மண்டபம்)	துட்டகைமுனு
	அபயகிரி	வலகம்பா
	ஜேதவனராமய	மகாசேனன்
பொலநறுவை	கிரி விகாரை, தெமழமகாசாய, தெடிகம கொட்ட விகாரை	மகாபராக்கிரமபாகு
	ரன்கொத் விகாரை	நிஸங்கமல்ல

கட்டிடத் தொழிநுட்பம்

ருவான்வெலிசாயவின் அத்திவாரம்



- அதன் தளம் ஏழு முழம் ஆழத்திற்கு அகழப்பட்டது.
- அவ் அகழியில் பலம் வாய்ந்த மனிதர்களைக் கொண்டு சுண்ணாம்புக் கற்பாறைகள் இடப்பட்டு உடைக்கப்பட்டன.
- பின்னர் நீர் ஊற்றப்பட்டு கடின தோலிலான பாதணிகளை யானைகளுக்கு அணிவித்து அக்கலவை மிதித்து மட்டமாக்கப்பட்டது.
- அதன் மேல் வெண்களி, கருங்கற்படை, சரளைக் கற்படை, படிகக்கல் படை என பல்வேறு படைகள் இடப்பட்டது.
- அதன் மேல் **'நவநீதம்'** எனப்படும் களிமண் பூசப்பட்டது.
- இரசாயனத் திரவமொன்றின் மூலம் கரைக்கப்பட்ட விளாம்பழச்சாறு பூசிய உலோக வலையொன்று விரிக்கப்பட்டு அதன் மேல் நல்லெண்ணையில் நனைக்கப்பட்ட **'ரன்சிரியஸ்'** எனப்படும் கற்கள் பரப்பப்பட்டு அத்திவாரம் அமைக்கப்பட்டது.

இடிதாங்கி பொருத்தப்பட்டமை

- இடி மின்னலில் இருந்து பாதுகாப்புப் பெறும் பொருட்டு ருவான்வெலிசாயவின் உச்சியில் **'வஜ்ர சும்பட்ட'** (மின் காந்தம்) என்ற உபகரணம் பொருத்தப்பட்டிருந்தது.

SRISINTHAN www.ikeon.lk

சுகாதார சேவையும், வைத்தியமுறையும்



- பண்டுகாபய மன்னன் காலத்தில் அநுராதபுரத்தில் அமைக்கப்பட்டிருந்த பிரசவ இல்லம் பற்றி மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- துட்டகைமுனு 18 வைத்தியசாலைகளை அமைத்ததாக வம்சக்கதைகள் கூறுகின்றன.
- புராதன அரசர்கள் வைத்தியக்கலையைக் கற்றறிந்தவர்களாகக் காணப்பட்டதுடன், சிலர் வைத்தியக்கலையின் வளர்ச்சிக்கு உதவினர்.
- பொலநறுவை ஆலஹனாப் பிரிவெனாவில் கண்டெடுக்கப்பட்ட வைத்தியசாலைக் கட்டிட இடிபாடுகள், வைத்தியக் கருவிகள், மருத்துவ ஓடங்கள் போன்றவை வைத்தியத் துறையின் வளர்ச்சியை பறைசாற்றுகின்றன.
- வைத்தியத் துறையின் வளர்ச்சி கருதி வைத்திய நூல்கள், மருத்தவ ஓடங்கள், வைத்தியருக்கான கிராமங்களை ஒதுக்குதல், மூலிகைத் தோட்டங்களை உருவாக்கல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- மலசலகூட தொல்பொருள்களில் வடித்தல் முறையில் கழிவுகளை முகாமை செய்துள்ளனர்.
- அரண்மனை மலசலகூடக் கழிவுகள் ஆழமான குழிக்குள் விடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.
- பொலநறுவை சிதைவுகளில் அழுக்கு நீர் ஓடுவதற்காக அமைக்கப்பட்ட சாக்கடைத் தொகுதி கண்டறியப்பட்டுள்ளது.
- குளிக்கும் தொட்டிகளிலிருந்து அழுக்கு நீரை வெளியேற்ற விசேட குழாய்கள் பொருத்தப்பட்டிருந்தன.
- கட்டிடங்களின் பரப்பளவிற்கேற்ப மலசலகூடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

இரும்புத் தொழிநுட்பம்

- புராதன காலத்தில் இரும்பை உருக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட இரும்புச் சூளைகளின் பகுதிகள் **சமனெலவெவ மற்றும் தெஹிகஹ அலகந்த** பிரதேசங்களில் கிடைக்கப் பெற்றுள்ளது.
- சமனெலவெவ பிரதேசத்தில் இரும்புச் சூளையை எரிப்பதற்கு **இயற்கையாக வீசும் காற்றே** பயன்படுத்தப்பட்டது.
- தெஹிகஹ அலகந்த பகுதியில் இரும்புச் சூளையை எரிப்பதற்குத் தேவையான வளி **'ஊதுளை'** என்ற கருவி ஊடாகப் பெறப்பட்டது.
- இரும்பைப் பெற்றுக் கொள்வதற்காக **லிமனைட், ஹெமடைட்** போன்ற இரசாயனக் கற்கள் பயன்படுத்தப்பட்டன.
- அடுப்பை எரிப்பதற்கு **'மரங்'** என்ற கரி பயன்படுத்தப்பட்டது.
- இரும்புத்தாது கொண்ட கற்களை சூளையில் இட்டு அதன் மேல் கரி இட்டு மாலை நேரத்தில் தீ மூட்டப்படும். அடுத்த நாள் அதிகாலை வரை வீசும் காற்று மூலம் அடுப்பு எரிந்து இரும்பைப் பிரித்தெடுக்கும்.






S. NISHAN www.nie.edu.lk

புராதன அளவை முறைகள்

நில அளவீடு	லாஹ, பேல்ல, குறுனி, அமுண, கரீசை
நீள (தூர) அளவீடு	அணு, தஜ்ஜாரி, ரத்தரேணு, லிக்க, உசக்க
சிறிய தூர அளவீடு	பரமாணு, அங்குலம், வியத்த
நீண்ட தூர அளவீடு	கவ்வ, யொதுன, உச்ச
நிறை அளவீடு	வீஹ, குஞ்சா, மாசக்க, அக்க, தரண, சுவர்ண, பல
கால அளவீடு	வச, ஹவஜர, தீதிய, மொஹத்த

காவுத கணு

- பிரதான வீதிகளில் கவ்வையிலிருந்து கவ்வைக்கு நடப்பட்ட கற்றூண்.
- **கட்டுகஹல்கே** மற்றும் **வெலிகந்த** பிரதேசங்களில் கிடைக்கப் பெற்றுள்ளன.
- கவ்வையிலிருந்து கவ்வைக்கு கற்றூண்களை நடுமாறு ஆணையிட்டவன் **நிஸங்கமல்ல மன்னன்** ஆவான்.

பால்மடு யாகம்

- மாடுகளின் பாதுகாப்பிற்காகவும், விவசாய நடவடிக்கைகளின் வெற்றிக்காகவும் மேற்கொள்ளப்பட்ட சாந்திப் பூஜை.
- **'மங்கர'** என்ற தெய்வம் முன்னிலைப்படுத்தப்பட்டது.
- **சப்ரகமுவ** மற்றும் **ஊவா** மாகாணங்களில் இடம்பெறுகின்றது.

S.JESINTHAN
www.lkedu.lk

வரலாற்று அறிவும், அதன் நடைமுறைப் பிரயோகமும்

வரிச்சட்டத்தின் மூலம் அறவிடப்பட்ட வரிகள்

தக்கபதி	குளங்களிலிருந்து நீரைப் பயன்படுத்துவோரிடமிருந்து அறவிடப்பட்ட வரி
போஜக்கபதி	அரசனுக்குச் சொந்தமான நிலங்களில் பயிர் செய்வதற்காகச் செலுத்தப்பட்ட வரி
மதரமஞ்சக்க	வாய்க்கால்களில் மீன் பிடித்தலுக்காக அரசுக்குச் செலுத்திய வரி

நான்காம் உதயனால் விதிக்கப்பட்ட ஹோப்பிட்டிகம சந்தை நிர்வாகம் தொடர்பான சட்டங்கள்
(பதுளைத் தூண் கல்வெட்டு / சொரபரத் தூண் கல்வெட்டு)

- வர்த்தக நிலையத்தைக் கடந்து செல்வோரிடமிருந்து வரி அறவிடக்கூடாது.
- அதிகாரிகளிடம் காண்பிக்காது வர்த்தக நிலையங்களில் பொருள்கள் விற்போரிடமிருந்து இரு மடங்கு வரி அறவிட வேண்டும்.
- அரச அதிகாரிகளால் அளவு குறிக்கப்படாத தராசுகள் கொண்டு வியாபாரம் செய்தலாகாது.
- வெற்றிலை, பாக்கு என்பன அதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் மாத்திரம் வியாபாரம் செய்தல் வேண்டும்.
- போயா தினங்களில் வியாபாரம் செய்வோரிடமிருந்து தண்டப் பணமாக எண்ணெய் வரி அறவிட வேண்டும்.

சுற்றாடல் பாதுகாப்புச் சட்டங்கள்
(மரஞ்செடிகள், உயிரினங்கள், மண் நீர்தொடர்பானவை)

நான்காம் மகிந்தன்	அநுராதபுரக் கல்வெட்டு	உயர் நிலங்களில் உள்ள மரங்களை வெட்டக் கூடாது
மூன்றாம் உதயன்	புத்தன்னெஹெலக் கல்வெட்டு	காட்டு மரங்களை வெட்ட வேண்டாம்
ஐந்தாம் காசியப்பன்	கொண்டவட்டவான் தூண் கல்வெட்டு	மரஞ்செடிகளின் முகாமைத்துவம் தொடர்பான சட்டம்
ஆமண்டகாமினி அபய மன்னன்	-	மிருகங்களை எவரும் கொல்லக் கூடாது (படுகொலைச் சட்டம்)
நான்காம் மகிந்தன்	மிகிந்தலைக் கல்வெட்டு	எருமை, பசு, ஆடு என்பவற்றைக் கொல்வோருக்கு மரணதண்டனை விதிக்கும் சட்டம்
நிசங்கமல்லன்	-	நீர் நிலைகளில் வாழும் உயிரினங்களைக் கொலை செய்யக் கூடாது
ஐந்தாம் காசியப்பன்	கொண்டவட்டவான் தூண் கல்வெட்டு	உரிய காலத்தில் அறுவடை செய்யத் தவறும் நபர்கள் ஐந்து கலங் அபராதம் செலுத்த வேண்டும்
நான்காம் மகிந்தன்	வெஸ்ஸகிரி கல்வெட்டு	குளங்களிலிருந்து நீர் பெறப்படும் வயல்களில் நெல் தவிர, பாசிப்பயறு விதைத்தலாகாது

S.JEYANTHAN www.tgju.lk

குற்றச் செயல்கள் தொடர்பான சட்டங்கள்

நான்காம் மகிந்தன் - வேவல்கெட்டிய கல்வெட்டு

- ❖ களவு எடுத்தல், கொலை செய்தல் தொடர்பாக விதிக்கப்பட வேண்டிய தண்டனை
- ❖ கொலைக் குற்றத்திற்கு வழங்கப்பட்ட தண்டனை – தூக்கிலிடுதல்
- ❖ பிறருக்குச் சொந்தமான மாடுகளைக் களவு செய்து பிடிபட்டால் அந்த மிருகங்களைத் தேடி உரியவர்களிடம் ஒப்படைத்து, மாடுகளின் உடலில் இடப்பட்ட அடையாளத்தை திருடியவர்களின் நெற்றியில் சூடாக்கி இட வேண்டும்

- ➢ தலைமறைவாகி இருக்கும் குற்றவாளிகளைப் பிடிக்கும் பொறுப்பு அக் கிராமத்து மக்களிடம் ஒப்படைக்கப்பட்டது.
- ➢ குற்றவாளியைப் பிடிக்கும் வரை குற்றவாளி வாழ்ந்த கிராம மக்கள் செலுத்த வேண்டிய வரி **உள்ளூர் தண்டப்பணம்** எனப்பட்டது.

பெண்களின் பிரதிநிதித்துவம்

- ❖ **லீலாவதி அரசி** இந் நாட்டை மூன்று தடவைகள் ஆட்சி புரிந்தமை.
- ❖ தூர நாடொன்றுக்கு வர்த்தகத்தின் பொருட்டு சென்ற கணவன் மூன்று வருடங்களின் பின் திரும்பி வரும் வரை தனியாக வாழ்ந்த பெண் பற்றி **ரசவாஹினி** என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ சாலியவின் மனைவி **அசோகமாலா** துட்டகைமுனு அரசனின் மாளிகையில் சுவையான உணவு தயாரித்து வழங்கியதாக **சத்தர்மலங்கார** என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ கல்வியறிவில் சிறந்து விளங்கிய பெண்கள் **பதுபாச்சிகா** என்ற பெயரில் அழைக்கப்பட்டதாக **தம்பியா அட்டுவா கெற்றபத** என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ பிரதேச ஆட்சியில் பங்குபற்றிய பெண்கள் **பருமகலு** எனக் குறிப்பிடப்பட்டனர்.
- ❖ **விகாரமகாதேவியிடம்** பிக்குமார் அவளின் செல்வாக்குப் பற்றி வினவிய போது பிள்ளைகள் இல்லாத வாழ்வில் உள்ள சுகம் என்ன சுகம் எனப் பதிலளித்ததாக **ரசவாஹினியில்** குறிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ **தல்தாலக்சுமி** பௌத்த விகாரைக்கு நிலபுலன்களைத் தானமாக வழங்கியமை.

சுதேச உணவு முறை

- ❖ வரலாற்றுக் காலத்தில் பெருமளவில் **நெல், உழுந்து, எள்ளு, குரக்கன்** போன்ற தானியங்களை உணவாக உட்கொண்டனர். **(தோணிகல கல்வெட்டு)**
- ❖ கறிகளைச் சுவையூட்டுவதற்கு **உப்பு, சீரகம், மிளகாய், கொத்தமல்லி, கடுகு, வெந்தயம்** போன்ற வாசனைப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டது.
- ❖ உணவைச் சுவையூட்டுவதற்கு **புளிப்பு வகைகளும்** பயன்படுத்தப்பட்டன. **(எலுமிச்சை, கொரக்காப் புளி)**
- ❖ உணவு சமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட எண்ணையில் **நெய்** முக்கிய இடத்தைப் பெற்றதுடன், தேங்காய் எண்ணெய் பாவனை குறைவாகவே காணப்பட்டது.
- ❖ கஞ்சியை அதிகளவில் உணவாகக் கொண்டனர். ஒரு பங்கு அரிசியுடன் ஆறு பங்கு நீர் சேர்த்து தயாரிக்கப்பட்ட கஞ்சி **யவாகு** எனப்பட்டது.
- ❖ மருத்துவக் குணமுடைய இலைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கஞ்சி **எம்புல்ஹம்பு** எனப்பட்டது.
- ❖ இயற்கையில் காணப்பட்ட உணவை அதன் போசனைச் சத்துக் குறையாமல் தயாரித்து உண்டனர்.
- ❖ **பால் (கிரிகெரி), தயிர் (தீகிரி)** என்பவற்றின் பாவனை சாதாரண மக்களிடையேயும் காணப்பட்டது.
- ❖ மாமிச உணவை உட்கொண்டனர்.
- ❖ உணவிற்குப் பின் **சிற்றுண்டியாக எள்ளுருண்டை (திலசங்குலிக்கா)** பயன்படுத்தப்பட்டது.
- ❖ செல்வந்தர்கள் மத்தியில் விருப்பமான உணவாக விளங்கியது, மணம் நிறைந்த நெய்யால் சுடப்பட்ட மான் இறைச்சியும், தவிடுடனான சோறும் என சத்தர்மரத்னாவலியில் குறிப்படப்பட்டுள்ளது.

SLTES INDIAN
www.ikedu.lk

உலர் வலய புராதன நகரங்களின் வீழ்ச்சியும், தென்மேற்கில் புதிய இராச்சியங்களின் தோற்றமும்

முதலாவது நகராக்கம்

- அநுராதபுரம்
- பொலநறுவை
- மாகம

பொலநறுவை இராசதானியின் வீழ்ச்சிக்கான காரணங்கள்


- கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு (உடனடிக் காரணி)
- பலவீனமான மன்னர்களின் ஆட்சி
- கலிங்க – பாண்டிய வம்சப் போட்டி
- பொருளாதார வீழ்ச்சி
- மகாபராக்கிரமபாகுவின் வெளிநாட்டுக் கொள்கை

புராதன நகரங்களின் வீழ்ச்சிக்கான காரணங்கள்

- ✓ எதிரிகளின் ஆக்கிரமிப்பு
- ✓ மத்திய அரச நிர்வாகம் சீர்குலைந்தமை
- ✓ பாதுகாப்பு இல்லாமற் போனமை
- ✓ வர்த்தகமும், போக்குவரத்தும் தடைப்பட்டமை
- ✓ மக்கள் வேறு இடங்கள் நோக்கிப் புலம்பெயர்ந்தமை

மாகனின் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து தோன்றிய பிரதேச ஆட்சி அலகுகள் மற்றும் அவற்றின் தலைவர்கள்

- ❖ யாப்பகூவ - சுப தளபதி
- ❖ கோவிந்த மலை - புவனேகபாகு ஆதிபாதன்
- ❖ மினிப்பே - சங்க தளபதி



இரண்டாவது நகராக்கம் / ஈரவலயப் பகுதி இராசதானிகள்

- ❖ தம்பதெனியா
- ❖ யாப்பகூவ
- ❖ குருநாகலை
- ❖ கம்பளை
- ❖ கோட்டை

தம்பதெனியா அரசர்கள்

மூன்றாம் விஜயபாகு

அரசியற் பணிகள்

- ❖ மாயரட்டையின் எதிரிகளைத் துரத்தி தம்பதெனியாவைத் தலைநகராக உருவாக்கியமை
- ❖ கொத்மலையில் ஒழித்து வைக்கப்பட்டிருந்த புனித தந்த தாதுவைப் பெற்று ஆட்சியுரிமையை உறுதிப்படுத்தியமை
- ❖ 1232-1236 வரை மாயரட்டையில் சமாதானம், ஒழுங்கை நிலைநாட்டியமை
- ❖ ஆரம்ப காலத்தில் வன்னித்தலைவனாகச் செயற்பட்டமை

பௌத்த சமயப்பணிகள்

- ❖ கொத்மலையிலிருந்த புனித தந்ததாதுவைப் பெற்று பெலிகல தலதா மாளிகையை அமைத்து அங்கு அவற்றைப் பிரதிஸ்டை செய்தமை
- ❖ களனி விகாரையைப் புணரமைப்புச் செய்தமை
- ❖ தம்பதெனியாவில் விஜயசுந்தரராமய என்ற விகாரையைக் கட்டியமை
- ❖ உபசம்பதா சடங்கை நடாத்தி புத்தசாசனத்தைத் தூய்மைப்படுத்தியமை
- ❖ அழிந்துபோன பௌத்த சமய நூல்களை மீண்டும் எழுதிவித்தமை

S.JESINTHAN www.ikeduk

இரண்டாம் பராக்கிரமபாகு

அரசியற் பணிகள்

- 1236 - 1270 வரை தம்பதெனியாவை ஆட்சிபுரிந்தமை
- கலிங்க மாகனை நாட்டிலிருந்து விரட்டியமை
- சந்திரபானுவின் இரண்டு படையெடுப்புக்களையும் முறியடித்தமை

இலக்கியப் பணிகள்

- கல்வியறிவு கொண்ட சிறந்த பண்டிதனாகத் திகழ்ந்தமை
- சிங்கள மொழியில் எழுதப்பட்ட மகாகாவியமான **'கவிசிலுமின'** என்ற நூலை எழுதியமை
- பௌத்த பிக்குகள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிக் கோவையான **'தம்பதெனிய கதிகாவத'** வைத் தயாரித்தமை
- இவனது நாளாந்த செயற்பாடுகள் பற்றிக் குறிப்பிடும் **'கந்தவுரு சிரித்த'** என்ற நூலும் சிறப்பிடம் பெறுகின்றது

யாப்பகூவ அரசர்கள்

முதலாம் புவனேகபாகு

- யாப்பகூவ அரசின் முதல் மன்னன்
- சதிகாரர்களை முறியடித்து 1272 இல் ஆட்சியைக் கைப்பற்றியமை
- வன்னித் தலைவர்களின் கிளர்ச்சியை அடக்கியமை
- காலிங்கராயர் மற்றும் சோடகங்கன் போன்ற தென்னிந்தியத் தளபதிகளின் படையெடுப்பை முறியடித்தமை
- எகிப்திய சுல்தான்களுடன் வர்த்தகத் தொடர்பை ஏற்படுத்தியமை
- வருடாவருடம் உபசம்பதா சடங்கை நிகழ்த்தியமை
  யாப்பகூவவில் தலதாமாளிகை ஒன்றை அமைத்தமை

குருநாகலை அரசர்கள்

நான்காம் பராக்கிரமபாகு

- குருநாகலையைத் தலைநகரமாகத் தெரிவு செய்தமை
- பௌத்த சமயத்தின் வளர்ச்சிக்கும், கல்வி வளர்ச்சிக்கும் நடவடிக்கை எடுத்தமை
- பாளி மொழியிலிருந்த ஜாதகக் கதைப்புத்தகம் **'பண்சிய பணஸ் ஜாதகய'** என்ற பெயரில் மொழி பெயர்க்க உதவியமை
- **'தலதா சிரித்'** என்ற நூலை எழுதியமை
- குருநாகலையில் தலதா மாளிகை அமைத்து அதன் பராமரிப்புக்கென கிராமங்களைத் தானமாக வழங்கியமை
- கண்டி அஸ்கிரிய பீடத்தை நிறுவியமை

கோட்டை அரசர்கள்

ஆறாம் பராக்கிரமபாகு

- கோட்டை அரசின் முதல் அரசன்
- வன்னிப் பிரதேசத்தை கோட்டை இராச்சியத்தின் கீழ் கொண்டு வந்தமை
- சப்புமல் குமாரனின் தலைமையில் படையனுப்பி யாழ்ப்பாண இராச்சியத்தை வெற்றி
- கொண்டமை
- மலைநாட்டு ஆட்சியாளனான ஜோதிய என்பவனின் கிளர்ச்சியை அம்புலுகல குமாரன் மூலம் அடக்கியமை
- சிறந்த அறிஞனாகவும், பண்டிதனாகவும் விளங்கியமை
- பிரிவெனாக்களை அமைத்தமை (பெப்பிலியான சுனேத்திராதேவி பிரிவெனா)

S.JEEVITHAN www.ikedu.lk

முதலாம் நகரமயமாக்கம் / இராசரட்டை நாகரிகம்

இராசதானிகள்	வேறு பெயர்கள்	முதல் மன்னன்	இறுதி மன்னன்	முக்கிய அரசர்கள்
அநுராதபுரம்	அபயபுரம் விசாலபுரம் பண்டுவ நகரம்	பண்டுகாபயன்	5ம் மகிந்தன்	பண்டுகாபயன் தேவநம்பியதீசன் துட்டகைமுனு வலகம்பா வசபன் மகாசேனன் தாதுசேனன் காசியப்பன்
பொலநறுவை	புலஸ்திபுரம் விஜயராயபுரம் ஜனநாதபுரம் பாசறைநகர்	1ம் விஜயபாகு	பராக்கிரமபாண்டியன்	1ம் விஜயபாகு 1ம் பராக்கிரமபாகு நிஸங்கமல்லன்

இரண்டாம் நகரமயமாக்கம் / தென்மேற்கு இராசதானிகள்

இராசதானிகள்	வேறு பெயர்கள்	முதல் அரசன்	இறுதி அரசன்	முக்கிய அரசர்கள்
தம்பதெனியா	ஜம்புதோனி தெனியாயபுர	3ம் விஜயபாகு	1ம் புவனேகபாகு	3ம் விஜயபாகு **2ம் பராக்கிரமபாகு** 4ம் விஜயபாகு 1ம் புவனேகபாகு
யாப்பகூவ	2ம் சிகிரியா சுபபர்வத சுந்தரகிரி பௌவதகூட	1ம் புவனேகபாகு	2ம் புவனேகபாகு	**1ம் புவனேகபாகு** 2ம் புவனேகபாகு
குருநாகல்	அத்துகல்யபுரம்	2ம் புவனேகபாகு	சவுலு விஜயபாகு	2ம் புவனேகபாகு **4ம் பராக்கிரமபாகு** 3ம் புவனேகபாகு சவுலு விஜயபாகு
கம்பளை	கங்கசிறிபுரம் வெள்ளையானை அரசு	4ம் புவனேகபாகு	பராக்கிரம ஏப்பா	**4ம் புவனேகபாகு** 5ம் பராக்கிரமபாகு **3ம் விக்கிரமபாகு** 5ம் புவனேகபாகு வீரபாகு **வீர அழகேஸ்வரன்**
கோட்டை	ஸ்ரீ ஜெயவர்த்தனபுர	6ம் பராக்கிரமபாகு	தர்மபாலன்	6ம் பராக்கிரமபாகு ஜயபாகு 6ம் புவனேகபாகு (சப்புமல் குமாரன்) 7ம் பராக்கிரமபாகு 8ம் வீரபராக்கிரமபாகு (அம்புலுகல குமாரன்) 9ம் தர்மபராக்கிரமபாகு 6ம் விஜயபாகு 7ம் புவனேகபாகு தர்மபாலன்

S.JESINTHAN
www.ikeduk

பொருளாதாரக் கட்டமைப்பு

❖ **விவசாயம்**

✓ மக்களின் ஜீவனோபாயமாக விவசாயமே திகழ்ந்தது.
✓ நெல் பிரதான பயிராக விளங்கியது.
✓ சேனைப் பயிர்ச்செய்கை இடம்பெற்றது.
✓ விவசாயத்திற்கு மழை நீரே பயன்படுத்தப்பட்டது.

❖ **வர்த்தகம்**

✓ வர்த்தகப் பொருளாதாரமுறை தோற்றம் பெற்றது.
✓ வெளிநாட்டு வர்த்தகத்தில் கறுவா முக்கிய இடத்தைப் பெற்றது.
✓ வாசனைத் திரவியங்கள் மற்றும் பெறுமதியான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டது.
✓ இந்தியா, அரேபியா, சீனா, பாரசீகம், எகிப்து போன்ற நாடுகளுடன் வர்த்தகம் இடம்பெற்றது.
✓ வெளிநாட்டு வர்த்தகம் அரசனின் ஏகபோக உரிமையாகக் காணப்பட்டது.
✓ பட்டுத்துணி, பீங்கான் பொருட்கள், நறுமணப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

சமய நடவடிக்கைகள்

✓ பிரதான சமயமாக பௌத்த மதம் விளங்கியது.
✓ தம்பதெனியா - கோட்டை காலம் வரை தலதாமாளிகை, விகாரைகள் அமைப்பதில் அரசர்கள் ஆர்வம் காட்டினர்.
✓ அரசர்கள் தெய்வங்கள் மீது நம்பிக்கை வைத்துச் செயற்பட்டனர்.
✓ விஸ்ணு, விபீசணன், முருகன், சமன் பொன்ற தெய்வங்களுக்கு வழிபாடுகள் நடைபெற்றன.
✓ இந்து சமயத்தவர்களுக்குரிய வழிபாட்டிடங்கள் பல அமைக்கப்பட்டிருந்தன.
✓ வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்களும் துறைமுக நகரங்களுக்கருகே பள்ளிவாசல்களை அமைத்து வழிபட்டனர்.

கட்டிடக்கலை அம்சங்கள்

➢ கட்டிட நிர்மாணங்கள் தென்னிந்தியச் செல்வாக்கை பிரதிபலிக்கின்றன.
➢ யாப்பகூவ கோட்டைக்குரிய படிவரிசை மற்றம் தூண்களில் பாண்டிய மற்றும் கம்பூச்சிய கலையம்சங்களைக் காணலாம்.
➢ புத்தர்சிலைமனைகளுடன் இணைந்ததாக கோயில்கள் அமைக்கப்பட்டன.
➢ கம்பளை காலத்தில் மூன்றாம் விக்கிரமபாகு அரசனால் அமைக்கப்பட்ட எம்பக்க தேவாலயம் மரச்செதுக்கற் கலைக்கு புகழ்பெற்ற இடமாக விளங்கியது.
➢ கம்பளை காலத்திற்குரிய சிறந்த கட்டிடங்களாக லங்காதிலக விகாரை, கடலாதெனிய விகாரை மற்றும் எம்பக்க தேவாலயம் கருதப்படுகின்றது.






காலம்	கட்டிடங்கள்	தொடர்புடைய அரசர்கள்
தம்பதெனியா	பெலிகல தலதாமாளிகை விஜயசுந்தாராமய விகாரை	மூன்றாம் விஜயபாகு
	தம்பதெனிய தலதாமாளிகை	இரண்டாம் பராக்கிரமபாகு
யாப்பகூவ	யாப்பகூவ தலதாமாளிகை	முதலாம் புவனேகபாகு
குருநாகலை	குருநாகலை தலதாமாளிகை கண்டி அஸ்கிரியபீடம்	நான்காம் பராக்கிரமபாகு
கம்பளை	லங்காதிலக விகாரை கடலாதெனிய விகாரை	நான்காம் புவனேகபாகு
	எம்பக்க தேவாலயம்	மூன்றாம் விக்கிரமபாகு
கோட்டை	பெப்பிலியான சுனேத்திராதேவிப் பிரிவெனா	ஆறாம் பராக்கிரமபாகு

S.THARMILAN www.ikeu.lk

இரண்டாம் நகராக்க கால இலக்கியங்கள்

காலம்	நூல்கள்	எழுதியவர்
தம்பதெனியா	கவிசிலுமின தம்பதெனிய கதிகாவத கந்தவுரு சிரித்த	இரண்டாம் பராக்கிரமபாகு
	சத்தர்மரத்னாவலிய	தர்மசேன தேரர்
	பூஜாவலிய யோகர்ணவய	புத்த புத்திர தேரர்
குருநாகலை	தலதா சிரித	நான்காம் பராக்கிரமபாகு

காலம்/யுகம்	எழுதப்பட்ட நூல்கள்
அநுராதபுரம்	தம்பியா அட்டுவா, ஹெரணசிக, சிகவலந்தவினிச, சியபஸ்லகர, சமந்தபாசாதிக
பொலநறுவை	முவதெவ்தாவத, சசதாவத, தர்மபிரதீபிகாவ, ரசவாகினிய, அமாவத்துர, புத்சரண
தம்பதெனியா	சத்தர்மரத்னாவலிய, பூஜாவலிய, கவிசிலுமின, வனவினிச சன்னய, விசுத்திமார்க்க சன்னய, கந்தவுருசிரித்த, யோகார்ணபய, சித்தசங்கராவ, சமந்தகூடவர்னணை
குருநாகல்	பன்சியபனஸ் ஜாதகய, உம்மக்க ஜாதகய, சிங்கள போதிவங்ச, சத்தர்மலங்கார, நிக்காய சங்கிரகய, பாலாவதார அன்னய, தம்பதெனி அஸன, தலதா சிரித, அனாகத வங்சய
கம்பளை	மயூர சந்தேசய, திசர சந்தேசய, சதக சந்தேசய, பாறம் சதகய, குவிசி விவரணய
கோட்டை	பரவி சந்தேசய, ஹிரா சந்தேசய, செலலிகினி சந்தேசய, ஹன்ச சந்தேசய, குத்தில காவிய, காவிய சேகர, புதுகுண அலங்கார, லோவெட சங்கராவ, பெரகும்பா சிரித்த, ரகுவம்சம்
யாழ்ப்பாணம்	யாழ்ப்பாண வைபவமாலை, செகராசகேரமாலை, தட்சணகைலாய புராணம், வையாபாடல்

S.JEEVITHAN www.ikeou.lk



கண்டி இராச்சியம்



பூகோள அமைப்பு



- இயற்கையான பாதுகாப்பு அரண்கள் நிறைந்த பிரதேசம்:-
  - நீர் அரண்
  - வன அரண்
  - மலை அரண்
- இதமான காலநிலையைக் கொண்ட பிரதேசம்
- மத்திய மலைநாடு
- வடகீழ், தென்மேல் பருவப்பெயர்ச்சிக் காற்றுக்களால் மழையைப் பெறும் பிரதேசம்

வேறு பெயர்கள்

- பஞ்ச மலைநாடு
- செங்கடகல
- மகாநுவர
- ஸ்ரீவர்த்தனபுர
- மலைநாடு

பஞ்ச மலைநாடு பிரதேசங்கள்

- ஹரிஸ்பத்துவ
- ஹேவாஹெட்ட
- மாத்தளை
- தும்பறை
- உடுநுவர

முக்கிய அம்சங்கள்

- இலங்கையின் இறுதி சுதந்திர அரசு
- அநுராதபுர இராசதானிக்கு அடுத்ததாக நீண்ட காலம் நிலைத்திருந்த இராசதானி (1469 - 1815)
- அச்சுறுத்தலாக விளங்கிய இராச்சியங்கள் :-
  கோட்டை, சீதாவாக்கை
- தலைநகரம் :- செங்கடகல
- ஆட்சிபுரிந்த அரச வம்சம் :- சிங்கள அரச வம்சம், தென்னிந்திய நாயக்க வம்சம்
- ஆட்சிபுரிந்த முதல் மன்னன் :- சேனாசம்மதவிக்கிரமபாகு
  இறுதி மன்னன் :- ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன்
- தோற்றம் பெற்ற ஆண்டு :- 1469
- வீழ்ச்சியடைந்த ஆண்டு :- 1815

ஆட்சிபுரிந்த அரசர்கள்

சிங்கள அரசர்கள்

- சேனாசம்மத விக்கிரமபாகு (1469-1511)
- ஜயவீர விக்கிரமபாகு (1511-1552)
- கரலியத்த பண்டார (1552-1582)
- முதலாம் இராஜசிங்கன் (1582-1591)
- முதலாம் விமலதர்மசூரியன் (1591-1604)
- செனரத் (1604-1635)
- இரண்டாம் இராஜசிங்கன் (1635-1687)
- இரண்டாம் விமலதர்மசூரியன் (1687-1707)
- ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்கன் (1707-1739)

S.THIVAKAR www.ikeau.lk

- ஸ்ரீ விஜயராஜசிங்கன் (1739-1747)
- கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் (1747-1782)
- இராஜாதி இராஜசிங்கன் (1782-1798)
- ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் (1798-1815)

நாயக்க அரசர்கள்

முதலாம் இராஜசிங்கன் (1582-1591)



- மாயாதுன்னையின் மகன்
- டிகிரி பண்டார/சீதாவாக்கை இராஜசிங்கன்
- சீதாவாக்கை இராச்சியத்தின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் காரணமான மன்னன்
- 1582 இல் வீரசுந்தர பண்டாரவின் உதவியுடன் கண்டியைக் கைப்பற்றினான்
- வீரசுந்தர பண்டாரவைக் கொலைசெய்து நிக்கப்பிட்டிய பண்டாரவை பிரதிநிதியாக நியமித்தான்.
- சைவசமயத்தைத் தழுவினான். பௌத்த விகாரைகள், நூல்களை அழித்தான்.
- முல்லேரியப் போரில் (1562) போர்த்துக்கேயரைப் படுதோல்வியடையச் செய்தான்.
- பெரண்டி கோயிலை அமைத்தான்.
- கனேதன்னப் போரில் (1592) முதலாம் விமலதர்மசூரியனால் தோற்கடிக்கப்பட்டான்.







போர்த்துக்கேயரிடம் தஞ்சமடைந்தோர்	அவர்களுக்குரிய கத்தோலிக்கப் பெயர்கள்
கரலியத்த பண்டார	தொன் ஜோவ்
குசுமாசனதேவி	தொன கதரீனா
யமசிங்க பண்டார	தொன் பிலிப்
கொணப்பு பண்டார	தொன் யுவான்
தர்மபாலன்	தொன் யுவான்

முதலாம் விமலதர்மசூரியன்



- ஆட்சிக் காலம் :- (1591-1604)
- தந்தை :- வீரசுந்தர பண்டார
- இளமைப் பெயர் :- கொணப்பு பண்டார
- கிறிஸ்தவப் பெயர் :- தொன் யுவான்
- வெற்றி கொண்ட போர்கள் :- கனேதன்ன, தந்துரே, பலன
- பௌத்த மதப்பணி :- கண்டி தலதாமாளிகை அமைத்தமை
- சந்தித்த ஒல்லாந்த தூதுக் குழுக்கள் :- ஸ்பில்பேகன் (1602), சீ போல்ட் த வாட்

S.JEEVITHAN www.ikedu.lk

முதலாம் விமலதர்மசூரிய மன்னன் (1592 - 1604)

யமசிங்க பண்டாரவின் பின்னர் மலைநாட்டு மன்னனான இவன் கண்டி இராச்சியத்தில் புதிய தோர் அரச வம்சத்தை ஆரம்பித்து வைத்தான். இவன் மன்னனானபோது எதிர்கொண்ட சவால்கள் பலவாகும். அவையாவன :

1. சட்ட பூர்வ ஆட்சி உரிமை இல்லாமை.
2. கண்டி இராச்சியத்தைப் போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தில் இருந்து பாதுகாக்க வேண்டி யிருந்தமை.
3. கண்டி இராச்சியத்தை சீதாவாக்கை ஆதிக்கத்தில் இருந்து காப்பாற்ற வேண்டியி ருந்தமை.
4. வீழ்ச்சியுற்றிருந்த பௌத்த சமயத்தை மீளவும் எழுச்சியுறச்செய்ய வேண்டியிருந்தமை.
5. கண்டி இராச்சியத்தின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டியிருந்தமை.

விமலதர்மசூரிய மன்னன் கண்டி இராச்சியத் தின் ஆட்சியின் சட்டபூர்வத் தன்மையை நிலைநாட்டிக் கொள்வதற்காகக் கீழ்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டான் :

1. கண்டி இராச்சியத்தின் அரசுரித்தாளியான குசுமாசன தேவியைத் திருமணம் செய்து கொண்டதன் மூலம் தனது ஆட்சி உரிமையை நிலைநாட்டிக் கொண்டமை.
2. றோமன் கத்தோலிக்க சமயத்தைக் கை விட்டுப் பௌத்த சமயத்தைத் தழுவிக் கொண்டமை.
3. விமலதர்மசூரிய என்ற பௌத்த நாமத்தை சூடிக் கொண்டமை.
4. சீதாவாக்கையின் தெல்கமு விகாரையில் இருந்த புனித தந்தத்தை கண்டியில் பிரதிஷ்டை செய்தமை.

சீதாவாக்கை இராச்சியத்தின் ஆதிக்கத்தில் இருந்து கண்டி இராச்சியத்தை சுதந்திர மடையச் செய்வதற்காக மக்களின் ஒத்துழைப் புடன் இராஜசிங்கனைத் தோற்கடித்தான்.

இவ்வரசன் கண்டி இராச்சியத்தைப் போர்த்துக்கேய ஆதிக்கத்திலிருந்து மீட்பதற் குக் கையாண்ட நடவடிக்கைகள் வருமாறு :

1. கி.பி.1594 ஆம் ஆண்டில் தந்துரை போரில் போர்த்துக்கேயரைப் படுதோல்வி அடையச்செய்தமை.
2. போர்த்துக்கேயருக்கு எதிராகத் தாழ் நாட்டில் ஏற்படும் கலவரங்களுக்கு உதவியளித்தமை.
3. போர்த்துக்கேயரை வெளியேற்றுவதற்கு ஒல்லாந்தரின் உதவியைப் பெற்றுக்கொள்ள முற்பட்டமை.



1ம் விமலதர்மசூரியனின் அரசியல் பணிகள்

- மலையக இராசதானிக்கு புதிய அரச பரம்பரையை உருவாக்கியமை
- தெல்கமுவ விகாரையிலிருந்த புனித தந்ததாதுவைப் பெற்று ஆட்சியுரிமையை உறுதிப்படுத்தியமை
- குசுமாசனதேவியை திருமணம் செய்து சட்டரீதியான ஆட்சியைப் பெற்றமை
- பல போர்களில் வெற்றி பெற்றமை- கனேதன்ன, தந்துரே, பலன
- சீதாவாக்கை இராசதானிக்குரிய பல பிரதேசங்களை கண்டி இராச்சியத்துடன் இணைத்தமை



1ம் விமலதர்மசூரியனின் சமயப்பணிகள்



- கண்டியில் தலதாமாளிகையை அமைத்து புனித தந்ததாதுவை பிரதிஸ்டை செய்தமை
- தலதா பெரஹரா ஊர்வல முறையை ஆரம்பித்தமை
- பர்மாவிலிருந்து பிக்குகளை வரவழைத்து உபசம்பதா சடங்கை நிகழ்த்தியமை
- பல விகாரைகளை புணரமைத்தமை - லங்காதிலக, கடலாதெனிய, தெகல்தொருவ, ரிதி விகாரை

www.ikeon.lk

1ம் விமலதர்மசூரியனின் பொருளாதாரப் பணிகள்

- விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகள் - கொத்மலை, வலப்பன, ஹரிஸ்பத்துவ
- புடைவை உற்பத்திக்குத் தேவையான பருத்தி செய்கையாளர்களையும், நெற்செய்கையாளர்களையும் ஊக்கப்படுத்தியமை
- ஊவா பிரதேசத்தில் இரும்புத் தொழிலை விருத்தி செய்தமை :- விவசாய உபகரணங்கள் செய்யப்பட்டமை, இரும்பை சூடாக்கும் கொல்லர் பட்டறை 175 அமைக்கப்பட்டமை

இரண்டாம் இராஜசிங்கன்

- ஆட்சிக்காலம் :-(1635-1687)
- இளமைப் பெயர் :- மகா அஸ்தான
- தந்தை :- செனரத்
- தாய் :- குசுமாசனதேவி
- சிறப்புக் கூற்று :- 'இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கியது போல'
- முக்கிய உடன்படிக்கை :- 1638 வெஸ்ர்ர்வோல்ட் உடன்படிக்கை
- வெற்றி பெற்ற போர்கள் :- ரந்தெனிவெல, கண்ணொருவ

II ஆம் இராஜசிங்க மன்னன்

(கி.பி.1635 - 1687)

கி.பி. 1635 ஆம் ஆண்டில் செனரத் மன்னன் மரணித்ததுடன் இரண்டாம் இராஜசிங்கன் கண்டி இராச்சியத்தின் மன்னனானான். இவன் தனது ஆட்சியின்போது எதிர்நோக்கிய சவால்களாவன :

1. கண்டி இராச்சியத்தின் மீதான போர்த்துக் கேயரின் தாக்குதல்களை அடக்குதல்.
2. போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளி யேற்றுதல்.
3. கண்டி இராச்சியப் பிரபுக்களிடமிருந்து ஏற்பட்ட எதிர்ப்புகளைக் கட்டுப்படுத்தல்.
4. ஒல்லாந்தரின் ஆக்கிரமிப்பில் இருந்து கண்டி இராச்சியத்தை காத்துக் கொள்ளல்.



2ம் இராஜசிங்கனின் அரசியற் செயற்பாடுகள்

- ஒல்லாந்தருடன் உடன்படிக்கை மேற்கொண்டமை :- 1638 வெஸ்ர்ர்வோல்ட் உடன்படிக்கை
- போர்த்துக்கேயரை நாட்டிலிருந்து விரட்டியமை
- பல போர்களில் வெற்றி பெற்றமை :- 1630 ரந்தெனிவெல, 1638 கண்ணொருவ
- மட்டக்களப்பு, திருகோணமலைத் துறைமுகங்களை கைப்பற்றியமை
- போர்த்துக்கேயர் வசமிருந்த பல பகுதிகளை கண்டி இராச்சியத்துடன் இணைத்தமை

www.ikeau.lk

போர்த்துக்கேயர் - சிங்கள அரசர்கள் தொடர்பான போர்கள்

ஆண்டு	போர்	தலைமை தாங்கிய போர்த்துக்கேயர்	எதிர்கொண்ட சிங்கள அரசர்
1562	முல்லேரியா	அபோன்சு பெரெய்ரா த லசர்தா	1 ஆம் இராஜசிங்கன் (டிகிரி பண்டார)
1594	தந்துரே	பேரோ லோபேஸ் டி சூசா	1 ஆம் விமலதர்மசூரியன் (கொணப்பு பண்டார)
1602	பலன	தொன் ஜெரனிமோ டி அசிவிடோ	1 ஆம் விமலதர்மசூரியன்
1630	ரந்தெனிவெல	கொன்ஸ்தாந்தின் டி சா	2 ஆம் இராஜசிங்கன்
1638	கண்ணொருவ	தியேகு த மெலோ கஸ்ரோ	2 ஆம் இராஜசிங்கன்

போர்த்துக்கேயர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற முடியாமற் போனமைக்குரிய காரணங்கள்


- கண்டி மக்கள் அரசனுக்கு விசுவாசமாக இருந்தமை
- கண்டிப் படையின் கெரில்லா தாக்குதல்
- கண்டி இராச்சியத்தின் புவியியல் அமைப்புப் பற்றி போர்த்துக்கேயர் அறிந்திராமை
- லஸ்கரின் படையினர் சிங்களப் படையுடன் இணைந்தமை
- கண்டி இராச்சியத்தின் இயற்கையான பாதுகாப்பு

கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்



- ஆட்சிக்காலம் :- (1747-1782)
- அரச வம்சம் :- நாயக்க வம்சம்
- ஆட்சிப் பொறுப்பை ஏற்றது :- 1750
- தந்தை :- நரனப்பா
- எதிர்கொண்ட சவால்கள் :- சிங்களப் பிரதானிகளின் எதிர்ப்பு ஒல்லாந்தரின் படையெடுப்பு - வான்எக்
- தொடர்புடைய உடன்படிக்கை :- 1766 வில்லியம்பல்க் உடன்படிக்கை
- சந்தித்த ஆங்கிலேயத் தூதுவன் :- ஜோன் பைபஸ்-1762

கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனின் பௌத்த மதப் பணிகள்




- உபசம்பதா சடங்கை மீளவும் நடத்தியமை
- சீயம் நாட்டிலிருந்து உபாலி மகா தேரர் தலைமையில் பிக்குகளை வரவழைத்தமை
- சீயம் மதப்பிரிவை இலங்கையில் ஏற்படுத்தியமை
- வெலிவிட்ட சரணங்கரதேரரின் சமய, கல்விப்பணிகளுக்கு ஆதரவு வழங்கியமை
- தலதா, தேவாலய பெரஹராவை இணைத்து எசல பெரஹராவை முன்னேற்றினான்
- சிதைவுற்ற விகாரைகளை திருத்தினான்
- விகாரைகளை கொண்டு நடாத்துவதற்கு நில புலன்களை அளித்தான்

CJESTHAM www.ikeou.lk



ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்






- ஆட்சிக்காலம் :- 1798-1815
- இளமைப் பெயர் :- கண்ணுசாமி
- ஆட்சியில் அமர்த்தியவர் :- பிலிமத்தலாவ
- எதிர்கொண்ட பிரித்தானியப் படையெடுப்புக்கள் :- 1803 பிரட்றிக் நோர்த் படையெடுப்பு
  1815 றொபேட் பிறவுன்றிக் படையெடுப்பு
- கைது செய்யப்பட்ட இடம் :- மெதமஹநுவர
- கைது செய்தவர் :- றொபேட் பிறவுன்றிக்
- 'கொன்வோலிஸ்' கப்பல் மூலம் வேலூர் சிறைக்கு கொண்டு சென்றமை
- இலங்கையின் இறுதி மன்னன்
- கண்டி தலதாமாளிகையில் மனங்கவர் பார்த்திருப்பு (பட்டிருப்பு) மண்டபத்தை அமைத்தமை
- பாற்கடல் எனப்படும் போகம்பர வாவியை அமைத்தமை

பிரித்தானியர் கண்டியைக் கைப்பற்ற உதவிய காரணிகள்

- றொபேட் பிறவுன்றிக்கின் திட்டமிட்ட படையெடுப்பு
- ஜோன் டொயிலியின் உளவு செயற்பாடு
- பிரித்தானியர் பிரதானிகளின் ஆதரவைப் பெற்றமை :- எகலப்பொல, மொல்லிக்கொட
- ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனை கண்டி சமூகத்தினர் வெறுத்தமை :-
  பிரதானிகள், மக்கள், பௌத்த பிக்குகள்


கண்டி இராச்சிய நிர்வாகக் கட்டமைப்பு



S. JESINTHAN www.lkedu.lk

அரசனின் அதிகாரங்கள்


- நாட்டின் உயர் அதிகாரம் கொண்டவன்
- நாட்டின் அமைதி, பாதுகாப்பைப் பேணல்
- நாட்டின் சம்பிரதாயங்கள், மரபுகளுக்கமைய செயற்படல்
- உயர் நீதித்துறை அதிகாரம் உ+ம் :- மரணதண்டனை வழங்கல்
- நாட்டின் அரசியல், பொருளாதார, நிர்வாகப் பணிகளுக்கு தலைமை வகித்தல்



- பிரதானிகளின் கட்டளைகளையும், செய்திகளையும் பிராந்திய அதிகாரிகளுக்கு கொண்டு சென்றவர்கள் **கடுபுள்ளே** எனக் குறிப்பிடப்பட்டனர்.
- வெள்ளி பூண் இடப்பட்ட முனை வளைந்த பிரம்பு அவர்களது பதவியின் அடையாளமாக விளங்கியது.

அரச மாளிகை அதிகாரிகள்	பொறுப்புக்கள்
கஜநாயக்க நிலமே	யானைகளுக்குப் பொறுப்பானவர்
மகாலேக்கம்	பிரதம செயலாளர்
தியவடனே நிலமே	புனித தந்ததாதுவிற்குப் பொறுப்பானவர்
சலுவடனே நிலமே	ஆடையணிகளுக்குப் பொறுப்பானவர்
பத்வடனே நிலமே	உணவு வழங்கலுக்குப் பொறுப்பானவர்
குதிரைலாய முகாந்திரம்	குதிரைகளுக்குப் பொறுப்பானவர்
மகா மொஹட்டால	அரச மாளிகைச் செயலாளர்
அதபத்துவே லேக்கம்	அரசனின் பாதுகாப்புத் தலைமை அதிகாரி
வெடிக்கார லேக்கம்	துப்பாக்கிப் படை அதிகாரி
நாணயக்கார லேக்கம்	திறைசேரிப் பொறுப்பதிகாரி
மதிலேக்கம்	போக்குவரத்துப் பொறுப்பதிகாரி

www.kesu.lk



வழங்கப்பட்ட தண்டனைகள்

- கன்னத்தில் அறைதல்
- விலங்கிடுதல்
- முழந்தாழிடச் செய்தல்
- முடியைக் கத்தரித்தல்
- தென்னை மட்டையால் அடித்தல்
- துர்நாற்றத்தின் மத்தியில் வைத்தல்
- கசையால் அடித்தல்
- கீழ் குலத்தவராக்குதல்
- நாடு கடத்தல்
- நீரில் மூழ்கடித்துக் கொல்லல்
- யானையால் மிதித்துக் கொல்லல்

மன்னனால் மட்டும் விசாரிக்கப்படும் வழக்குகள்

- முக்கிய தலைவர்கள் தொடர்பானவை
- விகாரைகள், பிக்குகள் தொடர்பானவை
- இராஜதுரோக வழக்குகள்
- கிளர்ச்சிகள், குழப்பங்கள் தொடர்பானவை
- சூழ்ச்சி தொடர்பானவை

பொருளாதார அமைப்பு

- நுகர்வை அடிப்படையாகக் கொண்ட விவசாயப் பொருளாதாரம்
- சுயதேவைப்பூர்த்திப் பொருளாதாரம்
- வரையறுக்கப்பட்ட நெற்செய்கை
- பெருவாரியான நிலம் சேனைப் பயிர்ச்செய்கைக்குட்படுத்தப்பட்டது
- வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை இடம்பெற்றது
- பல்வேறு கைத்தொழில்கள் இடம்பெற்றன
- மிருக வளர்ப்பு இடம்பெற்றது

நிலம் பிரிக்கப்பட்ட முறை

- கபாடகம் :- அரசமாளிகைக்காகப் பயன்படுத்தப்பட்டவை
- நிந்தகம் :- பிரதானிகளின் சேவைக்காக வழங்கப்பட்டவை
- தேவாலயம், விகாரகம் :- தேவாலயங்கள் மற்றும் விகாரைகளுக்கு தானமளிக்கப்பட்டவை
- பரவேனி :- கிராமத்தவர்கள் பரம்பரையாக அனுபவித்தவை

சமூக அமைப்பு

- கிராமிய சமூக அமைப்பு
- இராஜகாரியமுறை காணப்பட்டது
- அத்தம்முறை காணப்பட்டது
- குலத்தை அடிப்படையாக கொண்ட சமூக அமைப்பு
- பல்வேறு திருமண முறைகள் (தீக, பின்ன, பல புருசர்)
- குடும்பம் பிரதான சமூக அலகு
- நற்பண்புகளைக் கொண்ட சமூகம்
- கிராமிய வாழ்க்கையின் பிரிக்க முடியாத அம்சமாக விகாரைகள் காணப்பட்டன.

S.JEEVAN
www.ikedu.lk

மறுமலர்ச்சி

அறிமுகம்

- பொருள் - மீண்டும் மலர்தல்/ மீள உதித்தல்/ மறுபிறப்பு/ புதிய பிறப்பு
- விளக்கம் - 14ம்,15ம்,16ம் நூற்றாண்டுகளில் கிரேக்க - உரோமப் பண்பாட்டினைப் பெற்று ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல், பொருளாதாரம், சமூகம், பண்பாடு, விஞ்ஞானம் போன்ற துறைகளில் ஏற்பட்ட எழுச்சி மறுமலர்ச்சி எனப்படும்.
- முதலில் ஏற்பட்ட நாடு - **இத்தாலி**

மறுமலர்ச்சி முதலில் இத்தாலியில் ஏற்பட்டமைக்குரிய காரணங்கள்

- பங்களிப்புச் செய்யக்கூடிய பணக்கார வர்க்கம் காணப்பட்டமை - **மெடிசி குடும்பம்**
- புராதன கிரேக்க - உரோம நாகரீகத்தின் மத்திய நிலையமாக திகழ்ந்தமையால் அவற்றின் எச்சங்கள் காணப்பட்டமை
- கொன்ஸ்தாந்திநோபிளிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பழம்பெரும் நூல்கள் கிடைக்கப் பெற்றமை
- பல பல்கலைக்கழகங்கள் காணப்பட்டமை - **பொலஞ்ஞா, பாதுவா**

மறுமலர்ச்சிக்கான காரணங்கள்

உடனடிக் காரணம்:-


- 1453ல் கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியரால் கைப்பற்றப்பட்டமை

ஏனைய காரணங்கள்

- ஐரோப்பிய வர்த்தக வளர்ச்சி
- பல்கலைக்கழகங்களின் தோற்றம்
- அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்பட்டமை
- அரசர்களின் ஊக்குவிப்புக்கள்
- சமயத்தலைவர்கள் அறிவுத்துறை வளர்ச்சிக்கு உதவியமை

மறுமலர்ச்சிக் காலத்தில் தோன்றிய பல்கலைக்கழகங்கள்

- இத்தாலி :- பொலஞ்ஞா, பாதுவா
- பிரான்ஸ் :- பரிஸ்
- இங்கிலாந்து :- ஒக்ஸ்போட், கேம்பிரிட்ஜ்
- ஸ்பானியா :- சலமனிக்கா




S. JEYANTHAN www.ikedu.lk

அரசியல் மறுமலர்ச்சி


தேசிய அரசு

- வரையறுக்கப்பட்ட எல்லைகளுக்குள் வாழ்ந்த ஒரே மொழியைப் பேசுகின்ற ஒரே கலாசாரத்தைக் கொண்ட மக்கள் குழுக்கள் அரசன் ஒருவனின் தலைமையின் கீழ் ஐக்கியப்படுத்தலின் மூலம் உருவாக்கப்பட்டதே தேசிய அரசு ஆகும்.
- ஐரோப்பாவில் தோன்றிய முதலாவது தேசிய அரசு - **ஸ்பானியா**
- ஏனைய தேசிய அரசுகள் - போர்த்துக்கல், பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி







விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள்




விஞ்ஞானிகள்	கண்டுபிடிப்புக்கள் - சிறப்புப்பெயர்கள்
நிக்கலஸ் கொப்பணிக்கஸ்	➢ சூரியமையக்கொள்கை ➢ உலகம் கோளவடிவானது ➢ கோள்கள் சூரியனை சுற்றிவருகின்றன ❖ **வானியல் விஞ்ஞானத்தின் தந்தை**
கலிலியோகலிலி	➢ தொலைநோக்கி ➢ ஊசல் தத்துவ விதி ➢ சூரியனில் புள்ளிகள் ➢ சந்திரனில் மலைகள் குழிகள் ❖ **செயற்பாட்டு விஞ்ஞானத்தின் தந்தை**
ஜொஹன்னஸ் கெப்லர்	➢ கோள்கள் அனைத்தும் சூரியனை நீள்வட்டப்பாதையில் சுற்றிவருகின்றன ❖ **மறுமலர்ச்சிக்கால சிரேஸ்ட விஞ்ஞானி**
ஐசக் நியூட்டன்	➢ புவியீர்ப்புச் சக்தி ❖ **சிறந்த நட்சத்திரவியலாளர்**
வில்லியம் ஹார்வே	➢ குருதிச் சுற்றோட்டம் பற்றிய முழுமையான கருத்து

S. JEGATHEESAN www.ikeduk


ஓவியக் கலை

ஓவியக்கலைஞர்கள்	பிரசித்தி பெற்ற ஓவியங்கள்
லியனாடோடாவின்சி	❖ மொனலிசா ❖ இறுதிஇராப்போசனம்
மைக்கல்அஞ்சலோ	❖ சிஸ்டைன் தேவாலய விதான ஓவியம் ❖ இறுதித்தீர்ப்பு
ரபாயேல்	❖ எதென்சின் பாடசாலை ❖ கன்னிமரியாள்
பெற்றிஷெல்லி	❖ வேஜின்கிறைஸ்ற்




சிற்பக்கலை

சிற்பக்கலைஞர்கள்	பிரசித்தி பெற்ற சிற்பங்கள்
மைக்கல்அஞ்சலோ	❖ பீட்டா (பியெட்டா) சிற்பம் ❖ டேவிட் உருவச்சிலை ❖ மெடிசியின் பளிங்குச்சிலை ❖ மோசஸின் உருவம்
டொனெடெலோ	❖ புனித ஜோர்ஜ் உருவம் ❖ டேவிட் சிலை

கலைத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்



- ❖ உலகியலை முதன்மையாகக் கொண்ட கலைப்படைப்புக்கள் தோற்றம் பெற்றன
- ❖ கலைஞர்கள் சுயமாக செயற்பட்டு தமது படைப்புக்களை வெளிக்கொணர்ந்தனர்
- ❖ லௌகீக இரசனையின் பொருட்டு இயற்கைக்கு முதலிடமளித்து சித்திரங்கள், சிற்பங்கள் நிர்மாணிக்கப்பட்டன
- ❖ பளிங்குக்கற்களில் சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டன
- ❖ உரோம கட்டடக்கலைக்கு அமைய வட்டவடிவிலான வில்வளையம், உயர்ந்த தூண், அரைவட்ட சிகரம் என்பன கட்டடக்கலையில் முக்கியத்துவம் பெற்றன

S.JEBATHAN www.ikedu.lk

இலக்கியத் துறை

நாடு	எழுத்தாளர்கள்	இலக்கியங்கள் / சிறப்புப் பெயர்கள்
இத்தாலி	தாந்தே	டிவினா கொமிடியா **இலக்கியத்தின் தந்தை**
இத்தாலி	பிரான்சிஸ் பெட்ராக்	லோராவுக்கு எழுதப்பட்ட கவிதை **மானிடவியலின் தந்தை**
இத்தாலி	ஜியோவானி பொக்காசியோ	டீ கமரன்
இத்தாலி	நிக்கோலாய் மாக்கியவெலி	இளவரசன்
பிரித்தானியா	தோமஸ்மூர்	யுடோப்பியா
பிரித்தானியா	பிரான்சிஸ் பேகன்	**ஆங்கில இலக்கிய எழுச்சியின் தாரகை**
ஒல்லாந்து	டெசிடேரியஸ் இராஸ்மஸ்	மூடர்களைப் பாராட்டல்

நாடுகாண்பயணங்கள்


தாய்நாடுகள்	ஆண்டு	நாடுகாண் பயணிகள்	கண்டுபிடித்த பிரதேசம்
போர்த்துக்கல்	1488	பார்த்தலோமியஸ் டயஸ்	புயல்முனை
போர்த்துக்கல்	1498	வஸ்கொடகாமா	கள்ளிக்கோட்டை
போர்த்துக்கல்	1500	கப்ரால்	பிறேசில்
ஸ்பானியா	1492	கொலம்பஸ்	கரீபியன் தீவு (அமெரிக்கா)
இத்தாலி	1498	அமெரிக்கோ வெஸ்புசி	அமெரிக்கா
இத்தாலி	1497	ஜோன்கபோட், செபஸ்தியன்கபோட்	கனடா (கேப்பிரிட்டன் தீவு)
இத்தாலி	1519	மகலன்	பிலிப்பைன்ஸ் தீவு
ஸ்பானியா	1513	பல்போவா	பனாமா
ஸ்பானியா	1519	ஹர்னான்டோ கொட்டேஸ்	மெக்சிக்கோ
ஸ்பானியா	1553	பிரான்சிஸ்கோ பிசாரோ	பேரு
பிரான்ஸ்	1535	ஜெக்விஸ் காட்டியர்	சென்லோறன்ஸ் நதி
பிரான்ஸ்	1573	ஜோலைட், தலாசலே	மிசிசிப்பி ஆறு
பிரான்ஸ்	1608	சம்ப்ளேன் மார்க்விடே	குவிபெக்
பிரித்தானியா	1609	ஹென்றி ஹட்சன்	ஹட்சன் ஆறு, ஹட்சன் குடா

S.THIVAHAN www.ieou.lk

நாடுகாண் பயணத்திற்கு வித்திட்ட காரணிகள்

- 1453ல் கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியரால் கைப்பற்றப்பட்டமை
- புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள்
- தேசிய அரசர்களின் அனுசரணை
- முஸ்லிம்களிடம் இருந்த கீழைத்தேச வர்த்தகத்தை பெற்றுக் கொள்ளல்
- பெஸ்டர் ஜோண் எனும் பேரரசரின் கீழ் பரந்த கிறிஸ்தவப் பேரரசு உள்ளது என்ற நம்பிக்கையில் அதனைத் தேடிச் செல்லல்
- ஐரோப்பிய நாடுகள் கடலை அண்மித்துக் காணப்பட்டமை


நாடுகாண் பயணங்களுக்கு அனுசரணை வழங்கிய தேசிய அரசர்கள்



4 ஆம் ஹென்றி
(போர்த்துக்கல்)



பேடினன்ட், இசபெல்லா
(ஸ்பானியா)



7 ஆம் ஹென்றி
(இங்கிலாந்து)

நாடுகாண் பயணங்களின் விளைவுகள்

- புதிய பிரதேசங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை
- குடியேற்றவாதம் ஆரம்பமாகியமை
- சர்வதேச வர்த்தகம் விருத்தியடைந்தமை
- கைத்தொழிற்புரட்சிக்கு வழிவகுத்தது
- ஐரோப்பிய நாகரீகம் பரவலடைந்தமை
- சமயப்பிரசார நடவடிக்கைகள் பரவலடைந்தமை

மதச்சீர்திருத்த இயக்கம்

- தோற்றம் பெற்ற ஆண்டு :- 1517
- தோற்றம் பெற்ற நாடு :- ஜேர்மனி
- பரவிய நாடுகள் :- பிரான்ஸ், டென்மார்க், நோர்வே, சுவீடன், சுவிஸ்
- இவ் இயக்கத்தின் தந்தை :- **மாட்டின்லூதர்**
- தொடர்புடையவர்கள் :- மாட்டின்லூதர், ஜோன் கல்வின், ஜோன் ஹஸ், உல்ரிச் சுவிங்லி,இராஸ்மஸ், ஜோன்வைக்களிப்
- இவ் அமைப்பின் சர்வதேச மத்திய நிலையம் அமைந்துள்ள இடம் :- **ஜெனீவா**

மாட்டின்லூதர்



- மதச்சீர்திருத்த இயக்கத்தின் தந்தை
- விட்டன்பேர்க் பல்கலைக்கழகப் பேராசிரியர்
- ஒகஸ்டின் சபையைச் சேர்ந்த குரு
- பைபிளை ஜேர்மன் மொழியில் மொழிபெயர்த்தவர்
- பாப்பரசர் பத்தாம் லியோவின் அறிவுறுத்தலின்படி சக்கரவர்த்தி 5ம் சார்ள்ஸ் 1520ல் லூதரை கிறிஸ்தவ மதத்திலிருந்து நீக்கியதாக அறிவித்தார்
- சாக்ஸனி இளவரசன் லூதருக்கு அபயமளித்தான்

S.JEEVAN
www.ikedu.lk

மதச் சீர்திருத்தத்திற்கான காரணங்கள்

- **உடனடிக் காரணம்:-** 1517ல் ஜேர்மனியின் விற்றன்பேர்க்கில் பாப்பரசர் 10ம் லியோவின் பிரதிநிதி ரெட்சல் "பாவமன்னிப்புப் பத்திரங்கள்" விற்பனை செய்வதை எதிர்த்து மாட்டின்லூதர் தனது புகழ்பெற்ற 95 நியாயங்களை விற்றன்பேர்க் ஆலயக் கதவில் ஒட்டியமை.

ஏனைய காரணங்கள்

- கத்தோலிக்க திருச்சபையிடம் காணப்பட்ட அதிகளவிலான அதிகாரங்கள்
- கத்தோலிக்க திருச்சபையின் ஊழல்கள்
- அறிஞர்களின் கண்டனங்கள்
- மறுமலர்ச்சியால் ஏற்பட்ட சிந்தனை வளர்ச்சி காரணமாக திருச்சபையின் தவறுகளை மக்கள் கண்டித்தமை
- அரசர்களின் ஆதரவு - இங்கிலாந்தின் 8ம்ஹென்றி

மதச்சீர்திருத்தத்தின் விளைவுகள்

- ஐரோப்பாவின் சமய ஒருமைப்பாடு குலைந்து புதிய சமயக் கொள்கைகள் தோன்றியமை
- கிறிஸ்தவ திருச்சபை பிளவுபட்டமை
- புனித உரோமப் பேரரசின் செல்வாக்கு குன்றியமை
- பிராந்திய சிற்றரசர்களின் பலம் அதிகரித்தமை
- மிசனரி இயக்கங்கள் தோற்றம் பெற்றமை
- மக்கள் பல்வேறு உரிமைகளைப் பெற்றனர்

மறுமலர்ச்சியால் ஐரோப்பாவின் அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள்

- தேசிய அரசுகள் தோற்றம் பெற்றமை
- அனைத்து அதிகாரங்களும் அரசனை மையமாகக் கொண்டு விளங்கின
- மத்திய வகுப்பினர் தோற்றம் பெற்றமை
- பிரபுக்களின் அதிகாரங்களும், உரிமைகளும் நலிவுறத் தொடங்கின
- தேசிய அரசர்கள் நிர்வாக செயற்பாடுகளில் மத்திய வகுப்பினரின் உதவியைப் பெற்றனர்
- அரசருக்கு நிரந்தரமான இராணுவப்படை இருந்தமை
- நாடு முழுவதும் ஒரே சட்டமும் வரிமுறையும் அமுல்படுத்தப்பட்டது

மறுமலர்ச்சியால் ஐரோப்பாவில் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்கள்

- சுயதேவைப் பொருளாதாரமுறை மாற்றமடைந்து வர்த்தக முன்னேற்றம் ஏற்பட்டது
- வர்த்தகத்தை விரிவடையச்செய்யும் பொருட்டு தேசிய அரசுகள் அணுசரணை வழங்கின
- ஐரோப்பிய நாடுகளில் வர்த்தகக்கொள்கை மற்றும் வரிக்கொள்கை என்பன செயற்படத் தொடங்கின
- கீழைத்தேசங்களுடனும் அமெரிக்காவுடனும் வர்த்தகத் தொடர்புகள் ஏற்பட்டன
- பணப்புழக்கம் அதிகரித்தது
- காசோலை முறையும் வங்கி முறையும் ஆரம்பமாகின
- வர்த்தக நகரங்கள் பல தோன்றின

S.JEEVITHAN www.ikeou.lk

மறுமலர்ச்சியால் இலங்கையின் அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள்

- ✓ இலங்கையில் நிலவிய மன்னராட்சி முறை முடிவுக்கு கொண்டுவரப்பட்டது
- ✓ பாராளுமன்ற ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது
- ✓ பிரதேச ஆட்சிமுறை மாற்றமடைந்தது
- ✓ பழைய வழக்காற்றுச் சட்டதிட்டங்கள் மறைந்தன
- ✓ உரோம டச்சுச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது
- ✓ ஐரோப்பிய சட்ட அடிப்படைகளுக்கு ஏற்ப சட்டத்தொகுதியும் நீதிமன்றத்தொகுதியும் நிறுவப்பட்டன

மறுமலர்ச்சியால் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்கள்

- இலங்கைக்கும் ஐரோப்பாவுக்குமிடையில் நெருங்கிய வர்த்தகத் தொடர்பு ஆரம்பமாகியது
- சுயதேவைப்பூர்த்திப் பொருளாதார முறை வீழ்ச்சியுற்றது
- ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதார முறை தோன்றியது
- புதிய வர்த்தகப்பயிர்கள் பயிரிடப்பட்டன
- பணப்புழக்கம் அதிகரித்தது
- போக்குவரத்துத்துறை வளர்ச்சியடைந்தது
- வர்த்தக நகர்கள் தோன்றின
- மத்தியவகுப்பினர் தோன்றியமை

மறுமலர்ச்சியால் இலங்கையில் ஏற்பட்ட சமூக பண்பாட்டு மாற்றங்கள்

- ➢ அறிவுத்துறை வளர்ச்சியடைந்தது
- ➢ ஐரோப்பிய சிந்தனையும் இலக்கியமும் இந்நாட்டிற்கு கிடைத்தது
- ➢ மேற்கத்தைய சிந்தனைகள் இந்நாட்டில் நுழைய வழியாக அமைந்தது
- ➢ ஐரோப்பிய சமயப்பிரிவுகள் தோன்றின
- ➢ மேலைத்தேய கல்வி முறை பரவியது
- ➢ புதிய தொழில்வாய்ப்புக்கள் பெருகின
- ➢ மத்திய வகுப்பினர் தோற்றம் பெற்றமை
- ➢ ஐரோப்பிய கட்டடக்கலையம்சங்கள் பரவின
- ➢ ஐரோப்பிய கலாசாரம் இந்நாட்டில் பரவியது

S. JEYANTHAN www.lkedu.lk

இலங்கையும் மேற்குலகும்

ஆசிய – ஐரோப்பிய வர்த்தகத் தொடர்பு நிலவிய பாதைகள்

- ❖ சீனா ⟷ மத்திய ஆசியா ⟷ பாரசீகம் ⟷ கொன்ஸ்தாந்திநோபிள் **(பட்டுப் பாதை)**
- ❖ இந்துசமுத்திரம் ⟷ செங்கடல் ⟷ எகிப்து ⟷ மத்தியதரைக்கடல் ⟷ கொன்ஸ்தாந்திநோபிள்
- ❖ இந்தியா ⟷ பாரசீகக்குடா ⟷ பாக்தாத் ⟷ கொன்ஸ்தாந்திநோபிள்

ஐரோப்பியர் ஆசியாவிற்கு வந்ததன் நோக்கங்கள்

- ➢ பொருளாதார ரீதியாக இலாபம் பெறல்
- ➢ ஆசிய வர்த்தக உரிமையைப் பெறல்
- ➢ தமது சமயத்தைப் பரப்பல்
- ➢ உலக ரீதியாகப் புகழ் பெறல்

ஆசியாவிற்கு வருகை தந்த போர்த்துக்கேயர்

- முதலாவது போர்த்துக்கேயர் :- **வஸ்கொடகாமா (நாங்கள் வாசனைத் திரவியங்களையும், கிறிஸ்தவர்களையும் தேடி வந்தோம்)**
- வருகை தந்த ஆண்டு :- **1498**
- வந்திறங்கிய இடம் :- **கள்ளிக்கோட்டை**
- கீழைத்தேச மத்திய நிலையம் **:- கோவா**

இலங்கைக்கு வருகை தந்த போர்த்துக்கேயர்

- ➢ முதலாவது போர்த்துக்கேயர் :- **லோறன்சோ டி அல்மேடா**
- ➢ வருகை தந்த ஆண்டு :- **1505**
- ➢ வந்திறங்கிய இடம் :- **காலி**
- ➢ முதலில் தொடர்பு கொண்ட இராச்சியம் **:- கோட்டை**
- ➢ தொடர்பு கொண்ட கோட்டை அரசன் **:- எட்டாம் வீரபராக்கிரமபாகு**
- ➢ தொடர்புடைய கூற்று **:- 'பறங்கி கோட்டைக்கு போனது போல'**

போர்த்துக்கேயர் இலங்கை வந்த போது காணப்பட்ட இராச்சியங்கள் மற்றும் அவற்றின் அரசர்கள்

- கோட்டை :- எட்டாம் வீரபராக்கிரமபாகு
- கண்டி :- சேனாசம்மதவிக்கிரமபாகு
- யாழ்ப்பாணம் :- பரராசசேகரன்

விஜயபாகு கொலை

- ❖ கோட்டை அரசன் ஆறாம் விஜயபாகு தனது முதலாவது திருமணத்தின் மூலம் பிறந்த ஏழாம் புவனேகபாகு, மாயாதுன்னை, றைகம பண்டார ஆகிய புதல்வர்களுக்கு அரசுரிமையை வழங்காது, தேவராஜனுக்கு அரசுரிமையை வழங்க முற்பட்டதால் கண்டி மன்னன் ஜயவீர பண்டாரவின் உதவியைப் பெற்று கோட்டைக்கு வந்து அரசைப் பெற முயன்ற போது சலமான் என்பவனால் ஆறாம் விஜயபாகு கொலை செய்யப்பட்டான்.
- ❖ 1521 இல் இந்நிகழ்வு இடம்பெற்றது.

விஜயபாகு கொலையின் விளைவுகள்

- ➢ கோட்டை இராச்சியம் மூன்றாகப் பிரிந்தது.
- ➢ கோட்டை இராச்சியத்தின் பலம் குன்றியது.
- ➢ கோட்டை இராச்சியம் போர்த்துக்கேயர் வசமாகக் காரணமாகியது.

G. JEGUNTHAN www.tegu.lk

விஜயபாகு கொலையால் பிரிந்த இராச்சியங்கள் மற்றும் அவற்றின் அரசர்கள்

- கோட்டை :- ஏழாம் புவனேகபாகு
- சீதாவாக்கை :- மாயாதுன்னை
- றைகம :- றைகம பண்டார

தர்மபாலன் கோட்டை மக்களின் ஆதரவை இழந்தமைக்கான காரணங்கள்

- போர்த்துக்கேயரின் கைப்பொம்மையாக விளங்கியமை
- கத்தோலிக்க சமயத்தைத் தழுவியமை
- கத்தோலிக்க சமயம் பரவ அனுமதித்தமை
- போர்த்துக்கேயரால் கோட்டை மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்காமை

சீதாவாக்கை இராச்சியம்

- தோற்றம் பெற்ற ஆண்டு :- 1521
- முதல் மன்னன் :- மாயாதுன்னை
- இறுதி மன்னன் :- டிகிரி பண்டார (முதலாம் இராஜசிங்கன்)
- எழுச்சிக்கும், வீழ்ச்சிக்கும் காரணமானவன் :- முதலாம் இராஜசிங்கன்

எழுச்சிக்கான காரணங்கள்

- பலமான அரசர்கள் காணப்பட்டமை
- 1538 இல் றைகம, சீதாவாக்கையுடன் இணைக்கப்பட்டமை
- 1557 இல் தர்மபாலன் கத்தோலிக்க சமயத்திற்கு மாறியமை
- 1582 இல் கண்டி இராச்சியம் சீதாவாக்கையுடன் இணைக்கப்பட்டமை
- சீதாவாக்கை அரசர்களுக்கு மக்களின் ஆதரவு கிடைத்தமை

வீழ்ச்சிக்கான காரணங்கள்

- ✓ முதலாம் இராஜசிங்கனின் தூரநோக்கற்ற செயற்பாடு
- ✓ முதலாம் இராஜசிங்கன் சைவ சமயத்தைத் தழுவியமை
- ✓ பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமை
- ✓ முதலாம் இராஜசிங்கன் வாரிசு இன்றி இறந்தமை

யாழ்ப்பாண இராச்சியம்

- முதல் மன்னன் :- விஜயகூழங்கை
- போர்த்துக்கேயர் வந்த போது ஆட்சி செய்தவன் :- பரராசசேகரன்
- இறுதி மன்னன் :- இரண்டாம் சங்கிலி
- தலைநகரம் :- நல்லூர்
- ஆட்சிபுரிந்த வம்சம் :- ஆரியச்சக்கரவர்த்திகள் (12)
- தொடர்புடைய மூலாதாரங்கள் :- யாழ்ப்பாணவைபவமாலை
  செகராசசேகரமாலை
  தட்சணகைலாயபுராணம்
  வையாபாடல்

போர்த்துக்கேயர் - யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பு

- ❖ பரராஜசேகரன் ⟶ சங்கிலி ⟶ காசிநைனார் ⟶ பெரியபிள்ளை ⟶ புவிராசபண்டாரன் எதிர்மன்னசிங்கன் ⟶ இரண்டாம் சங்கிலி

S.JESINTHAN www.ivedu.lk

போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியம் மீது மேற்கொண்ட படையெடுப்புக்கள்

ஆண்டு	போர்த்துக்கேயத் தளபதி	யாழ்ப்பாண மன்னன்
1543	மாட்டின் அபோன்சு த சூஸா	முதலாம் சங்கிலி
1560	கொன்ஸ்ரன்ரைன் டி பிரகன்ஸா	முதலாம் சங்கிலி
1591	பர்னாதோ மெடொன்சா	புவிராசபண்டாரன்
1619	பிலிப் த ஒலிவேரா	இரண்டாம் சங்கிலி

போர்த்துக்கேயருக்கு சார்பானவர்கள்	போர்த்துக்கேயருக்கு எதிரானவர்கள்
பெரியபிள்ளை, எதிர்மன்னசிங்கன்	முதலாம் சங்கிலி, புவிராசபண்டாரன், இரண்டாம் சங்கிலி

போர்த்துக்கேயர் - சிங்கள அரசர்கள் தொடர்பான போர்கள்

ஆண்டு	போர்	தலைமை தாங்கிய போர்த்துக்கேயர்	எதிர்கொண்ட சிங்கள அரசர்
1562	முல்லேரியா	அபோன்சு பெரெய்ரா த லசர்தா	1ம் இராஜசிங்கன் (டிகிரி பண்டார)
1594	தந்துரே	பேரோ லோபேஸ் டி சூசா	1ம் விமலதர்மசூரியன் (கொணப்பு பண்டார)
1602	பலன	தொன் ஜெரனிமோ டி அசிவிடோ	1ம் விமலதர்மசூரியன்
1630	ரந்தெனிவெல	கொன்ஸ்தாந்தின் டி சா	2ம் இராஜசிங்கன்
1638	கண்ணொருவ	தியேகு த மெலோ கஸ்ரோ	2ம் இராஜசிங்கன்

போர்த்துக்கேயர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற முடியாமற் போனமைக்குரிய காரணங்கள்

- கண்டி மக்கள் அரசனுக்கு விசுவாசமாக இருந்தமை
- கண்டிப் படையின் கெரில்லா தாக்குதல்
- கண்டி இராச்சியத்தின் புவியியல் அமைப்புப் பற்றி போர்த்துக்கேயர் அறிந்திராமை
- லஸ்கரின் படையினர் சிங்களப் படையுடன் இணைந்தமை
- கண்டி இராச்சியத்தின் இயற்கையான பாதுகாப்பு

ஆண்டு	முக்கிய வரலாற்று நிகழ்வுகள்
1505	போர்த்துக்கேயரின் இலங்கை வருகை
1521	விஜயபாகு கொலை
1538	றைகம, சீதாவாக்கையுடன் இணைக்கப்பட்டமை
1543	தர்மபாலனின் சிலைக்கு லிஸ்பன் நகரில் முடிசூட்டு விழா இடம்பெற்றமை
1557	தர்மபாலன் கத்தோலிக்க சமயத்திற்கு மாறியமை
1580	தர்மபாலன் மரணசாசனப் பத்திரத்தை (உயில்) எழுதி வழங்கியமை
1582	முதலாம் இராஜசிங்கன் கண்டியைக் கைப்பற்றியமை
1597	மல்வானை உடன்படிக்கை மூலம் கோட்டை இராச்சியம் போர்த்துக்கேயர் வசமானது

S. JEEVITHAN www.ikeduk

இலங்கையும் ஒல்லாந்தரும்

ஒல்லாந்தர் - அறிமுகம்

- தாய் நாடு :- ஒல்லாந்து
- வர்த்தக அமைப்பு :- ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தக சங்கம் (VOC) – 1602
- கீழைத்தேச மத்திய நிலையம்:- பத்தேவியா (ஜாவாத்தீவு)

இலங்கைக்கு வருகை தந்த ஒல்லாந்தர்

- முதலாவது ஒல்லாந்தர் :- ஸ்பில்பேர்ஜன்
- வருகை தந்த ஆண்டு :- 1602
- வந்திறங்கிய இடம் :- மட்டக்களப்பு
- தொடர்பு கொண்ட கண்டி அரசன் :- முதலாம் விமலதர்மசூரியன்
- முதலில் கைப்பற்றிய கோட்டை :- மட்டக்களப்பு
- கண்டி அரசர்களுடன் மேற்கொண்ட உடன்படிக்கைகள் :- 1638 வெஸ்ரவோல்ட் உடன்படிக்கை (இரண்டாம் இராஜசிங்கன்)
  :- 1766 வில்லியம்பல்க் உடன்படிக்கை (கீர்த்திஸ்ரீராஜசிங்கன்)

1638 ஆம் ஆண்டு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள்

- போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு கண்டி அரசனுக்கு உதவிட ஒல்லாந்தர் இணங்குதல்
- ஒல்லாந்தருக்கு ஏற்படும் செலவை பணம் மற்றும் கறுவா, மிளகு, தேன் மெழுகு என்பவற்றின் மூலம் செலுத்த அரசன் உடன்படல்
- யானை தவிர்ந்த ஏனைய பொருட்களைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பான ஏகபோக உரிமை ஒல்லாந்தருக்குக் கிடைத்தல்
- போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய கோட்டைகளில் **'அரசன் விரும்பினால் மட்டும்'** ஒல்லாந்தப் படை தங்கியிருக்கலாம்

இரண்டாம் இராஜசிங்கன் ஒல்லாந்தரை வரவழைத்ததன் நோக்கங்கள்

- ஒல்லாந்தரின் உதவியுடன் போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேற்றல்
- போர்த்துக்கேயரின் கீழிருந்த பிரதேசங்களைக் கண்டி இராச்சியத்துடன் இணைத்து சுதந்திர இலங்கையைத் தோற்றுவித்தல்

கண்டி இராச்சியம் தொடர்பில் ஒல்லாந்தரின் குறிக்கோள்கள்

- கண்டி அரசர்களுடன் சமாதானமாகச் செயற்படல்
- கண்டி அரசனுக்குப் பரிசுப் பொருட்களை வழங்கல்
- கண்டி அரசனுடன் கடிதத் தொடர்பை ஏற்படுத்தல்
- உபசம்பதா சடங்கின் பொருட்டு அரசனுக்கு கப்பல்களைக் கொடுத்து உதவல்

வர்த்தகத்தின் மூலம் உச்ச இலாபம் பெறும் பொருட்டு ஒல்லாந்தர் மேற்கொண்ட நடவடிக்கைகள்

- கண்டி மன்னனின் வெளிநாட்டவருடனான வர்த்தகத் தொடர்பை கூடியளவு தடை செய்தமை
- மன்னனுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படும் போது எல்லைக் கடவைகளை மூடி விடுதல்
- நெற் பயிர்ச்செய்கையை முன்னேற்ற நடவடிக்கை எடுத்தமை
- கறுவாவைப் பயிரிடவும், பாதுகாக்கவும் நடவடிக்கை எடுத்தமை
- கரும்பு, கோப்பி, பருத்தி என்பவற்றைப் பயிரிட்டமை

www.tgedu.lk

கண்டி இராச்சியத்திற்கும் ஒல்லாந்தருக்கும் இடையிலான மோதல்கள்

- ஒல்லாந்தர் ஆட்சியால் துன்புற்ற கரையோர மக்கள் தமக்கு உதவும் படி கீர்த்திஸ்ரீஇராஜசிங்கனை வேண்டியமை
- 1760 இல் நீர்கொழும்பு, மாத்தறைப் பிரதேசங்களில் ஒல்லாந்தருக்கெதிராகக் கலகங்கள் ஏற்பட்டமை
- கண்டி மன்னன், கலகொட என்ற அதிகாரத்தின் கீழ் படையொன்றை அனுப்பி திடீர் தாக்குதலை மேற்கொண்டு கட்டுவன மற்றும் மாத்தறைக் கோட்டை உட்பட சில இடங்களைக் கைப்பற்றியமை. பின் அவ்விடங்களை ஒல்லாந்தர் மீட்டமை
- 1764 இல் ஒல்லாந்த ஆளுநர் **பெரன் வென் எக்** என்பவன் 6 படைப்பிரிவுகளின் மூலம் கண்டி மீது படையெடுத்து தோல்வியடைந்தமை
- 1765 இல் மீணடும் கண்டி மீது படையெடுத்தமை

1766உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள்


- ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ் மாத்தறை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களும் கற்பிட்டி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய துறைமுகங்களும் இருத்தலை கண்டி மன்னன் அங்கீகரிக்க வேண்டும்
- கண்டி மக்கள் கிழக்கு, மேற்குக் கரையோரங்களின் உப்பளங்களுக்குச் செல்லும் உரிமை வழங்கப்பட வேண்டும்
- கடற்கரையிலிருந்து 4 மைல் (6 KM) அகலப் பிரதேசம் ஒல்லாந்தருக்குச் சொந்தமானது
- கடற்கரைப் பிரதேசங்களை ஒல்லாந்தருக்கு ஒப்படைத்ததன் மூலம் ஏற்பட்ட நட்டத்தை ஒல்லாந்தர் வருடாந்தம் வழங்க வேண்டும்
- ஒல்லாந்தர் கண்டியுடன் வர்த்தகம் செய்வதற்கு தனியுரிமையும், கறுவா சேகரிப்பதற்கும், அரிமரம் வெட்டவும் உரிமை அளிக்கப்பட வேண்டும்

1766உடன்படிக்கையின் விளைவுகள்

- ✓ கண்டி இராச்சியம் கரையோரப் பகுதியை இழந்தது
- ✓ ஒல்லாந்தரின் அதிகாரம் வளர்ச்சியடைந்தது
- ✓ ஒல்லாந்தரை விரட்ட வேண்டும் என்பது அரசனுக்கும், பிரதானிகளுக்கும் தெளிவானது
- ✓ பிரதானிகளுக்கும் வர்த்தகத்தின் மூலம் கிடைத்த இலாபம் இல்லாமற் போனது

போர்த்துக்கேயர் ஆட்சியின் விளைவுகள்

- கத்தோலிக்க மதம் பரவியது
- தோம்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டது
- திருமணப் பதிவு முறை அறிமுகமாகியது
- பரிஸ் பாடசாலைகள் அமைக்கப்பட்டன
- மடங்கள் அமைக்கப்பட்டன
- பைலா, கபிரிஞ்ஞா போன்ற இசைகள் அறிமுகமாகின
- போர்த்துக்கேய சொற்கள் தமிழிலும், சிங்களத்திலும் கலந்தன



ஒல்லாந்தர் ஆட்சியின் விளைவுகள்

- புரட்டஸ்தாந்து மதம் அறிமுகமானது
- உரோம டச்சுச் சட்டம் அறிமுகமானது
- நீதிமன்ற முறை அறிமுகமானது
- **'பறங்கியர்'** என்ற இனம் தோற்றம் பெற்றது
- மேல் நாட்டுக் கல்வி முறை ஆரம்பிக்கப்பட்டது
- நவீன அச்சுக் கலை அறிமுகமானது
- ஒல்லாந்தக் கட்டிடக்கலை முறை அறிமுகமானது
- கறுவாத் தோட்டம் ஆரம்பிக்கப்பட்டது

S.JEGATHEESWARAN www.ikeu.lk

அநுராதபுர கால முக்கிய அரசர்கள்

பண்டுகாபயன் (கி.மு 377 – 307)

- பிராந்திய ஆட்சியாளர்கள் பலருடன் சண்டையிட்டு அப்பிரதேசங்களை கைப்பற்றி ஒரு நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தமை
- முறையான ஆட்சியை நிறுவிய முதல் மன்னன்
- இந்நாட்டை ஆண்ட முதல் மன்னன்
- தனது ஆட்சியின் மத்திய நிலையமாக அநுராதபுரத்தைத் தெரிவு செய்தமை
- முதற்தடவையாக நகர நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொண்டமை
- கிராமங்களுக்கு எல்லைகளை வகுத்தமை
- இலங்கை வரலாற்றில் குறிப்பிடப்படும் முதலாவது குளமான அபயவாவியை (பசவக்குளம்) அமைத்தமை. மேலும் காமினி வாவி, ஜயவாவி போன்றவற்றையும் அமைத்தமை
- முதன்முறையாக வைத்தியசாலைகளை அமைத்தமை
- நகரங்களை நிர்வகிக்க நகரகுத்திகன் என்ற அலுவலரை நியமித்தமை
- பண்புள்ள சீரான சமூகத்தை கட்டியெழுப்பும் வகையில் ஆலயங்களை அமைத்தமை
- 70 வருடங்கள் சிறப்பாக நாட்டை ஆட்சி செய்தமை

தேவநம்பியதீசன் (கி.மு 274 – 247)

- இலங்கையில் பௌத்த மதம் அறிமுகப்படுத்தப்பட்டமை
- இலங்கை- இந்திய தொடர்பு வளர்ச்சியடைந்தமை
- முடி சூடும் மரபு ஏற்பட்டமை
- பொருளாதார விருத்தி கருதி திசா வாவி, வலஸ்வாவி போன்றவற்றை அமைத்தமை
- மௌரியக் கட்டடக்கலையை அறிமுகம் செய்தமை
- இலங்கையின் முதலாவது தாதுகோபமான தூபராமவை அமைத்தமை
- சகல பிரதேசத் தலைவர்களிடையே நல்லுறவை வளர்க்கும் தேவையை உணர்ந்து செயற்பட்டமை

துட்டகைமுனு (காமினி அபய) (கி.மு 161- 137)

அரசியல் பணிகள்

- இலங்கைத் தீவை ஒன்றுபடுத்திய முதல் அரசன்
- பரவலாக்கப்பட்ட அதிகாரத்தை அனுபவித்து வந்த பருமகமாரை மத்தியமயமாக்கப்பட்ட அதிகாரத்திற்கு இணைத்துக் கொள்வதன் மூலம் ஏக அரச நிர்வாகத்தை ஏற்படுத்தியமை
- பல்லுகனுடைய தலைமையில் இந்தியாவிலிருந்து வந்த படையுடன் போரிட்டு வெற்றி கொண்டமை
- மாந்தை துறைமுகத்தை எல்லாளனிடமிருந்து மீட்டமை
- இந்நாட்டு வரலாற்றில் முதலாவது முறையான யுத்த செயற்பாட்டிற்கு தலைமைத்துவத்தை வழங்கியமை
- நாட்டிற்கான பொதுக் கொள்கைகளை முன்வைத்து அரசியல் செயற்பாட்டை மேற்கொண்டமை

பொருளாதாரப் பணிகள்

- மக்களின் நலநோன்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டமை
- கொத்மலையில் தங்கியிருந்த காலத்தில் பயிர் செய்து உயர் விளைச்சலைப் பெற்றமை
- தம்பி தீசனை திகாமடுல்ல பிரதேசத்திற்கு அனுப்பி அபிவிருத்தி செய்தமை
- மகியங்கணையிலுள்ள சொரபொரவாவியை அமைத்தமை
- உள்நாட்டு வியாபாரத்தை மேம்படுத்த ஆதரவு வழங்கியமை
- கைத்தொழிலில் தேர்ச்சி பெற்ற வல்லுனர்கள் காணப்பட்டமை

S.JESINTHAN www.ikesu.lk

பௌத்த மதப்பணிகள்

- 89 சமயக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டமை
  (ருவான்வெலிசாய, லோகமகாபாய, மிரிசுவெட்டிய)
- வெசாக் விழாவை இலங்கையில் அறிமுகப்படுத்தியமை
- மகியங்கணைத் தூபியை புணரமைத்தமை
- மகாவிகாரைக்கு அணுசரணை வழங்கியமை

வலகம்பா (வட்டகாமினி அபய / பித்தரஜ) (கி.மு 89- 77)

- மகாரத்தக என்ற சேனாதிபதியைத் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றினான்
- உருகுணை இராச்சியத்தின் நகுல கிராமத்தில் தீய என்ற பிராமணனால் ஏற்படுத்தப்பட்ட கிளர்ச்சியை அடக்கினான்
- இவனது காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து வந்த 7 தமிழர் படையெடுப்பை மேற்கொண்டு அநுராதபுரத்தை கைப்பற்றினர். 14 வருடங்களின் பின் அநுராதபுரத்தை மீட்டமை
- இவனது காலத்திலேயே திரிபிடகம் நூல் வடிவம் பெற்றது
- பௌத்த சமயத்தில் முதன்முறையாக பிரிவு ஏற்பட்டமை
- அபயகிரி விகாரையை அமைத்தமை
- பிக்குமார்களுக்கு கற்குகைகளை தானமாக வழங்கியமை
- சோமாவதி என்ற தாதுகோபத்தை அமைத்து பிக்குமாருக்கு வழங்கினான்

வசபன் (கி.பி 65 – 109)

- இலம்பகர்ண வம்சத்தின் முதல் ஆட்சியாளன்
- இவனது ஆட்சி இலங்கை முழுவதிலும் பரவியிருந்தமைக்கு கல்வெட்டுக்கள் சான்றுகளாக அமைகின்றன
  வடக்கில் :- யாழ்ப்பாணம்
  தெற்கில் :- சிதுல்பவ்வ, திஸ்ஸமகாராம
  கிழக்கில் :- மட்டக்களப்பு
  மேற்கில் :- குருநாகல்
- நாட்டை நிர்வாக அலகுகளாக பிரித்து ஆட்சி செய்தமை
  யாழ்ப்பாணம் - ரிஷிகிரி
- அரச வரி அறவீடு முறைப்படுத்தப்பட்டமை
- முதன்முதலாக நாட்டில் பாரிய குளங்களை அமைத்தமை (மகாவிலாச்சிய, மானாகட்டிய)
- புராதன காலத்தில் அமைக்கப்பட்ட பிரமாண்டமான கால்வாயாக கருதப்படும் எலஹர (ஆளிசாரா) கால்வாயை அமைத்தான்
- தூபராம தூபிக்கு வட்டதாமனையையும் இசுறுமுனிய விகாரையில் போயாமனையையும் அமைத்து பிக்குமாருக்கு வழங்கினான்
- திஸ்ஸமகாராமையில் உள்ள சிதுல்பவ்வ விகாரைக்கு தூபியை அமைப்பித்தான்
- பல விகாரைகளைப் புணரமைத்தான்
- யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பியங்குதிஸ்ஸ என்ற விகாரையை அமைத்ததாக வல்லிபுரம் பொற்சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது
- நகரில் ஆங்காங்கே பொய்கைகளை அமைத்து வாவிகளிலிருந்து அவற்றிற்கு நீர் பாய்ந்து செல்வதற்கான திட்டங்களை மேற்கொண்டு அவற்றில் அன்னங்களை வளர்க்கும்படி அறிவுரை வழங்கினான்

SRISINTHAN
www.lkeou.lk

மகாசேனன் (கி.பி 276 – 303)

- சங்கமித்திர என்ற பிக்குவின் ஆதிக்கத்தினால் மகாயான பௌத்தத்தை பரப்ப அணுசரணை வழங்கியமை
- மகாவிகாரை எல்லையினுள் ஜேதவனராமய என்ற விகாரையை அமைத்து சாகலிக என்ற சமயப்பிரிவினருக்கு கையளித்தமை
- பல விகாரைகளை அமைத்தமை (ஜேதவனராமய, மின்னேரியா விகாரை, கோகண்ண விகாரை)
- பிக்குகளுக்கு காவியுடை வழங்கியமை
- விவசாய விருத்தி கருதி பல குளங்களை அமைத்தமை (மின்னேரியாக்குளம் ,குருளு வாவி)
- பப்பதன்ன என்ற கால்வாயை அமைத்தமை

தாதுசேனன் (கி.பி 455 – 473)

- தென்னிந்திய ஆட்சியாளர்களைத் தோற்கடித்து இராசரட்டையை மீட்டமை
- மௌரிய அரச வம்சத்தைச் சேர்ந்தவன்
- விவசாய விருத்தி கருதி பல குளங்களை அமைத்தான்
  கலா வாவி, யோத வாவி, பலலு வாவி, மானாமடு வாவி
- பிரமிக்கத்தக்க நீர்ப்பாசனத் தொழிநுட்பம் கொண்ட யோத எல கால்வாயை அமைத்தான்
- பிக்குமாரின் தானசாலையான அநுராதபுர மகாபாலி தானசாலையைப் புணரமைத்தான்
- அவுக்கண புத்தர் சிலையை அமைத்தான்

முதலாம் காசியப்பன் (கி.பி 477 – 495)

- தந்தையைக் (தாதுசேனன்) கொன்று ஆட்சியைக் கைப்பற்றியவன்
- மிகார என்ற சேனாதிபதியின் ஆலோசனைப்படி செயற்பட்டான்
- முகலனுக்குப் பயந்து தனது ஆட்சியின் மத்திய நிலையமாக அநுராதபுரத்திலிருந்து சற்றுத் தூரத்திலமைந்த சீகிரியாக் குன்றைத் தெரிவு செய்தான்
- சிகிரியாக் கோட்டையை அமைத்து குன்றின் உச்சியில் அரசமாளிகை மற்றும் கட்டடங்கள் என்பவற்றை நிர்மாணித்தான்
- இவனது முக்கிய கலையம்சங்களாக அரசசபை மண்டபம் , நீர்ப்பூங்கா, சுவர் ஓவியம் , கண்ணாடிச்சுவர் என்பவற்றைக் குறிப்பிடலாம்

S.JESINTHAN
www.lkedu.lk

பொலநறுவைக் கால முக்கிய அரசர்கள்

முதலாம் விஜயபாகு (கி.பி 1055 – 1110)

அரசியல் பணிகள்

- புத்தராஜனின் உதவியுடன் கேசதாது காசியப்பனைத் தோற்கடித்து கி.பி 1055ல் கதிர்காமத்தை நிர்வாக மையமாகக் கொண்டு 1ம் விஜயபாகு என்ற பெயருடன் உருகுணையின் ஆட்சியாளனானான்
- கி.பி 1017 -1070 வரை நிலவிய சோழர் ஆட்சியிலிருந்து பொலநறுவையைக் கைப்பற்றியமை
- முழு இலங்கையையும் ஒன்றுபடுத்தி ஆண்டமை
- பொலநறுவை யுகத்தின் முதலாவது சிங்கள அரசன்
- ஏப்பா, மாப்பா பதவிகள் ஏற்படுத்தப்பட்டு பாரம்பரிய முறையிலான நிர்வாகம் மீண்டும் உருவாக்கப்பட்டமை
- பொலநறுவைக்கு விஜயராஜபுரம் எனப் பெயரிட்டு இராச்சியத்தை அமைத்தான்

பொருளாதாரப் பணிகள்

- பல குளங்கள் புணரமைக்கப்பட்டமை (மகாகல்கடவல, மகாகணதராவ, நாச்சதுவ வாவி)
- எலஹரக் கால்வாயைப் புணரமைத்து மின்னேரியா, கவுடுலு, கந்தளாய் போன்ற நீர்ப்பாசனக் கட்டமைப்புக்களை பழைய நிலைக்கு கொண்டு வந்தான்
- பர்மாவுடன் தொடர்புகளைப் பேணியதால் பர்மிய மன்னன் கப்பல் நிறைய வியாபாரப் பொருட்களை அனுப்பினான்

பௌத்தமதப் பணிகள்

- பர்மாவிலிருந்து பிக்குகளை வரவழைத்து உபசம்பதா சடங்கை நடத்தியமை
- பொலநறுவையில் மூன்றடுக்கு தலதாமாளிகையை அமைத்தமை
- சிவனொளிபாதமலைக்குச் செல்லும் பாதையைச் சீரமைத்து சிவனொளிபாதமலைக்கு கிராமங்களை வழங்கியமை
- அநுராதபுரத்திலும், உருகுணையிலும் விகாரைகளைப் புணரமைத்தமை

வெளிநாட்டுத் தொடர்புகள்

- கலிங்க தேசத்துடனும் பாண்டிய தேசத்துடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டான்
- திரிலோகசுந்தரி என்ற கலிங்க இளவரசியை திருமணம் செய்து கொண்டான்
- தனது சகோதரியான மித்தா இளவரசியை பாண்டிய இளவரசனுக்கு திருமணம் செய்து கொடுத்தான்
- தூதர்களை அனுப்பி பரிசுப்பண்டங்களை வழங்கி மேலை சாளுக்கிய அரச வம்சத்துடன் நட்புறவை வளர்த்தான்

S JESINTHAN www.ikeju.lk

முதலாம் பராக்கிரமபாகு (கி.பி 1153 – 1186)

அரசியல் பணிகள்

- குருநாகல் மாவட்டத்தில் ஹெட்டிப்பொலவுக்கு அருகில் இருந்த பண்டுவஸ்நுவர(பராக்கிரமபுர) என்ற இடத்தை ஆட்சி மையமாக தெரிவு செய்தமை
- 2ம் கஜபாகு மன்னனை தோற்கடித்து பொலநறுவையைக் கைப்பற்றியமை
- உருகுணை ஆட்சியாளனான 2ம் மானாபரணனையும் அவனது தாய் சுகலாதேவியையும் தோற்கடித்து புனித தந்த தாதுக்களையும் பாத்திர தாதுக்களையும் பெற்று 1153ல் முழுநாட்டிற்குமான அரசனானான்
- 50 வருட காலமாக பல பிரிவுகளாக காணப்பட்ட இராச்சியங்களை ஒன்றுபடுத்தி மீண்டும் மத்திய ஆட்சி ஒன்றின் கீழ் கொண்டு வந்தமை
- நாட்டின் எல்லைப் பகுதிகள் பலப்படுத்தப்பட்டதுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வீரர்களைக் கொண்ட படை உருவாக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டமை
- உயர் பதவிகளுக்கு தகுதியின் அடிப்படையிலேயே அதிகாரிகள் நியமிக்கப்பட்டமை

பொருளாதாரப் பணிகள்

- வானிலிருந்து விழும் ஒரு துளி நீரையேனும் விவசாயத்திற்கு பயன்படுத்தாது வீணே கடலை சென்றடையக் கூடாது என்ற நோக்கில் குளங்களையும் அணைக்கட்டுக்களையும் அமைத்தான்
- தெதுறு ஓயாவிற்கு குறுக்காக அணைக்கட்டுகளை அமைத்து கால்வாய்களுக்கு ஊடாக விவசாயத்திற்கு நீர் வழங்கியமை
- பஸ்துன்கோறளைப் பிரதேசத்தில் சதுப்பு நிலங்களிலிருந்து நீரை அகற்றி அவற்றை சாகுபடி நிலங்களாக மாற்றியமைத்தமை
- உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகத்தை விருத்தி செய்தமை (சிலாபம் , கற்பிட்டி மற்றும் கொழும்பு துறைமுகங்களை விருத்தி செய்தமை)
- தோப்பா வாவி, தும்புலு வாவி, எலமுது வாவி போன்ற குளங்களை இணைத்து பராக்கிரம சமுத்திரத்தை அமைத்தமை
- அம்பன்கங்கை நதிக்கு ஊடாக அங்கமடில்ல என்ற இடத்தில் ஓர் அணையைக்கட்டி ஆகாச கங்கைக்கு ஊடாக பராக்கிரம சமுத்திரத்திற்கு நீரை எடுத்து வந்தமை
- தக்கிண தேசத்தில் பல குளங்களை புணரமைத்தமை
- பண்டுவஸ்நுவரவுக்கு அருகில் இருந்த ஒரு குளத்தை விரிவாக்கி அதற்கு பண்டுவாவி எனப் பெயரிட்டமை
- எலஹரக் கால்வாய் விரிவாக்கப்பட்டு அதன் மூலம் மின்னேரியாக் குளத்துக்கு நீர் திசை திருப்பப்பட்டமை

பௌத்தமதப் பணிகள்

- பிளவுபட்டிருந்த பௌத்த பிக்குகளை ஒன்றுபடுத்தினான்
- திம்புலாகல காசியப்ப தேரரின் தலைமையில் பிக்குகளிற்கான ஒழுக்கநெறிக் கோவையை தயாரித்து கல்வெட்டாக பொறித்தமை
- பொத்குல் விகாரை, உத்தராராமய, லங்காதிலக சிலைமனை, கல்விகாரை, கிரி விகாரை, தெமழமகாசாய போன்றவற்றை அமைத்தமை
- அரசமாளிகை, அரசசபை மண்டபம், ஆலாஹன பிரிவெனா, தாமரைத் தடாகம் போன்றவற்றை அமைத்தமை

வெளிநாட்டுத் தொடர்புகள்

- பர்மிய மன்னன் அலவுங்சிது மீதான படையெடுப்பு
  வர்த்தகத் தூதுக் குழுவை துன்புறுத்தியமை, கம்போடியாவிற்கு சென்ற இளவரசியை துன்புறுத்தியமை
- பாண்டிய படையெடுப்பு
  பராக்கிரம பாண்டியன் அரசுரிமை பெறும் பொருட்டு படையுதவி வழங்கியமை

e-JESUTHAN
www.lkedu.lk

நிஸங்கமல்லன் (கி.பி 1187 – 1197)

- ஒன்பது ஆண்டுகள் முழுநாட்டையும் ஆட்சி செய்தமை
- பௌத்தர்களுக்கே அரசுரிமை எனும் பாரம்பரியத்தை நிலைநாட்டியமை
- அதிகளவு கல்வெட்டுக்களைப் பொறித்தமை (கல்பொத்த கல்வெட்டு)
- உருகுணு, மாயா, பிகிட்டி போன்ற பிரதேசங்களுக்கு அடிக்கடி விஜயம் செய்தமை
- பாண்டி நாட்டின் மீதும் சோழ நாட்டின் மீதும் படையெடுத்தமை
- நாட்டு மக்களை வரிச்சுமையிலிருந்து விடுவித்தான்
- பாண்டி விஜய குளம் (கல்மடியான குளம்) என்ற குளத்தை அமைத்தமை
- துலாபாரக் கொடையை வழங்கியமை
- மூன்று மதப்பிரிவினரையும் ஒன்றுபடுத்தினான்
- மகியங்கணை, களனி மற்றும் சிவனொளிபாதமலை ஆகிய புனித ஸ்தலங்களுக்கு யாத்திரை சென்றமை
- ரண்கொத் விகாரை, ஹட்டதாகே, வட்டதாகே, சத்மஹல்பிரசாதய போன்றவற்றை அமைத்தமை
- தம்புள்ள விகாரையை புணரமைத்து அங்குள்ள புத்தர்சிலைகள் மீது தங்கமுலாம் பூசுவித்தான்
- நிஸங்கலதாமண்டபம், அரசமாளிகை, அரசசபைக் கட்டிடம் போன்றவற்றை அமைத்தமை

தம்பதெனியா அரசர்கள்

மூன்றாம் விஜயபாகு

அரசியற் பணிகள்

- மாயரட்டையின் எதிரிகளைத் துரத்தி தம்பதெனியாவைத் தலைநகராக உருவாக்கியமை
- கொத்மலையில் ஒழித்து வைக்கப்பட்டிருந்த புனித தந்த தாதுவைப் பெற்று ஆட்சியுரிமையை உறுதிப்படுதடதியமை
- 1232-1236 வரை மாயரட்டையில் சமாதானம், ஒழுங்கை நிலைநாட்டியமை
- ஆரம்ப காலத்தில் வன்னித்தலைவனாகச் செயற்பட்டமை

பௌத்த சமயப்பணிகள்

- கொத்மலையிலிருந்த புனித தந்ததாதுவைப் பெற்று பெலிகல தலதா மாளிகையை அமைத்து அங்கு அவற்றைப் பிரதிஸ்டை செய்தமை
- களனி விகாரையைப் புணரமைப்புச் செய்தமை
- தம்பதெனியாவில் விஜயசுந்தரராமய என்ற விகாரையைக் கட்டியமை
- உபசம்பதா சடங்கை நடாத்தி புத்தசாசனத்தைத் தூய்மைப்படுத்தியமை
- அழிந்துபோன பௌத்த சமய நூல்களை மீண்டும் எழுதிவித்தமை

இரண்டாம் பராக்கிரமபாகு

அரசியற் பணிகள்

- 1236-1270 வரை தம்பதெனியாவை ஆட்சிபுரிந்தமை
- கலிங்க மாகனை நாட்டிலிருந்து விரட்டியமை
- சந்திரபானுவின் இரண்டு படையெடுப்புக்களையும் முறியடித்தமை

இலக்கியப் பணிகள்

- கல்வியறிவு கொண்ட சிறந்த பண்டிதனாகத் திகழ்ந்தமை
- சிங்கள மொழியில் எழுதப்பட்ட மகாகாவியமான **'கவிசிலுமின'** என்ற நூலை எழுதியமை
- பௌத்த பிக்குகள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிக் கோவையான **'தம்பதெனிய கதிகாவத'** வைத் தயாரித்தமை
- இவனது நாளாந்த செயற்பாடுகள் பற்றிக் குறிப்பிடும் **'கந்தவுரு சிரித்த'** என்ற நூலும் சிறப்பிடம் பெறுகின்றது

S. JEBASTHAN www.lkedu.lk

யாப்பகூவ அரசர்கள்

முதலாம் புவனேகபாகு

- யாப்பகூவ அரசின் முதல் மன்னன்
- சதிகாரர்களை முறியடித்து 1272 இல் ஆட்சியைக் கைப்பற்றியமை
- வன்னித் தலைவர்களின் கிளர்ச்சியை அடக்கியமை
- காலிங்கராயர் மற்றும் சோடகங்கன் போன்ற தென்னிந்தியத் தளபதிகளின் படையெடுப்பை முறியடித்தமை
- எகிப்திய சுல்தான்களுடன் வர்த்தகத் தொடர்பை ஏற்படுத்தியமை
- வருடாவருடம் உபசம்பதா சடங்கை நிகழ்த்தியமை
- யாப்பகூவவில் தலதாமாளிகை ஒன்றை அமைத்தமை

குருநாகலை அரசர்கள்

நான்காம் பராக்கிரமபாகு

- குருநாகலையைத் தலைநகரமாகத் தெரிவு செய்தமை
- பௌத்த சமயத்தின் வளர்ச்சிக்கும், கல்வி வளர்ச்சிக்கும் நடவடிக்கை எடுத்தமை
- பாளி மொழியிலிருந்த ஜாதகக் கதைப்புத்தகம் **'பண்சிய பணஸ் ஜாதகய'** என்ற பெயரில் மொழி பெயர்க்க உதவியமை
- **'தலதா சிரித்'** என்ற நூலை எழுதியமை
- குருநாகலையில் தலதா மாளிகை அமைத்து அதன் பராமரிப்புக்கென கிராமங்களைத் தானமாக வழங்கியமை
- கண்டி அஸ்கிரிய பீடத்தை நிறுவியமை

கோட்டை அரசர்கள்

ஆறாம் பராக்கிரமபாகு

- கோட்டை அரசின் முதல் அரசன்
- வன்னிப் பிரதேசத்தை கோட்டை இராச்சியத்தின் கீழ் கொண்டு வந்தமை
- சப்புமல் குமாரனின் தலைமையில் படையனுப்பி யாழ்ப்பாண இராச்சியத்தை வெற்றி கொண்டமை
- மலைநாட்டு ஆட்சியாளனான ஜோதிய என்பவனின் கிளர்ச்சியை அம்புலுகல குமாரன் மூலம் அடக்கியமை
- சிறந்த அறிஞனாகவும், பண்டிதனாகவும் விளங்கியமை
- பிரிவெனாக்களை அமைத்தமை (பெப்பிலியான சுனேத்திராதேவி பிரிவெனா)

S. JESUTHAN www.lkedu.lk



- படத்திலுள்ளவரைப் பெயரிடுக
  குளோடியஸ் தொலமி
- இவரது தாயகம் எது?
  கிரேக்கம்
- இவரால் இலங்கைக்கு வழங்கப்பட்ட பெயர் யாது?
  தப்ரபேன்
- இவரால் எழுதப்பட்ட நூல் எது?
  பூகோளசாஸ்திரப்பிரவேசம்
- இவரது சிறப்பு யாது?
  முதன் முதலில் உலகப்படத்தை வரைந்தமை




- படத்திலுள்ளதைப் பெயரிடுக. **குதிரைத்தலையும் மனிதனும்**
- இது எந்த இராசதானி காலத்துக்குரியது? **அநுராதபுரம்**
- இதனுடன் தொடர்புடைய கலை மரபு எது? **பல்லவர் மரபு**
- இது எவ்விகாரையில் உள்ளது? **இசுருமுனிய விகாரை**
- அவ்விகாரையை அமைத்த மன்னன் யார்? **தேவநம்பியதீசன்**
- இது எக்கலையுடன் தொடர்புடையது? **செதுக்கற்கலை**
- இது எத்தனையாம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது?
  கி.பி 7 அல்லது 8ம் நூற்றாண்டு
- குதிரைத்தலை மற்றும் மனித உருவம் என்பன எவற்றைக் குறிக்கின்றன?
  குதிரைத்தலை :- அக்கினி தெய்வம் , மனித உருவம் :- பர்ஜன் தெய்வம்



- படத்திலுள்ளதைப் பெயரிடுக. **கல்பொத்த கல்வெட்டு**
- இதனை அமைத்த மன்னன் யார்? **நிஸங்கமல்லன்**
- இது எந்த இராசதானி காலத்துக்குரியது? **பொலநறுவை**
- இதன் சிறப்பம்சம் யாது?
  1. **இலங்கையின் மிகப்பெரிய கல்வெட்டு.**
  2. **அதிக தகவல்களைக் கொண்டது.**
  3. **சிங்களவரிவடிவத்தால் பொறிக்கப்பட்டுள்ளது.**
- இதில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்கள் 2 தருக.
  1. **இலங்கையை பௌத்தர் அல்லாத ஒருவர்ஆட்சி செய்யக்கூடாது.**
  2. **கலிங்க வம்சத்திற்கு இலங்கை அரசியலில் உள்ள உரிமை.**
- இதில் காணப்படும் உருவங்கள் இரண்டின் பெயர்களை எழுதுக.
  யானை, அன்னம்.



- படத்திலுள்ளதைப் பெயரிடுக. **பனாகடுவ செப்பு சாசனம்**
- இதனுடன் தொடர்புடைய அரசனைப் பெயரிடுக. **முதலாம் விஜயபாகு**
- இதில் பரிசுகளும், சலுகைகளும் பெற்றவராகக் குறிப்பிடப்படுபவர் யார்? **சித்தாறும்பி புத்தநாயக**
- இது எத்தனையாம் நூற்றாண்டு கால வரலாற்றை அறிய உதவும்?
  கி.பி 11 – 12 ஆம் நூற்றாண்டு
- இதில் அநுராதபுரத்திற்கு வழங்கப்பட்டுள்ள பெயர் யாது? **நுருபுரம்**



- படத்திலுள்ளதைப் பெயரிடுக
  கஹவணு நாணயம்
- இதனை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்பட்ட உலோகம் யாது?
  தங்கம்
- இதனைப் பயன்படுத்திய நாடு எது? **இலங்கை**
- இதன் பயன்பாடு யாது?
  புராதனகால பொருளாதாரமுறை மற்றும் தொழிநுட்ப அறிவு பற்றி அறிந்து கொள்ள உதவுகிறது

S.JEEVITHAN
www.lkedu.lk



- படத்திலுள்ளதைப் பெயரிடுக.
  ஹஸ்ளபு நாணயம்
- இது எந்த நாட்டுக்குரியது? **இந்தியா**
- இவற்றை எமது நாட்டிற்கு கொண்டு வந்தவர்கள் யார்?
  இந்திய வர்த்தகர்கள்
- இதனைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட உலோகம் யாது? **வெள்ளி**
- இதன் சிறப்பம்சம் யாது?
  வட்டம், சதுரம், நேர் பக்கங்களையுடைய வடிவினைக் கொண்ட இந்த நாணயங்களில் பல்வேறு இலச்சினைகள் பொறிக்கப்பட்டுள்ளன



- படத்திலுள்ளதைப் பெயரிடுக.
  பாகியன்கல குகை
- இது எந்தக் காலத்துக்குரிய மனித சமூகத்தின் வாழ்விடமாகத் திகழ்ந்தது? **வரலாற்றுக்கு முற்பட்ட காலம்**
- இது எந்த சுற்றாடல் வலயத்தைச் சேர்ந்தது? **தாழ்நில ஈரவலயம்**
- இது எந்த மாவட்டத்துக்குரியது? **களுத்துறை**
- இதன் முக்கியத்துவம் யாது?
- ✓ **38000 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த மனித சமூகத்தின் வாழ்விடம்**
- ✓ **வெவ்வேறு காலப்பகுதிக்குரிய 9 நபர்களின் எலும்புக்கூடுகளின் பகுதிகள் கிடைக்கப் பெற்றமை**



- படத்திலுள்ளதைப் பெயரிடுக.
  தெடிகம யானை விளக்கு
- இது கண்டெடுக்கப்பட்ட இடம் எது?
  தெடிகம கொட்ட விகாரை (கேகாலை மாவட்டம்)
- இதனைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட உலோகம் யாது? **வெண்கலம்**
- இங்கு பயன்படுத்தப்பட்ட விஞ்ஞான அடிப்படை முறை எவ்வாறு அழைக்கப்படுகிறது?
  அசையா நீர் விஞ்ஞான முறை



- படத்திலுள்ளதைப் பெயரிடுக.
  நிறந்தீட்டப்பட்ட மடக்கு
- இது கண்டெடுக்கப்பட்ட இடம் எது?
  உடரஞ்சாமடம் (இரத்தினபுரி மாவட்டம்)
- இது எந்தக் கைத்தொழிலுடன் தொடர்புடையது?
  மட்பாண்டக் கைத்தொழில்
- இது எந்தக் காலத்துக்குரியது? **முன் வரலாற்றுக்காலம்**
- இதன் சிறப்பம்சம் ஒன்று தருக
- ✓ **முன் வரலாற்றுக்காலத்துக்குரிய மட்பாண்டத்தொழிநுட்பத்தை எடுத்துக்காட்டுகிறது.**
- ✓ **வெள்ளைநிறப் பின்னணியில் சிவப்பு நிறக்கோடுகள் மூலம் வெளிப்புறமும் கீழ்ப்புறமும் அலங்கரிக்கப்பட்டுள்ளது.**



- படத்திலுள்ளதைப் பெயரிடுக.
  மணிமாலை
- இது கண்டெடுக்கப்பட்ட இடம் எது?
  இப்பன்கட்டுவ
- இது எந்தக் காலப்பகுதிக்குரியது?
  கி.மு 700-450 (முன் வரலாற்றுக் காலம்)
- இதன் முக்கியத்துவம் யாது?
  - ✓ **வளர்ச்சியடைந்து வந்த பிரபுத்துவக் குடும்பங்களின் ஆடம்பர வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது.**
  - ✓ **இம்மணிமாலையின் சில பகுதிகள் இறக்குமதி செய்யப்பட்டவை**

SITESINTHA
www.ikeda.lk




- படத்திலுள்ளதைப் பெயரிடுக.
  களிமண் ஓடம்
- இது எதற்காக பயன்படுத்தப்பட்டது?
  மனிதர்களின் அஸ்தியை மட்பாண்டங்களில் இட்டு வைப்பதற்காக
- இதனை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்பட்ட பொருள் எது?
  களிமண்
- இது கண்டெடுக்கப்பட்ட இடம் எது? **உடரஞ்சாமடம்**
- இது எக்காலத்திற்குரியது? **முன் வரலாற்றுக் காலம்**



- படத்திலுள்ளதைப் பெயரிடுக.
  கல்லறை மயானம்
- இதன் சிதைவுகள் கண்டெடுக்கப்பட்ட இடம் எது?
  தம்புள்ள இப்பன்கட்டுவ
- இது எந்தக் காலகட்டத்துக்குரியது?
  கி.மு 700-450 (முன் வரலாற்றுக் காலம்)
- இதனைப் பயன்படுத்திய சமூகத்தினர் யார்? **பருமக (பிரபுக்கள்)**
- இதன் மூலம் வெளிப்படுத்தப்படுவது யாது? **புராதன கால மரணச் சடங்கு முறை**



- படத்திலுள்ளதைப் பெயரிடுக.
  இரும்புச்சூளை அல்லது இரும்பு உலை
- இது எங்கு கண்டெடுக்கப்பட்டது?
  சப்ரகமுவ மாகாணத்தின் பலாங்கொட சமனலவெவ பிரதேசம்
- இது எந்தக் கைத்தொழிலுடன் தொடர்புடையது?
  இரும்புக் கைத்தொழில்
- இங்கு எரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட பொருள் யாது?
  மரங் என்ற கரி அல்லது யகடமரங் கரி
- இதனை இயக்குவதற்கான சக்தி எவ்வாறு பெறப்பட்டது?
  இயற்கையான காற்று
- இப்படத்தின் மூலம் எடுத்துக்காட்டப்படும் விடயம் யாது?
  புராதன இலங்கையின் இரும்பைப் பிரித்தெடுக்கும் தொழிநுட்பம்



- படத்திலுள்ளதைப் பெயரிடுக. **புராதன கற்பாலம்**
- இதனை அமைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட பொருள் யாது? **கருங்கல்**
- இதன் ஊடாக பாயும் நதி எது? **மல்வத்து ஓயா**
- இதன் மூலம் வெளிப்படுத்தப்படும் விடயம் யாது?
  புராதன கால பாலம் கட்டும் தொழிநுட்பம்
- இது எதற்காக அமைக்கப்பட்டது? **நதி ஊடாக பயணம் செய்வதற்கு**



- படத்திலுள்ளதைப் பெயரிடுக
  சிகிரியா ஓவியம் (அப்சரஸ்களின் உருவங்கள்)
- இது எந்த இராசதானி காலத்துக்குரியது? **சிகிரியா**
- இக் காலத்தில் மன்னனாக இருந்தவன் யார்? **1ஆம் காசியப்பன்**
- இவை எத்தனையாம் நூற்றாண்டின் கலையம்சத்தைக் காட்டுகின்றன?
  கி.பி 5ம் நூற்றாண்டு
- ஆய்வாளர்களின் கணிப்பில் இங்கு பிரதிபலிக்கப்படும் இயற்கை அம்சங்கள் எவை?
  மின்னலையும் முகிலையும்
- இது எந்த கலை மரபை ஒத்தது? **அஜந்தா கலை மரபு**

S. JEGANTHAN www.ikeet.lk

❖ படத்திலுள்ள கருவியைப் பெயரிடுக
உலோகக் கத்தரிக்கோல்



❖ இக் கருவி எங்கு கண்டெடுக்கப்பட்டது?
பொலநறுவை ஆலாஹன பிரிவெனா
❖ இது எத்தேவைக்குப் பயன்படுத்தப்பட்டது? **சத்திரசிகிச்சைக்கு**
❖ இது எந்தத்துறையுடன் தொடர்புடையது? **வைத்தியத்துறை**
❖ இது எந்த இராசதானியுடன் தொடர்புடையது? **பொலநறுவை**
❖ இதனைப் பயன்படுத்திய மன்னன் யார்? **முதலாம் பராக்கிரமபாகு**

❖ படத்திலுள்ளதைப் பெயரிடுக
களிமண் முத்திரை



❖ இது எங்கு கண்டெடுக்கப்பட்டது? **திஸ்ஸமகாராம**
❖ இவை யாரால் பயன்படுத்தப்பட்டது? **அரச அதிகாரிகள்**
❖ இது எப் பொருளால் ஆக்கப்பட்டது? **களிமண்**

❖ படத்திலுள்ளதைப் பெயரிடுக
களிமண் முத்திரை



❖ இது எங்கு கண்டெடுக்கப்பட்டது? **மாகம**
❖ இதனைப் பயன்படுத்திய ஆட்சியாளர்கள் யார்?
உருகுணை ஆட்சியாளர்கள்
❖ இங்கு பயன்படுத்தப்பட்ட மூலப்பொருள் எது? **களிமண்**
❖ இதில் காணப்படும் சிறப்பம்சம் யாது?
உருகுணை ஆட்சியாளர்களினால் உபயோகிக்கப்பட்ட குறியீகள் பலவும் இம் முத்திரையில் காணப்படுகின்றமை

❖ படத்திலுள்ளதைப் பெயரிடுக.
2ம் இலக்க சிவன் கோவில்



❖ இது எங்கு காணப்படுகிறது? **பொலநறுவை**
❖ இது எந்தக் காலத்துக்குரியது? **சோழர்**
❖ இது எப் பொருளால் கட்டப்பட்டது? **கருங்கல்**
❖ இதனை அமைத்த மன்னன் யார்? **1ஆம் இராசேந்திரன்**
❖ இது எந்தக் கலை மரபைச் சேர்ந்தது? **சோழர் கலை மரபு**
❖ இது எந்த மதத்துடன் தொடர்புடையது? **இந்து மதம்**

❖ படத்திலுள்ள கட்டிடத்தைப் பெயரிடுக
லங்காதிலக சிலைமனை



❖ இது எந்த இராசதானி காலத்துக்குரியது? **பொலநறுவை**
❖ இதனை அமைத்த மன்னன் யார்? **முதலாம் பராக்கிரமபாகு**
❖ இது எந்தக் கலையுடன் தொடர்புடையது? **கட்டிடக்கலை**
❖ இது எந்தக் கலை மரபுடன் தொடர்புடையது?
தென்கிழக்காசிய கலை மரபு
❖ இது எதற்காக அமைக்கப்பட்டது?
புத்தர்சிலைகளை பாதுகாக்கும் பொருட்டு அமைக்கப்பட்டது

S.JESINTHA www.ikeduk



- படத்திலுள்ள ஓவியத்தைப் பெயரிடுக
  தேவதூதர்கள் இருவரின் ஓவியம்
- இவ் ஓவியத்தை வரைந்தவர் யார்?
  மைக்கல் அஞ்சலோ
- இது எந்தக் காலத்துடன் தொடர்புடையது?
  மறுமலர்ச்சிக் காலம்
- இவ் ஓவியம் எங்கு வரையப்பட்டுள்ளது?
  சிஸ்டைன் தேவாலயம்



- படத்திலுள்ள கருவியைப் பெயரிடுக
  தொலைநோக்கி
- இதனைக் கண்டுபிடித்தவர் யார்?
  கலிலியோகலிலி
- இது எந்தத் துறையுடன் தொடர்புடையது?
  வானியற்துறை
- இது எந்தக் காலத்துடன் தொடர்புடையது?
  மறுமலர்ச்சிக் காலம்
- இக் கருவியின் முக்கியத்துவம் யாது?
- ✓ **சூரியனில் கரும்புள்ளிகள் உள்ளன**
- ✓ **வியாழனிற்கு துணைக்கோள்கள் உள்ளன**



- படத்திலுள்ள அரசனைப் பெயரிடுக.
  இரண்டாம் இராஜசிங்கன்
- இம்மன்னனின் இராசதானி எது?
  கண்டி
- இம்மன்னனுக்கும், ஒல்லாந்தருக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையைப் பெயரிடுக.
  1638 வெஸ்ரர்வோல்ட் உடன்படிக்கை
- இம்மன்னனுடன் தொடர்புடைய கூற்றை எழுதுக.
  "இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கியது போல"
- இம்மன்னன் வெற்றி கொண்ட போர்கள் 2 தருக.
  1630 – ரந்தெனிவெலப் போர் **1638 – கண்ணொருவப் போர்**
- இப்படத்தை வரைந்தவர் யார்?
  றொபேட் நொக்ஸ்



- படத்திலுள்ள ஆட்சியாளர் யார்?
  பாதிகாபய மன்னன்
- இச் சிலை எங்கு காணப்படுகிறது?
  அநுராதபுரத்தில் ருவான்வெலிசாய முற்றத்தில்
- இச் சிலை அங்கு காணப்படுவதற்கான காரணம் யாது?
  ருவான்வெலிசாயவிற்கு காணிக்கை வழங்கியமை
- இவர் எந்த இடத்திலிருந்து கண்ணாடி மணிகளைப் பெற்றார்?
  உரோம்
- இவர் எந்த இராசதானி காலத்துக்குரியவர்?
  அநுராதபுரம்

S. JEBINTHAR www.ikeduk.lk